
தமிழரசு
மலர்:5 1.4.75 இதழ்:19
திருச்சியிலும் கோவையிலும் புதிய பல்கலைக் கழகங்களை அமைக்கத் தமிழ்நாடு அரசு மத்திய அரசின் அனுமதியை வேண்டியுள்ளது.
மதுரை மாவட்டம் கப்பலூரில் ஸ்கூட்டர் தொழிற்சாலை அமைக்கப்படும்.
செய்தியும் படமும்
இளைஞர் அணியில் இதுவரை 5,407 பேர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது. நடப்பு ஆண்டில் மேலும் 400 ஆண்கள், 250 பெண்கள் வேலைக்கு அமர்த்தப் படுவார்கள்.

# மழைக்கரம் நீட்டுக!



நூற்றாண்டு காலத்தில் இல்லாத
அளவுக்கு மழை பெய்ந்து விட்ட
காரணத்தால், வளமிக்க தமிழ்
நாட்டின் வாழ்க்கை மிதந்து, உணவு
உற்பத்தியும் பாதிக்கப்பட்டு
மாநிலத்தின் பல பகுதிகள்
வேதனைக்கு உள்ளாகியிருப்பதை
அனைவரும் அறிவீர்கள்.

வாழ்க்கைத் துயர் துடைப்புப் பணிகளுக்
காகத் தமிழக அரசு, போர்க்கால
நடவடிக்கை போல காரியங்களை
ஆற்றி வருகிறது.

வெள்ளம் மக்களின் துயரைத்
துடைக்க அரசு அக்கறையுடன்
வழங்கியுள்ள சலுகைகள், அளித்
துள்ள உதவிகள் ஏராளம்! ஏராளம்!

உணவு நெருக்கடி,
வாழ்க்கைத் துயர் போன்றவற்றை
அரசாங்கத்திடம் விட்டுவிடக் கூடாது
என்பது நினைவுகூரத்தக்கது.

தேர்ந்தெடுத்துள்ள இயற்கை
யின் சீற்றத்தை எதிர்த்து,
பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்குப்
பாதுகாப்பளிக்க வாழ்க்கைக்கு
உணவு கொடுத்து அனைவரும்
ஓரணியில் நின்று உதவிடவும்,
ஒத்துழைக்கவும் பணிவன்புடன்
வேண்டுகிறேன்.

இதுவே நான் சட்டப்பேரவையிலாக
விடுத்த வேண்டுகோளுக்கிணங்க,

அமைச்சர்கள் ஒருமடங்கு உதவிய
— தையும்,
தமிழக நாடாளுமன்ற மாநிலங்கள்
அவை உறுப்பினர்கள் ஒரு மடங்கு
— உதவியதையும்,
தமிழக சட்டப்பேரவை, மேலவை உறுப்
பினர்கள் ஒரு மடங்கு உதவியதையும்,
அரசு அலுவலர்கள், ஆசிரியர்கள்,
தொழிலாளர்கள், அன்பர்கள்
[illegible] உதவியதையும்,
அன்பர் நிறுவனங்கள் [illegible]
நிதியையும்,
பெரும் நிறுவனங்கள் [illegible]
[illegible], பெரும் அன்பர்கள் [illegible]
[illegible] நிதியையும்,
[illegible] [illegible] [illegible]
[illegible] [illegible] நிதியையும்,
மற்றும் பொதுமக்கள் [illegible]
சில்லறை நிதியையும்,



வளர்ச்சி நிலையத்துக்குத்
தரவேண்டுமென்று கேட்டுக்
கொள்கிறேன்.

மேலும், தன் காலத்தை
இந்தத் தமிழ் மண்மீது நிற்கும்
வரையில்,

நல்ல மனம் படைத்தவர்களே!
உங்கள் மனக்கரம் நீட்டி
உதவிட அன்புடன் வேண்டு
கிறேன்.

பெருஞ்சித்திரன்
19.3.75

குறிப்பு:
இந்த நிதி "வளர்ச்சி நிலைய
நிதி" என்று குறிக்கப்பெற்று
அரசின் நிதித்துறையினரால்
நிர்வகிக்கப்படும்.

## வறட்சித் துயர் தணிப்புப் பணிகள் மூலம்

# நாளொன்றுக்கு ஆறு லட்சம் பேருக்கு வேலை

சட்டப்பேரவையில் முதல்வர் கலைஞர்

பேரவைத் தலைவர் அவர்களே,

1974-75 ஆம் ஆண்டிற்கான இறுதித் துணை மதிப்பீடுகளை இம் மன்றத்தின் முன் வைக்கிறேன். மானியக்கோரிக்கைகளை விளக்கும் விரிவான அறிக்கை இம்மன்றத்தின் முன் வைக்கப்பட்டுள்ளது. மானியக் கோரிக்கைகளின் மொத்தத் தொகை 108.28 கோடி ரூபாயாகும். இதில் 55.87 கோடி ரூபாய் வருவாய்க் கணக்கிலும், எஞ்சிய தொகை கடன்-மூலதனக் கணக்குகளின் கீழும் அடங்கும். மொத்த மானியக் கோரிக்கைகளில் 107.36 கோடி ரூபாய் அனுமதித்த இனங்களின் கீழும், 92 இலட்சம் ரூபாய் சாட்டிய இனங்களின் கீழும் அமையும். இந்த மானியக் கோரிக்கைகளில் அடங்கியுள்ள முக்கிய செலவினங்கள்பற்றிக் குறிப்பிட விரும்புகிறேன்.

வறட்சித் துயர் தணிப்புக்கு நாம் மேற்கொண்டுள்ள பணிகளுக்காக இந்தத் துணை மதிப்பீடுகளில் மொத்தம் 21.29 கோடி ரூபாய் செலவுக்கு 40 ஆம் மானியத்தில் வகை செய்யப்பட்டுள்ளது. மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மேற்பார்வையின் கீழ் 8.56 கோடி ரூபாய் செலவுக்கும் குடிநீர் வடிகால் நிறுவனத்தின் மூலம் 2 கோடி ரூபாய் செலவுக்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. பல்வேறு வளர்ச்சிப் பணிகளுக்காகச் செய்யப்பட்டுள்ள நிதி ஒதுக்கங்களை, இயன்ற அளவுக்கு வறட்சிப் பகுதிகளில் துயர் தணிப்புப் பணிகளுக்காகச் செலவிட நாம் முடிவு செய்துள்ளதை மன்ற உறுப்பினர்கள் அறிவார்கள். அவ்வாறுசெலவிடும்போது, வறட்சித் துயர் தணிப்புத் தலைப்பின் கீழ் அந்த நிதி ஒதுக்கங்கள் செலவாகக் காட்டப்படும். இதற்காகக் கணக்கு முறையில் அவையின் ஒப்புதலைப் பெறவும் இம் மானியத்தில் வகை செய்யப்பட்டுள்ளது. ஏறத்தாழ ஆறு இலட்சம் பேர்களுக்கு நாளொன்றுக்கு வேலையளிக்கும் வண்ணம் இப் பணிகள் தற்போது முனைப்பாகச் செயல்பட்டு வருகின்றன.

சமுதாயத்தில் எளிய நிலையிலும் நடுத்தர நிலையிலும் உள்ளவர்களுக்குச் சீரான விலைகளில் உணவுப் பொருட்கள் கிடைக்கச் செய்வதற்காக நாம் மேற் கொண்டுள்ள கொள்முதல் முயற்சிகளுக்கெனத் தமிழ்நாடு உணவுப் பொருள் வழங்கு நிறுவனத்திற்கு 15 கோடி ரூபாய் கடனும், நாற்பத்திரண்டு கூட்டுறவு விற்பனைச் சங்கங்களுக்கு மொத்தமாக ஒரு கோடி ரூபாய் கடனும் தருவதற்கு இந்த மதிப்பீடுகளில் 56-ஆவது மானியக் கோரிக்கை வழி செய்கிறது. உணவுப் பொருட்களைக் கொள்முதல் செய்வது, தணிக்கைச் சாவடிகள் அமைப்பதுபோன்ற தொடர்புடைய செலவுகள், மொத்தம் 86 இலட்சம்ரூபாய் 34-ஆவது மானியக் கோரிக்கையில் அடங்கும்.

வறட்சியின் விளைவாக மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில் பயிரிடும் பரப்பு குறைந்ததனால், வரும் பருவத்துக்கு வேண்டிய விதைகளை வேளாண்மைத் துறையினர் விலைக்கு வாங்கி விற்பது மிகவும் அவசியமானதாகும். இதற்கென 1.43 கோடி ரூபாய் செலவுக்கு மன்றத்தின் ஒப்புதலை 20 ஆவது மானியத்தின் மூலம் பெற விழைகிறேன். மத்திய அரசு நமக்கு உரம் ஒதுக்கி வருகின்றது. இந்த ஆண்டு இதற்கான விலை உயர்ந்துள்ளதற்காக 9.49 கோடி ரூபாய் கூடுதல் செலவு ஏற்படும் என மதிப்பிடப்பட்டுள்ளது. இதற்கும் இந்தத் துணை மானியக் கோரிக்கைகளில் வகை செய்யப்பட்டுள்ளது. மத்திய அரசு இதற்கான தகவல்களை அனுப்பியவுடன் மாநிலக் கணக்கு ஆய்வாளர் அரசின் கணக்கில் பற்று வைப்பதற்கு ஏற்ற நிதி ஒதுக்கமாக இது அமையும்.

வறட்சிப்பகுதிகளில் விரைந்து வேலை வாய்ப்பு தருவதற்காக இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள இராமநாதபுரம் கண்மாய், இராஜசிங்கமங்கலம் கண்மாய், திருப்புத்தூர்க் கண்மாய், புதுக்கோட்டை மாவட்டத்திலுள்ள கவிநாடு கண்மாய் ஆகிய நான்கு பெரிய கண்மாய்களைத் தூரெடுத்துச் சீரமைக்கும் பணிகளுக்காக ஒரு கோடி ரூபாயும், குளித்தலை வட்டத்தில் கண்ணூத்து ஓடைத் திட்டத்தை மேற்கொள்வதற்காக 20 இலட்சம் ரூபாயும் செலவிட வகை செய்துள்ளோம்.

சென்னை மாநகரில் தற்போதுள்ள தண்ணீர்த் தட்டுப்பாட்டைச் சமாளிப்பதற்காக உடனடி நடவடிக்கைகள் மேற்கொள்ளும் பொருட்டு, மொத்தம் 85.25 இலட்சம் ரூபாய், கடனாகவும் மானியமாகவும் மாநகராட்சிக்கு வழங்க இத் துணை மதிப்பீடுகளில் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது. வீராணம் திட்டத்திற்குச் சென்னையை நோக்கிப் போடப்பட்டு வரும் குழாய்களைப் பயன்படுத்திக் கொண்டு, பாலாற்றுப் படுகையிலிருந்து கிடைக்கும் நீரைச் சென்னைக்குக் கொண்டு வருவதற்கான இடைக்கால விரைவுத் திட்டம் ஒன்றுக்கு அரசு அண்மையில் அனுமதி வழங்கியது. இதற்கென மொத்தம் 1.12 கோடி ரூபாய், இத் துணை மதிப்பீடுகளில் இடம் பெற்றுள்ளது. இதுவன்றிக் குடிநீர்த் தட்டுப்பாட்டை நீக்கப் பல்வேறு நகராட்சிகளுக்கு மொத்தம் 28.96 இலட்சம் ரூபாய் வழங்குவதற்கான நிதி ஒதுக்கமும் செய்யப்பட்டுள்ளது.

பெருகிவரும் நமது வரவு-

செலவுகளுக்கு ஏற்ப, எதிர்பாராச் செலவு நிதியின் அளவையும் 10 கோடி ரூபாயிலிருந்து 20 கோடி ரூபாயாக உயர்த்த, மன்றத்தின் ஒப்புதல் அண்மையில் பெறப்பட்டது. இதற்கும் இந்த மதிப்பீடுகள் வகை செய்கின்றன.

ஊனமுற்றோர் நல்வாழ்வுத் திட்டத்தின் பகுதியாக,முட்டுக்காட்டில் புதிதாக நிறுவப்பட்டு வரும் தொழிற்சாலைக்கு 14.38 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கமும், கண்ணிழந்தோர் பள்ளிகள் நான்கையும், செவிடர் பள்ளிகள் ஐந்தையும் 4.71 இலட்சம் ரூபாய் செலவில் புதிதாக அமைக்க அடையாள நிதி ஒதுக்கமும், 555 செவிக் கருவிகள் வழங்குவதற்காக 3.04 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கமும், பல்வேறு பயிற்சித் திட்டங்களுக்கான செலவுகளும் இம்மன்றத்தின் ஒப்புதலுக்காக இத் துணை மானியக் கோரிக்கைகளில் இடம் பெற்றுள்ளன.

1975 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 1-ஆம் நாள் முதல் நடைமுறைக்கு வரும் என்று இப்போது அறிவிக்கப்பட்ட அகவிலைப்படி உயர்வுகளுக்கு இந்த ஆண்டு 4.08 கோடி ரூபாய் செலவிட இந்தத் துணை மதிப்பீடுகள் வகை செய்கின்றன. அரசு அலுவலர்களுக்கு வீடுகள் கட்டுவதற்காக 25 இலட்சம் ரூபாய் கூடுதல் கடன் தொகையும், விழா முன் பணங்களுக்காக இரண்டுகோடி ரூபாய் கூடுதல் நிதி ஒதுக்கமும் 56-ஆவது மானியத்தில் இடம் பெற்றுள்ளன.

ஆசிரியர்களுக்குத் தடங்கல் இன்றி ஊதியங்கள் தருவதற்கு உதவும் பொருட்டு, ஊராட்சி ஒன்றியங்களுக்கு முன்னதாக மானியங்களை வழங்குவதற்கு மொத்தம் 3.12 கோடி ரூபாய் 17-ஆவது மானியத்தில் ஒதுக்கியுள்ளோம். உள்ளூர் மேல்வரி ஈட்டு மானியமாக 3.46 கோடி ரூபாய் ஊராட்சி ஒன்றியங்களுக்கு கூடுதலாக அளிப்பதற்கும் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது. மானியத்தில் ஏற்பட்ட மிச்சங்கள் போக மீதித் தொகையான சுமார் 70 இலட்சத்திற்கு 28-ஆவது மானியக் கோரிக்கையில் இதற்கென ஒப்புதல் வேண்டியுள்ளோம்.

1,500-க்கு மேற்பட்ட மக்கள் தொகை கொண்ட கிராமங்களுக்கு இணைப்புச் சாலை அமைக்கும் திட்டத்திற்கு கூடுதலாக 50 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கமும், 1972—ஆம் ஆண்டு வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட சாலைகளைச் செப்பனிட்டு மேம்படுத்துவதில் இந்த ஆண்டுச் செலவான 86 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடும் துணை மதிப்பீடுகளில் அடங்கியுள்ள சாலைகள் பற்றிய பணிகளில் குறிப்பிடத்தக்கவை.

மதுரைப் பல்கலைக் கழகத்திற்கு கூடுதலாக ஒரு இலட்சம் ரூபாய் மானியம் வழங்கவும், வெள்ளிவிழாக் கொண்டாடும் சென்னை தொழில் நுட்பக் கழகத்திற்கு ஆறு இலட்சம் ரூபாய் மானியம் வழங்கவும் வகை செய்யப்பட்டுள்ளது. இரண்டாம் நிலைத் தமிழாசிரியர்கள் பலரை முதல் நிலைத் தமிழாசிரியர்களாக நியமிப்பதற்கு ஏற்றவண்ணம் 23 இலட்சம் ரூபாய் கூடுதல் செலவிற்கும் மன்ற ஒப்புதல் வேண்டப்படுகிறது.

புதிதாக ஐந்து தொழுநோய் கட்டுப்பாட்டுப் பிரிவுகளை அமைக்கவும், மொத்தம் 10 ஆய்வு-மதிப்பிடுதல்- சிகிச்சை (S.E.T.) பிரிவுகளை உருவாக்கவும் 8.48 இலட்சம் ரூபாய் 18-ஆவது மானியத்தில் இடம் பெற்றுள்ளது. குடிசை மாற்றுப் பகுதிகளில் மருத்துவ வசதிகளைச் சென்னை மாநகராட்சி தொடர்ந்து அளித்து வருவதற்காக ஒரு இலட்ச ரூபாய் செலவுக்கு வகை செய்ய அடையாள நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது. அண்ணா நகர், தண்டையார்பேட்டை ஆகிய இடங்களில் புதிதாக அமைக்க இருக்கும் புறநகர் மருத்துவ மனைகளுக்காக மொத்தம் 45 இலட்சம், ரூபாய் செலவிடவும் வகை செய்துள்ளோம். இதுவன்றி, பல்வேறு மருத்துவ மனைகளில் கூடுதலாக அமைக்கப்பட்டு வரும் வசதிகளுக்கும் பணிகளுக்கும் அவையின் ஒப்புதல் கோரப்பட்டுள்ளது.

தந்தை பெரியார் போக்குவரத்து நிறுவனத்துக்கு 35 இலட்சம் ரூபாய் பங்கு மூலதனம் அளிக்கவும், வனத்தோட்ட நிறுவனத்துக்கு 15 இலட்சம் ரூபாய் பங்கு மூலதனம் வழங்கவும், சர்க்கரை ஆலைகள் நிறுவனத்திற்கு 5 இலட்சம் ரூபாய் பங்கு மூலதனம் தருவதற்கும், தமிழ்நாடு உப்பள நிறுவனத்திற்கு 5 இலட்சம் ரூபாய் பங்கு மூலதனம் அளிக்கவும் துணை மதிப்பீடுகளில் வகை செய்துள்ளோம். தமிழ்நாடு கோழி வளர்ப்பு நிறுவனத்துக்கு, முன்னர் கடன் தொகையாக வழங்கப்பட்ட 30 இலட்சம் ரூபாய் அந்நிறுவனத்தின் பங்கு மூலதனமாக மாற்றப்பட்டுள்ளது. அதற்கான அடையாள நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. தற்போது சென்னையிலும் ஆளியாறு நகரிலும் உள்ள பொதுப் பணித் துறைத் தொழிற்கூடங்களை ஒரு புதிய நிறுவன அமைப்பாக மாற்றுவதற்கு அடையாள நிதி ஒதுக்கமும் கோரப்பட்டுள்ளது.

பேருந்துகள் வாங்கும் பொருட்டு பல்லவன் போக்குவரத்து நிறுவனத்துக்கு மத்திய அரசு கடனாக அளித்துள்ள மூன்று கோடி ரூபாயை வழங்குவதற்கும் நாம் நிதி ஒதுக்கம் செய்துள்ளோம். இதுவன்றிப் பல்வேறு போக்குவரத்து நிறுவனங்களுக்குக் கடன்களும், வழிவகை முன்பணங்களுமாக மொத்தம் 3.93 கோடி ரூபாய் அளிக்கவும் மேலும் வகை செய்யப்பட்டுள்ளது.

தமிழ்நாடு கூட்டுறவு வீடு கட்டும் சங்கத்துக்கு ஒருகோடி ரூபாய் வழிவகை முன்பணமாக வழங்கியதற்கும், வீட்டு வசதி வாரியத்துக்கு வழிவகை முன்பணமாக 34 இலட்சம் ரூபாய் வழங்கியதற்கும் 56—ஆவது மானியத்தின் மூலம் மன்றத்தின் ஒப்புதல் கோரப்படுகிறது

துணை மானியக் கோரிக்கையில் சேர்க்கப்பட்டுள்ள முக்கியமான ஒரு சில செலவினங்களை இதுவரை நான் எடுத்துக் கூறியுள்ளேன். மன்றத்தில் அளிக்கப்பட்டுள்ள விரிவான அறிக்கையில் இவை பற்றிய விளக்கங்களையும் பிற செலவினங்கள் பற்றிய விவரங்களையும் காணலாம் என்று கூறி, 1974-75 ஆம் ஆண்டிற்கான இந்த இறுதித் துணை மதிப்பீடுகளை ஏற்று இசைவளிக்குமாறு வேண்டுகிறேன்.

**1975ஆம் ஆண்டு, மார்ச் திங்கள் 22ஆம் நாளன்று தமிழ்நாடு சட்ட மன்றத்தில், 1974-75ஆம் ஆண்டிற்கான இறுதித் துணை மதிப்பீடுகளை வைத்து ஆற்றிய உரை.**



தமிழ்நாடு வறட்சி நிவாரண நிதிக்கு அறநிலையத் துறையின் சார்பில் ரூ. 5,52,351 ரூபாயை முதல்வர் கலைஞர் அவர்களிடம் அறநிலையத்துறை அமைச்சர் கண்ணப்பன் அவர்கள் அளித்தார்கள்.

# அறநிலையத் துறை ஆற்றும் அரும் பணிகள்! — அமைச்சர் கண்ணப்பன்

அறநிலையத் துறையைப் பொறுத்த வரையில் 9,600 ஆக இருந்து கோவில்கள் எண்ணிக்கை புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்ட கோவில்களோடு சேர்ந்து இன்றைக்கு 20,264 கோவில்களை இதுவரையில் நம்முடைய துறையின் ஆட்சிக்குள்ளே கொண்டு வந்து இருக்கிறோம் என்பதையும் அதே போல வருமானம் சுமார் ரூ. 3,99,00,000-க்கு இருந்த வருமானம் ரூ. 11,69,60,000-க்கு மேல் வருமானம் வந்து இருப்பதையும் குறிப்பிட விரும்புகின்றேன். இந்த வருமானத்திற்கு எல்லாம் காரணம் கோவில்களிலே நுழைவுக் கட்டணம் வைத்து இருக்கிறார்கள். நுழைவுக் கட்டணம் பொறுத்த வரையில் கோவிலுக்குள்ளே நுழைந்து செல்லக் கட்டணம் செலுத்த வேண்டும் என்ற முறை ஒரே ஒரு கோவிலில் காஞ்சிபுரத்தில் இருக்கின்றது. ஏகாம்பரேசுவரர் கோயில் உள்ளே நுழைய வேண்டுமென்றால் 10 காசு தரவேண்டுமென்று முறை வைத்து இருக்கிறார்கள். மற்ற கோவில்களில் விசேஷ காலங்களில் அல்லது குறிப்பாக வழிபாடுகள் நடைபெறுகிற நேரத்தில் மட்டும் இந்தக் கட்டணங்கள் வசூலிக்கப்படுகின்றன. இன்னும் பெரிய கோவில்களில், இன்னும் அதிகமாக வருமானம் வருகின்ற கோவில்களில் நெருக்கடியான கோவில்களில் இந்தக் கட்டணங்கள் வசூலிக்கப்படுகின்றன. இந்தக்கோவில்களில் பொது மக்கள் சேவிக்க ஒரு வழியும், சிறப்புக் கட்டணங்கள் செலுத்தி வழிபடுகிறவர்களுக்கு ஒரு வழியும் ஏற்படுத்தி கோவிலுக்கு வருமானம் வரும் கட்டணம் பற்றி, கவலைப்படாதவர்கள் செல்வதற்குத் தனி வழிகள் சௌகரியமாக அமைத்து வசூல் செய்கிறார்கள்.

வடபழனியும் இருக்கின்றது. கருமாரியம்மன் கோவிலும் இருக்கிறது. பொதுமக்கள் நின்று வழிபடும் இடங்களில் நீங்களும் நின்று வழிபாட்டால் கட்டணம் ஏதும் இல்லை. ஒரு குறிப்பிட்ட இடத்திற்கு அப்பால் சென்று வழிபட வேண்டுமென்றால் கட்டணம் செலுத்த வேண்டும். கட்டணம் செலுத்தித்தான் அங்கே போக வேண்டும். இல்லாவிட்டால் மக்கள் கூட்டம் அளவுக்கு மீறிப்போய் கட்டுப்படுத்த முடியாமல் போய்விடும். கூட்டத்தைக் கட்டுப்படுத்துவதற்காகத் தான் அந்த மாதிரி இடங்களில் போய் நின்று வழிபட கட்டணம் வைத்திருக்கிறார்கள்.

காஞ்சிபுரம் ஏகாம்பரேசுவரர் கோயிலில் கட்டாயக் கட்டணம் வசூல் செய்வதாகச் சொன்னார்கள். அந்தக் கட்டணம் வருகின்ற ஏப்ரல் 1-ந் தேதி முதல் நீக்கப்பட்டு, பொதுமக்கள் எல்லாம் கட்டணம் இல்லாமல் உள்ளே போகலாம் என்பதை இந்த நேரத்தில்தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்து அறநிலையத் துறையைப் பொறுத்த வரையில் நிர்வாக அலுவலர்கள் போதுமான அளவுக்குக் கிடையாது; ஏராளமான கோயில்களை அறநிலையைத் துறையின் நிர்வாகத்தின் கீழ் கொண்டு வந்திருக்கிறார்களே தவிர, போதுமான நிர்வாக அலுவலர்கள் இல்லாமல் நிர்வாகம் முடங்கிக் கிடக்கிறது என்ற கருத்து கூறப்படுகிறது.

இப்பொழுது சேர்க்கப்பட்டிருக்கிற புதிய ஆலயங்கள் மட்டுமல்ல; ஏற்கெனவே இருக்கிற ஆலயங்களில் எல்லாம்கூட போதுமான அளவுக்கு நிர்வாக அலுவலர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். தற்போது ஒவ்வொரு பகுதியிலும் 10 அல்லது 15 ஆலயங்கள் என்று 'குரூப் குரூப்பாக'ப் பிரித்து, சுமார் 500 அலுவலர்கள் இந்த ஆண்டு நியமிக்கப்பட்டு எல்லா ஆலயங்களும் நல்ல முறையில் நிர்வகிக்கப்பட்டு வருகின்றன. ஒரு நிலைமையை வருகின்ற ஆண்டு முதல்

செயல்படுத்த இருக்கிறேம். அப்படி வரும்போது நிச்சயமாக இப்போது இருக்கிற சிறிய குறைபாடு போக்கப்பட்டு, வருவாய் அதிகமாக வருகின்ற வாய்ப்பும் ஏற்படும். அதிகமாக நியமிக்கப்படும் நிர்வாக அதிகாரிகளினுல் ஏற்படுகின்ற செலவையும் கூட அதிகமாக வருகின்ற கூடுதல் வருவாயைக் கொண்டு சரிக்கட்டிக் கொள்ள முடியும் என்ற வகையில் இந்தத் துறையைச் சீர்திருத்தம் செய்திருக்கிறேம்.

அதைப்போல, இந்தக்கோயில் வருமானத்தை அதிகப்படுத்தியிருக்கிறேம். 3.99 கோடி ரூபாயாக இருந்ததை இன்றைக்குச் சுமார் 11 கோடிக்கு மேல் வருமானம் வருகின்ற கணக்கைக் காட்டமுடிகிறது. இந்த உயர்வு ஏற்பட பல்வேறு வகைகளில் எல்லாம் நிர்வாகத்தைச் சீர்திருத்தி இருக்கிறேம். அந்த அடிப்படையில் தான் கோயில்களுக்குச் சொந்தமான வீடுகளில் வாடகை மாற்றியமைக்கப்பட்டிருக்கிறது.

நகரில் இருக்கின்ற பெரிய பெரிய வீடுகள் அல்லது சிறிய கடைகள் இவைகளுக்கு 30, 40, 50 ஆண்டுகளுக்கு முன்னுல் வாடகை நிர்ணயம் செய்யப்பட்டது. தற்போது கொஞ்சம் உயர்த்திக் கேட்டாலும் தரத் தயாராக இல்லை.

கோயில்களைப் பொறுத்தவரையில், வருகின்ற வருமானம் தனிப்பட்ட யாருக்கும் அல்ல. கோயில் நிர்வாகத்திற்குச் செலவிட்டது போக மீதிப் பணம் சாதாரணமான மக்களுக்குப் பயன்படுகிறது. ஆகவேதான் நீண்ட நாட்களாகப்பரிசீலனை செய்யப்பட்டு, சென்ற ஆண்டு முதல் கோயில் நிலங்களுக்கு, வீடுகளுக்கு வாடகைச் சட்டத்திலிருந்து விதிவிலக்கு அளிக்கப்பட்டு, நியாயமான அளவுக்கு வாடகை நிர்ணயம் செய்யப்பட்டிருக்கிறது. சென்னை நகரில் இருக்கிற கபாலீசுவரர் கோயிலுக்குச் சொந்த வீடுகள் ஏராளமாக இருக்கிறது. தனியாருக்குச் சொந்தமாக இருக்கிற அப்படிப்பட்ட வீடுகளுக்கு ஆயிரம் ரூபாய் கூட வாடகை வசூல் செய்வார்கள். இப்படி ஆயிரம் ரூபாய் வாடகை வரக்கூடிய வீட்டிற்கு 100 ரூபாய், 150 ரூபாய்தான் வாடகை கொடுத்துக் கொண்டிருக்கிறுர்கள். வாடகையை அதிகப்படுத்தித் தரவேண்டுமென்று சொன்னுல் தருவதும் இல்லை; காலி செய்யவும் முடியவில்லை. அதனுல் இந்துக் கோயில்கள். கிறிஸ்தவ சர்ச்சுகள், முஸ்லீம் வழிபாட்டிடங்கள் ஆகியவைகளுக்குச் சொந்தமான வீடுகளுக்கு வாடகைச் சட்டத்திலிருந்து விதிவிலக்குத் தரவேண்டுமென்று கடந்த ஆண்டு முடிவு செய்யப்பட்டு, அவைகளுக்கு நியாயமான வாடகை நிர்ணயம் செய்த பிறகு, இதே கபாலீசுவரர் கோயிலுக்குச் சென்ற ஆண்டு வந்த வாடகையைவிட சுமார் 50,000 ரூபாய் அதிகமாக வருமானம் வருகிறது. இந்த ஆண்டும் அதே மாதிரி கூடுதல் வருமானம் கிடைக்கும். ஏழை எளிய மக்களுக்குப் பாதிப்பு ஏற்படாத வகையில் அந்த வட்டாரத்தில் நியாயமான வாடகை என்ன வரும் என்று அறிந்து, அதன் அடிப்படையில் வாடகை நிர்ணயிக்கப்பட்டிருக்கிறதே தவிர, ஏராளமான அளவுக்கு வாடகைப் பணம் வாங்க வேண்டுமென்று கெட்ட எண்ணத்தோடு வாடகை உயர்வு செய்யப்படவில்லை. நியாயமான அளவுக்கு வாடகை வரக்கூடிய முறையில் எந்த அளவுக்கு உயர்த்த முடியுமோ அந்த அளவுக்கு அந்த வட்டாரத்தில் இருக்கக்கூடிய நிலைமைகளைக் கண்டறிந்து அதன் அடிப்படையில் செய்திருக்கிறேம்.

அடுத்தபடியாக, சமயபுரம் மாரியம்மன் கோயில் நிர்வாகத்தைத் தனியாகப் பிரிக்க வேண்டுமென்று கூறப்பட்டது. நிர்வாக வசதிக்காக இரண்டு கோயில்கள் நிர்வாகத்தையும் சேர்த்து நடத்துகிறுர்கள். மதுரை மீனுட்சியம்மன் கோயில், திருப்பரங்குன்றம் கோயில் ஆகிய இரண்டு கோயில் நிர்வாகத்தையும் சேர்த்து நடத்துகிறுர்கள். அதைப் போலவே திருச்சி ஸ்ரீரங்கம் கோயில், சமயபுரம் மாரியம்மன் கோயில் ஆகிய இரண்டு கோயில் நிர்வாகத்தையும் சேர்த்து நடத்துகிறுர்கள். இந்த நான்கு கோயில்களின் நிர்வாகத்தையும் தனித்தனியாகப் பிரிக்க வேண்டுமென்று கோரிக்கையை நீண்ட நாட்களாக அந்த வட்-

## வளரும் இந்துக் கோயில்கள்

தமிழக இந்து சமய அறநிலையத் துறையின்கீழ் தற்போது 157 திருமடங்களும், 832 குறிப்பான அறக்கட்டளைகளும் 18,268 திருக்கோயில்களும் ஆக 19,257 அறநிலயங்கள் செயல்பட்டு வருகின்றன. இவ்வற நிலயங்களின் ஆண்டு வருவாய் ரூபாய் 11.69 கோடி என மதிப்பிடப்படுகிறது. தமிழ்நாடு குத்தகை மற்றும் வாடகைக் கட்டுப்பாடு சட்டத்தின் செயல்முறையிலிருந்து அரசினுல் அளிக்கப்பட்ட விதிவிலக்கின் பயனுக, கட்டடங்களை உடைமையில் கொண்டுள்ள திருக்கோயில்களின் வருவாயினைப் பெருக்க இன்னும் வாய்ப்புகள் உள்ளன.

திருக்கோயில்களுக்கு உரிமையான நிலங்களைக் கண்டறிய நியமிக்கப்பட்ட சிறப்புப் பணியாளர்களின் பணியின் காரணமாக இவ்வாண்டு 5,178 திருக்கோயில்கள் இத்துறையின் ஆளுகையின்கீழ் கொண்டுவரப்பட்டன. இதில் 2,047 திருக்கோயில்கள் வரி விதிக்கக்கூடிய நிறுவனங்கள். இவ்வாண்டு இறுதிக்குள் இன்னும் சுமார் 20,000 புதிய திருக்கோயில்களை அறநிலயத் துறையின் ஆளுகைக்குள், இதற்காக அனுமதிக்கப்பட்ட 27 கூடுதல் ஆய்வாளர் பதவிகள் மற்றும் அதற்குரிய துணைப் பணியாளர்களின் உதவியினுல், கொண்டுவரத் திட்டமிடப்பட்டுள்ளது.

டார மக்கள் சொல்லிக்கொண்டிருக்கிருர்கள். திருப்பரங்குன்றம் கோயிலை எடுத்துக் கொண்டால் வருமானம் அதிகம், நிர்வாகச் செலவு குறைவு. ஆனல் மீனுட்சியம்மன் கோயில் வருமானம் குறைவு, நிர்வாகச் செலவு அதிகம். ஆகவே திருப்பரங்குன்றம் கோயிலிலிருந்து கிடைக்கும் அதிகப்படி வருமானத்தைக் கொண்டு மீனுட்சியம்மன் கோயில் நிர்வாகச் செலவை ஈடு செய்யும் வகையில் அந்த 'இரண்டு கோயில்களின் நிர்வாகத்தையும் ஒன்ருகச் சேர்த்து நடத்திக்கொண்டிருக்கிருர்கள்.

அதைப்போலவே சமயபுரம் மாரியம்மன் கோயில் வருமானம் அதிகம். நிர்வாகச் செலவு குறைவாக இருக்கிறது. ஸ்ரீரங்கம் கோயில் வருமானம் குறைவு. நிர்வாகச் செலவு மிக அதிகம். ஆகவே, அந்த இரண்டு கோயில் நிர்வாகத்தையும் சேர்த்து வைத்திருக்கிருர்கள். இப்படி இரண்டு கோயில்களின் நிர்வாகத்தையும் சேர்த்து வைத்திருக்கிருர்கள் என்ருல், அந்த இரண்டு கோயில்கள் மட்டுமல்ல; அவைகளோடு சேர்ந்த துணைக் கோயில்கள் 10, 15 என்று இருக்கின்றன. அந்தத் துணைக் கோயில்களின் நிர்வாகத்தையும் சேர்த்துப் பார்க்க வேண்டும். ஆகவே, பிரிக்க வேண்டும் என்ற கோரிக்கை நியாயமாக இருந்தாலும், எந்த வகையில் பிரிக்கலாம், எந்த வகையில் பிரித்தால் துணைக் கோயில்களின் நிர்வாகங்களும் பாதிக்கப்படாமல் இருக்கும் என்பதை எல்லாம் ஆராய்ந்து பார்த்து பின்னர் முடிவு செய்யலாம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

# உறவுக்குக் கை கொடுப்போம்
# உரிமைக்குக் குரல் கொடுப்போம்

இந்த
இதழுடன்
இலவச
இணைப்பு!

## சென்னை மாநகருக்குப் பால் வழங்கும் பணிகள்

மாதவரம் பால் பண்ணைக்குக் கொணரப்படும் பால் 1972-73ஆம் ஆண்டு நாளொன்றுக்கு 45,000 லிட்டர் அளவில் இருந்து, 1973-74 ஆம் ஆண்டு 54,000 லிட்டராக அதிகரித்து 1974-75 ஆம் ஆண்டு 55,000 லிட்டராக உயர்ந்துள்ளது. சென்னை மாநகரில் விற்பனையாகும் பாலின் அளவு நாளொன்றுக்கு 1,11,000 லிட்டராக உயர்ந்துள்ளது. மாதவரம் பால் பண்ணையின் உற்பத்தித் திறன் 1,25,000 லிட்டராகும். சென்ற ஆண்டு சென்னை மாநகரில் 244 விற்பனை நிலையங்கள் இருந்தன. இவ்வாண்டு அதன் எண்ணிக்கை 306 ஆக உயர்ந்துள்ளது. இவற்றில் 16 நிலையங்களில் பாலைக் குளிர்ப்படுத்தும் சாதனம் உள்ளது. நாள் முழுவதும் பாலும், பால் பண்டங்களும் விற்பனை செய்யக்கூடிய நடமாடும் பால் விற்பனையகம் ஒன்றும் செயல்பட்டு வருகின்றது. 1973 ஆம் ஆண்டு பால் வாடிக்கையாளர்களின் எண்ணிக்கை 59,560 ஆக இருந்தது, 1974 ஆம் ஆண்டு 64,800 ஆக அதிகரித்து, தற்போது 78,000 ஆக உயர்ந்துள்ளது. மொத்தப் பால் வழங்கும் நிறுவனங்களின் எண்ணிக்கையும் 173ல் இருந்து 240 ஆக உயர்ந்துள்ளது. சென்னை-அம்பத்தூரில் ரூ. 291 இலட்சம் செலவில் அமைக்கப்பட்டுவரும் இரண்டாவது பால் பண்ணை தொடர்பான பணிகள் முடியும் தறுவாயில் உள்ளன. தொடக்கத்தில் 1 இலட்சம் லிட்டர் உற்பத்தித் திறன் கொண்ட இப்பண்ணை இறுதியில் இரண்டு இலட்சம் லிட்டர் திறன் உள்ளதாக அமையும். அதிகரித்து வரும் பால் வழங்குதலைச் சமாளிக்க அடுத்த ஆண்டிலிருந்து சென்னை மாநகரில் முக்கிய இடங்களில் மொத்த விற்பனை முறையைச் செயல்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

மாதவரத்தில் அமைக்கப்பட்டுள்ள வெளிநாட்டு இயந்திரங்கள் மூலம் பாலிதீன் பைகளில் பாலை நிரப்பி விற்பனை செய்யும் முறை விரைவில் அமலாக்கப்படும். இப்பைகள் பாலில் கலப்படம் செய்வதைத் தவிர்க்கும் முறையில் அமைந்துள்ளன. சென்னை மாநகரில் பால் வாடிக்கையாளரிடையே இப்பைகளுக்கு நல்ல வரவேற்பு இருக்குமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

மாதவரத்தில் நாளொன்றுக்கு 40 டன் உற்பத்தித்திறன் கொண்ட நவீன கால்நடை தீவன ஆலை தொடங்கப்பட்டுள்ளது. இந்த ஆலை தற்போது மாதம் ஒன்றுக்கு சுமார் 300 டன் கால்நடை தீவனம் உற்பத்தி செய்து வருகின்றது. இவ்வுற்பத்தித் திறனளவை அதிகரிக்கவும் கால்நடைத் தீவனத்தைக் கூடுதலாக்கவும் விற்கவும் எல்லா நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

# கைக்கடிகாரம்

புலவர் பொன்னிவளவன்




காரம் பல!பல காரம் பலப்பல
யாரும் மதிக்கும் காரம் எனில்அதி
காரம்! சிலப்பதி காரமோ காவியம்!
சாரம் நிறைஅதி காரம் குறளில்!
பொடிக்கா ரம்அதைப் போட்டால் தெரியும்!
படிக்கா ரம்கற் கண்டுபோல் தெரியும்!
மிளகாய் மிளகு மிகமிகக் காரம்!
இளக்கா ரம்ஏன் ஏழை யிடத்தில்?
வழக்கமாய் நம்வாய் வணக்கம் உரைத்தே
பழக்கம்! பறந்தது பாழ்நமஸ் காரம்!
ஆகா! 'ரம்!'என ஆடுவர் குடியர்
ஆகா ரம்தான் அனுதினம் தேவை!
அடிக்(கு)அடி அடிப்பது ஆற்றல்; வீரம்!
அடிக்கடிப் பார்க்கிறோம்; அதுகடி காரம்!
கைக்கடி காரமே காட்டுவாய் நேரமே
கைக்குள் சங்கிலி கச்சித ஆரமே!
நாடித் துடிப்பைஉன் நல்துடிப் பாக்கி
ஓடிடு கின்ருய்! உன்னை அதனுல்
நாடி நாங்கள் நாடிமேல் அமர்த்தினேம்!
ஓடினுல் உன்றன் உளம்துடிக் காதா?
இப்படி ஓடினுல் எப்படி? உன்னைத்
தப்ப விடாமல் கைப்பிடி தன்னில்
கட்டிப் போட்டே கவனிக் கின்ருேம்!
கட்டிய பின்னும் கணக்காய் ஓடுவாய்!
'மணிகாட்டு!' என்றே மணிக்கட்டில் கட்டுவோம்!
மணி,மணித் துளி,நொடி மகிழ்வாய்க் காட்டுவாய்!



நாளெலாம் முள்ளே நடக்கும் எங்கள்
காலின் எதிரி! காலாய் உனக்கு
முள்ளே ஆனதால் முழுவியப் படைகிறேன்!
உள்ளே உள்ள முள்ளோ நகரும்;
அயர்வோ இன்றி அதுநகர் வதனுல்
உயர்வு நவிற்சியாய் ஓடும்என் கின்ருேம்!
காட்டுத் துரும்பின் துண்டுபதி ருறில்
நீட்டிக் கிடந்தது நீக்கி மிகுந்ததால்
நாழிகை உரைத்த நாளும் இருந்தது!
நாழிகை வட்டிலின் நாளும் பறந்தது!
சாவி உன்றன் ஆவி! இன்றேல்
பாவி! நீயோ 'படக்'கென நிற்பாய்!
ஏனே சாவி? எனஇந் நாளில்
தானய் ஓடும் தகவுடன் வருகிருய்!
தேதியும் கிழமையும் தெரிவிக் கும்வகை
சேதி புரிந்துநீ சிறப்படை கின்ருய்!
பன்னிரண் டாழ்வார் பக்தர் அறிவர்;
பன்னிரு பாட்டியல் படிப்போம் நாங்கள்!
உன்னிரு முட்களும் ஓடிப் பிடிக்கப்
பன்னிரண் டெண்களைப் பார்வையில் வைக்கிருய்!
நாலும் தெரிந்தவன் நான்எனும் மனிதன்
மேலும் தெரிந்துன் மேன்மையை உணர்கிருன்!
ஐந்தால் பெருக்க அறிந்தால் தானே
வந்துநீ கையில் வாய்ப்பாய் அமர்கிருய்?
அந்தி வருமுன் அலுவ லகத்தில்
குந்தி யிருப்போர் கோபம் கொண்டே
உன்னை முறைக்கிருர்! உன்னிடம் நடக்குமா?
'என்ன அவசரம்?' எனநகர் கின்ருய்!
காலம் கணக்கிடும் கணக்கப் பிள்ளையே!
காலமெல் லாம்நீ இல்லையே தொல்லையே!



"அண்ணாநகர் - ஆறாவது தெரு'' என்று அரைகுறையாக அவன் சொல்லி முடிப்பதற்குள் விரைவு வண்டி புறப்பட்டுவிட்டதால், நான்தானே இப்போது அல்லல்படுகிறேன்!

''மாறன் என்றுசொன்னாலே போதும். என் வீட்டைக் காட்டி விடுவார்கள். நீ மிக எளிதாக என் வீட்டுக்கு வந்து விடலாம்'' என்று சொல்லி விட்டுப் போய்விட்டான். இப்போது என்னைப் பார்த்துத் துருவித் துருவி விவரம் கேட்கும்போதுதான் என் தப்பு எனக்குப் புலப்படுகின்றது. 'எந்த மாறன்? வீட்டு எண் என்ன? எத்தனாவது சாலை?..... இதையெல்லாம் அவன் சொல்லித் தொலைத்திருந்தால் இப்போது இத்தனை அவதி இல்லையே! பேருந்து புறப்படு முன்பே கேட்டுத் தெரிந்து கொண்டிருக்கலாம். ஊம்...... நடந்தது நடந்துவிட்டது!

உலகச் சந்தை இங்கு நடந்த போது எழுந்த கோபுரம் அதோ தெரிகிறதே! அண்ணா நகரின் சிறப்பினை உலகுக்கே இது பறைசாற்றுவது போல் என் மனத்துள்ளே ஓர் இனிப்பு.

அந்தக் கோபுரத்திடம் கேட்டால் ஒருக்கால் இந்த மாறனின் வீட்டைக் காட்டுமா?

என்னையறியாமலே அதனை நோக்கி நடந்தேன். நெருங்கி விட்டேன். கோபுரத்தை அண்ணாந்து பார்த்து விட்டுத் தலையை இயல்பான நிலைக்குக் கொண்டு வரும்போது விளம்பரத்தட்டி ஒன்று இடையீடாகத் தென்பட்டது. கண்ணைக் கவரும் வண்ணங்களில் சித்திர எழுத்தில் அமைந்த அந்தத் தட்டி என்னை என்ன, எவரையும் ஈர்க்கச் செய்யும்!

முதல்வரின் ஊனமுற்றோர் நல்வாழ்வுத் திட்டத்துக்கு நிதி திரட்டும் பொருட்டு ஏற்பாடு செய்யப்பட்ட நாடகத்தின் விளம்பரந்தான் அது!

அடே! மாறனுடைய பேர் இதில் எப்படி இடம் பெற்றது? திகைப்பு என் உடலை வளைக்கக் கண்ணைத் தீட்டிக் கொண்டு கவனித்தேன். ''நகைச்சுவை நடிகர் மாறன் அளிக்கும் 'செங்கரும்பு' நாடகம், கலைவாணர் அரங்கில் நடைபெறும்''. இப்படிப்பட்ட புகழ்வாய்ந்த நடிகனின் நண்பனா நான்! குறுகியிருந்த என்மேனி நாண்

ஏற்றிய அம்பாயிற்று. அந்த எழுச்சியுடன் திரும்பிப்பார்த்த போது அலுவலகத் தாள் கட்டு களுடன் ஒருவர் என்னை நோக் கியபடி நிற்கக் கண்டேன்.

—''சார், இந்த மாறனின் வீடு உங்களுக்குத் தெரியுமா?''

என் கேள்வி முடியுமுன்பே அவரின் ஏளனப்புன்னகை என் மீது பாய்ந்துவிட்டது. ஏற இறங்கப் பார்த்தார் அவர்.

''போனவாரந்தான் அவர் வேற இடத்துக்கு மாற்றிக் கொண்டு போனதாய்ச் சொல் றுங்க!''

நாளிதழ்களில் ஈரெட்டாக வரும் செய்திக் குறிப்புகளைப் போல் இவரின் பேச்சிலும் 'குழப்பம்' இழையோடிற்று.

என் நண்பன் மாறனை-இறைவனை-இங்கே காணுமல்' என்ற பாடலை என் உள்மனம் சொல்லிக் காட்டிற்று. விரைந்து ஓடினேன். விவரங் கள் அடங்கிய தகவல் பலகை அது. அழகிய வண்ணத்தில் தெளிவாக எல்லா விவரங் களும் இருந்தன. சுற்றுச்சாலை கள், உட்பிரிவுகள், குறிப்பிடத் தக்க அலுவலகக் கட்டடங்கள், பூங்கா, பள்ளி போன்றவை அடையாளமிடப் பட்டிருந் தன. ''நீங்கள் இங்கே இருக்கி றீர்கள்!'' என்ற சொற்களை எழுதி நான் நின்றிருந்த பகுதியைக் குறித்திருந்தனர்.

வருவோர் போவோருக்கு எத்தனை வசதியாக உதவி யிருக்கிருர்கள்! நான் சரியான குறிப்பு எடுத்து வந்திருக்க வில்லையே! எத்தனைதான் நலங் களைக் குவித்துக் கொடுத்தா லும் தங்கள் இயலாமையால் அவற்றைத் துய்க்க முடியா

கண்டுபிடித்து விட முடியும்! என் சோர்வு பறந்து விட்டது. நான் தங்கியிருந்த விடுதிக்குச் சென்று அங்கிருந்து நேரத் தோடு புறப்படலாம் என்ற துணிவு துளிர்த்துவிட்டது. அண்ணு நகரிலிருந்து நான் தங்கியிருந்த விடுதிக்குச் செல்ல வேண்டுமே! நினைவில் எழுந்த தேக்கம் நெடுநேரம் நீடிக்க வில்லை.

பேருந்து வரும் இரைச்சல் கேட்டது. சாலையில் நடுவே போய் நின்று கவனித்தேன். வண்டி விரைந்து வந்து நின் றது. இதில் ஏறிவிட வேண்டி யதுதான். நேராய்ப் போனல் இருப்பிடம் சேர்வோம். இல்லாவிடில் வேறு வண்டி மாறிவிட்டால் போகிறது.

வண்டியில் அதிக நெரிசல் இல்லை. யாரோ பேசிக்கொண் டார்கள்.

# நீங்கள் இங்கே இருக்கிறீர்கள்

## மன்னர் மன்னன்

நகைச்சுவை நடிகனுக இப் போது உயர்ந்து விட்ட நண் பனை-நான் கண்டுபேச முடி யாதா?

தஞ்சையிலிருந்து புறப்பட்ட எனக்கா இந்த ஏமாற்றம்? சேச்சே, ஏமாற்றம் இதில் என்ன இருக்கிறது! பக்கத்தில் இருப்பவரிடமோ, வருவோர் போவோரிடமோ இனிமேல் கேட்பதில் பயனில்லை. பிறகு யாரிடம் தெரிந்து கொள்வது? நிமிர்ந்து பார்த்தேன்.

அகன்ற சாலையின் ஒருகோடி யில் பெரியதோர் அறிவிப்புப் பலகை நாட்டப்பட்டிருந்தது. அதில் கண்டுபிடித்து விட லாமே! 'எங்கே தேடுகின்றுய். மற் போகிறவர்கள் சேற்றை வாரித் தூற்றுவதுபோல், யாரோ ஒருவன் 'நீங்கள் இங்கே நிற்கிறீர்கள்' என்று கிறி வைத்திருந்தான்!

நான் நின்று கொண்டிருக் கிறேனே! நடந்து செல்ல வேண்டிய பாதை வெறிச் சோடிச் செல்கிறதே! அடுத்து நான் என்ன செய்வது? சுற்று முற்றும் பார்த்தபோது ஒரு சுவரொட்டி கண்ணில்பட்டது. அதே 'செங்கரும்பு' நாடக விளம்பரந்தான். இன்று மாலையே நடக்க இருக்கின்றது, இரவு எட்டு மணிக்கு!

கலைவாணர் அரங்கிற்குச் சென்றல் நண்பன் மாறனைக்

''எப்படிப்பட்ட காடா இருந்ததுங்க. இப்ப இந்த அண்ணு நகருக்குப் போட்டி ருக்கிற பஸ்வசதி போல வேற எங்கேயும் கிடையாதுங்க!

வெற்றிலைக் காவி ஒன்று எப்படிச் சொல்லிற்று.

முத்துப்பல் ஒன்று முறுவ லோடு கூறியது.
''அப்படிச் சொல்லிடா திங்க. மெட்ராஸ்லே கால னிக்கு எல்லாம் பண்ணிக் குடுத்திருக்கிற வசதியைப் போலவேற எங்கியுமே இல்லை''.

இதைக் கூறிவிட்டு மூன்று முறை தலையை ஆட்டிக் கொண்ட நாகரிகப் 'பேண்ட்' ஒன்று குறுக்கிட்டது.

''நன்றைச் சொன்னேள்! டெல்லியிலேயிருந்து கேப் காமரின்வரைக்கும் பாத்துட்டேன்! டமில் நாட்லே டிரான்ஸ் போர்ட் பெசிலிட்டீஸ் ஓ ஒன்!''

மறுப்பின்றி இவரின் தீர்ப்பு வெளியாகிவிட்டது. உண்மை உடனே ஏற்றுக் கொள்ளப் பட்டதில் எனக்கேற்பட்ட வியப்பு என்னைக் குலுக்கிவிட்டது. பயண சுகமே தனிதான்!

**போ**ழுதுபோனதே தெரியவில்லை. நான் தங்கியிருந்த விடுதியிலிருந்து பலகணி வழியாய்க் காட்சி இன்பம் பருக முடிந்தது. அண்ணா சிலையை ஒட்டிய சாலைகளிலே மக்கள் வெள்ளம். பிரித்துப் பார்க்க இயலாத மக்கள் கூட்டம், அவர்களின் இனம் புரியாத ஓட்டம், உந்து வண்டிகளின் ஓசை! ஊர் பார்க்க வந்தவர்களின் ஊமை வருணனைகள்! சுரங்கப் பாதையைப் பார்க்க விரும்புகிறவர்கள் தடதட என்று இறங்கி நடந்த புதுமைக் காட்சி! அந்த ஆசை எனக்குள்ளும் முளைவிட்டது என்பதை நான் மறுக்கவில்லை. அதற்கு 'ஒரு தேவை' இல்லையே! ஏன் சும்மாவாகிலும் இறங்கினால் என்ன; யார் தடுக்கப் போகிறார்கள்? நல்லதைப் பற்றிப் பொல்லாங்கு பேசினாலும் பொல்லாதவர்களின் நாக்கு நாட்டியம் புரிந்தாலும் யாரும் பொருட்படுத்தப் போவதில்லையே! குண்டூசியை நடுச் சாலையில் போட்டு விட்டதாக ஒருவன் கூறிவிட்டுக் குனிந்து போய்க் கொண்டிருந்தாலும், அவன் பின்னே நூறு பேர் போவார்களே தவிர, ஏண்டா குண்டூசியைச்சாலையிலே போட்டாய்! ஏன் அதைத் தேடுகிறாய் என்று கேட்பாரில்லை.

மனப்பறவை அசைபோட்ட போது, மணிப்பொறி ஏழு அடித்து அதை நிறுத்திற்று.

உடல் எங்கும் ஒரு பரபரப்பு என்னை அழகுபடுத்திக்கொள்ள வேண்டுமே! நாடகம் பார்க்கப் போகிறவர்களும் அழகாய் இருக்க வேண்டும் என்று நியதியா என்ன!

என்னமோ மனப்பேயின் குதியாட்டம்! சித்தர்களும் சீவன் முக்தர்களும்கூட இந்த மனப்பேய்க்கு அடிமை ஆகிவிடுவார்கள் என்று அண்ணா கூறியது நினைவில்லையா?

நான் தங்கியிருந்த அறைக் கதவினைப்பூட்டி இரண்டுமுறை இழுத்துப் பார்த்துவிட்டுப் படியிறங்கினேன். இரண்டு அடிகள் வைத்தாயிற்று.

''சார்! உங்களுக்கு போன் வந்திருக்கு!''

விடுதிப் பையன் குரல் கொடுத்தான்.

''எனக்கா? யாராக இருக்கும்''

மாறனாக இருக்கலாம் ...... நம்மைக் கண்டுபிடித்துவிட்டானே! கெட்டிக்காரன்தான்! என் நண்பனல்லவா!

''சார் தஞ்சாவூரிலேருந்து ஆவன்னா வேயன்னா பன்னீர் செல்வம் தானே! மிஸ்டர் மாறன் உங்ககிட்ட சொல்லச் சொன்னார். நாடகம் முடிந்தப்புறம் பார்க்கிறது முடியாதாம். நாளைக்குக் காலையிலே ஏழு மணிக்கு உங்க ரூமுக்கு வராராம்!

பேசி முடித்துத் தொலைவு பேசியை வைத்து விட்டான். ஆமாம்! எப்படி என் முகவரி தெரிந்தது இவனுக்கு? சிறிது யோசித்தேன்.

நாடகத்துக்கு நுழைவுச் சீட்டு வேண்டும் என்று கேட்டுத் தொலைவு பேசியில் நான் பேசியபோது, 'அரங்கு நிறைந்து விட்டது' என்ற மறுமொழி கிடைத்தது. எப்படியும் நாடகத்துக்கு நுழைவுச் சீட்டு பெற்றாக வேண்டும். மாறனைச் சந்திக்க வேண்டும். இதற்காக நான் நகைச்சுவை நடிகர் மாறனின் நண்பன் என்றும், நாடகம் பார்ப்பதற்காகவே தஞ்சையிலிருந்து வந்திருப்பதாகவும் கூறினேன். நாடகப் பொறுப்பாளர் என் பெயரையும் தங்கும் விடுதி, அறை எண் முதலியவற்றையும் கேட்டார். அண்ணா நகரில் மாறனைத் தேடி நான் பட்ட அவதியையும் சொல்லி வைத்தேன்.. இந்த விவரங்கள் அவன் காதுக்கு எட்டியிருக்கலாம்.

மகிழ்ச்சி பிடிபடவில்லை எனக்கு. நாடகம் பார்க்கப் போகிறோம். நாளைக் காலையில் நண்பனும் சந்திக்க வருகிறான். அத்துடனின்றி - இப்போது அண்ணாசாலையைச் சுரங்கப் பாதையின் மூலம் கடக்கும் மகிழ்ச்சியும் கிட்டப் போகின்றது.

சுரங்கப் பாதையினுள் இறங்கியபோது, எங்கிருந்தோ சிரிப்பொலிகளும் கலகலப்பான பேச்சுக் குரல்களும் ஒலித்தன. எவரும் கண்ணில் படவில்லை. திடுமென விளக்குகள் அணைந்தன. பிறகு ஒளி வெள்ளம் பாய்ச்சும் விளக்குகள்! அந்த ஒளிவெள்ளத்தின் நடுப்பகுதியைப் பிளந்து கொண்டு, கருப்பு ஆடை பூண்டிருந்த இளம் பெண் ஒருத்தி ஒசிந்து நடந்து வந்தாள். அவள் கண்ணீர் சிந்தினாள்.

திடீரென ஓர் அலறல்:

''அண்ணா!''

குப்பென இருள் சூழ்ந்து மறுபடியும் சுரங்கப்பாதையின் விளக்குகள் எரியத் தொடங்கியபோது.

''வெல்டன் மிஸ் இந்திரா!''!

இந்தக் குரலுக்குடையவர் வந்தார். கை குலுக்குகிறார். மற்றும் ஒருவருடன்! திரைப் படத்துறையினர் இவர்கள் என்பது அவர்களின் பேச்சிலிருந்து புரிந்தது.

**தமிழ்நாட்டிலிருந்து அயல் நாடுகளுக்கு மஞ்சள் ஏற்றுமதி செய்ததின் மூலமாக ரூபாய் 10 இலட்சம் அன்னியச் செலாவணி கிடைத்துள்ளது.**

எந்தப் படத்தில் இப்படியொரு காட்சி? எதிலாவது இருக்கட்டும். இப்போது கலைவாணர் அரங்கம் நமது குறிக்கோள்!

அரங்கத்தின் வாயிலில் நுழைந்து என் பெயரில் பதிவு செய்யப்பட்டிருந்த இருக்கையைத் தெரிந்து கொண்டு உள்ளே சென்றேன்!

சிரிப்பு வெடிகளை உதிர்த்துச் சிந்தனையைக் கிளறிய கலைவாணரின் பெயரில் எழுந்த மன்றம் அந்தக் கலைமாமணியின் உள்ளம்போல் பரந்து கிடந்தது!

நாடகம் தொடங்கிவிட்டது மணி ஓசை அடங்கிற்று. முதல் காட்சி: சிற்றுண்டி விடுதியாய் அமைந்தது.

சின்னப்பன் என்ற சிற்றுண்டி விடுதிப் பணியாள் தனது சேவையைப் பாராட்டி ''விழா எடுக்காத நன்றி கெட்ட'' உலகத்தைப் பற்றி வசை பாடிக் கொண்டிருந்தான்!

எத்தனை பசங்களுக்கு வேளா வேளைக்கு டிபனும் காப்பியும் குடுத்துக் கிட்டிருக்கேன்! கெட்டிசட்னி கேட்டவனுக்கு மொத்தை மொத்தையா கொடுத்தேன். எப்பவோ ஒரு நாள் தின்னுட்டுப் போறவனை விடுங்க. வாடிக்கையா திங்கிற தீவட்டிகளைச் சொல்றேன். ஸ்பெஷல் வெந்நீர் கொடுத்தேன். சில சமயம், ஸ்வீட்,

காரம், தோசை, காபி குடுத்திட்டு 'ஐஸ் வாட்டர்'னு பில் போட்டிருக்கேன். இந்த சப்ளையர் சின்னசாமியை முதலாளி தான் பாராட்டலே! சாப்பிடுற ஆசாமிங்க பாராட்டி ஒரு சின்ன பட்டம் குடுத்திருக்கலாமில்லையா! ''படியளந்த வள்ளல்'. இப்படி ஏதாச்சும் ஒண்ணு! எங்கிட்டே கேட்டா மாலையிலேருந்து டிபன் வரைக்கும் நானே ஏற்பாடு செய்திருப்பேனே......

முதலீடு செய்தவரையும் பணம் கொடுத்துச் சாப்பிடுகின்ற மக்களையும் பழித்துவிட்டுத் தனது சேவைக்குப் பாராட்டு எதிர்பார்க்கும் இந்தப் பாத்திரம் சிறந்த படைப்பு தான்!

ஏன்—நாடகம் முழுவதுமே நகைச்சுவைக்குப் பஞ்சமில்லை. கதையும் சிறந்த குறிக்கோளை விளக்கிச் சென்றது!

நாடகத்தில் பங்கேற்றவர்களைப் பாராட்ட வந்த பெருமகனார், ''இந்த நல்ல படைப்பினை நமக்கு வழங்கிய மாறன் அவர்கள் சிறந்த நடிகர் என்று கூறமாட்டேன். அவர் வாழ்க்கையே ஒரு சோகமான நாடகமாகிவிட்டது. இப்போது அவர் இங்கே நம்மிடையே இல்லை. ஒரு துயரச் செய்தி கேட்டு அவசர அவசரமாக ஓடியிருக்கிறார்......

அந்த விழல்வேய்ந்த குடில்.. நுழைந்தேன்.

பாருடா பன்னீர்! ஊர்ல இருக்கிறவங்க துயரத்தையெல்லாம் போக்கறதுக்காகச் சிரிப்பு நடிகனாக மாறின எனக்கு இப்படியொரு கவலை. தீராத கவலை.....

கொழுமரத்தின் மேலே படர வேண்டிய இந்த முல்லைக் கொடி நோய்ப் படுக்கையிலே விழுந்து சாம்பிக்கிட்டு இருக்கு!

மாறனை ஒருவாறு தேற்ற முயன்றபோது, துவண்டு படுத்திருந்த அந்தப்பெண் 'அண்ணா எனக்காக வருத்தப்படாதிங்க!' என்றாள்.

இவள்...?

''மாறன் பேசினான் மீண்டும்''. என்னை நாடகத் துறையிலே ஊக்கப்படுத்திய நாடக ஆசிரியர் திருமேனியாரின் செல்வமகள் முல்லைக் கொடி இவள். அவர் இறந்தபின் தனது மனத்தில் ஏற்பட்ட அதிர்ச்சியாலும் குழந்தைப் பருவத்தில் பற்றியிருந்த நோயின் முதிர்ச்சியாலும் இவள் நடக்க முடியாதவளாகி விட்டாள். திருமேனியாருக்கு நான் அளித்த வாக்குறுதியைக் காப்பாற்றும் பொருட்டு வெளியருக்கும் கூட இவளை விட்டுப் பிரிந்ததில்லை.

''நாள் முழுதும் நகைச்சுவை நடிகனாக நடித்துவிட்டு நேரத்தோடு வீட்டிற்கு வந்து இவளுக்கு உதவி செய்வதிலே மகிழ்ச்சி அடைந்து கொண்ருந்தேன்! எனது துயரத்தை நாள்தோறும் தெரிந்து வைத்துக் கொண்டிருந்த இந்த முல்லைக்கொடி, நான் இன்றைய நாடக வேலையில் மும்முரமாக இறங்கி இருப்பதைத் தெரிந்து கொண்டு யாரோ எடுத்த சினிமாவில் துணை வேடம் புனைந்து நடித்துச் சம்பாதிக்கப் போயிருக்கிறாள். அங்கே ஏற்பட்ட அதிர்ச்சி இவளின் கால்களுக்கு ஈடு செய்ய முடியாத இழப்பைக் கொடுத்துவிட்டது. இனி..... இனி......?''

**தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சிக் கழகத்தின் உதவியுடன் தமிழ்நாட்டில் திருப்பூர், பொன்னமராவதி, அறந்தாங்கி, திருவாரூர், தூவக்குடி. நாமக்கல், மதுரை, ஒசூர், அரியலூர், கரூர், ஈரோடு முதலிய இடங்களில் சிறு தொழில் நிலையங்களை அமைக்க இருக்கிறது.**

மாறன் பேசிக் கொண்டிருந்தவன் மயங்கும் நிலை அடைந்தான்.

இந்திரா என்ற பெயரில் அங்கே கண்ட பெண் இவள் தானா?

மற்றவருக்குத் துன்பச்சுமையாக இருக்க விரும்பாத முல்லைக்கொடியின் உள்ளம் நைந்து போயிருக்கிறது. அதற்காக ஆருயிராய் விளங்கி வந்த அண்ணன் மாறனை மறந்து விட்டுச் செல்லலாமா!

''முல்லைக்கொடி! நீ இப்படிச் செய்தது...'' நான் சொற்களை மென்று கொண்டிருந்தேன்.

முல்லைக்கொடி சொன்னாள்:

''அண்ணா, யாருக்கும் துன்பமில்லை. என் வாழ்க்கையில் ஒளி பிறந்து விட்டது அண்ணா!

''முற்போக்குத் திட்டங்களைச் செயல்படுத்துவதில் முன்னோடியாகத் திகழும் நம் தமிழகத்திலே என்போன்ற உடல் ஊனமுற்றோர்க்கு இனிக் கவலை எதற்கு?''

மாறன் உணர்ச்சி பீறிடக் கூவினான். ''எல்லார்க்கும் நல்லின்பம்!''

எனக்குப் புரியவில்லை என்பதை என் மௌனத்தால் உணர்த்தினேன்.

முல்லைக்கொடி தன் கால்களுக்குத் தலையணைகளைத் துணை ஆக்கிக் கொண்டு உட்கார்ந்தாள்.

மாறன் பேசினான்-நெஞ்சை நிமிர்த்தியபடி!

''பன்னீர்! என்னைத் தேடி அண்ணாநகரில் நீ அலைந்தது தெரிந்தது! அங்கே பார்த்திருப்பாய். ''நீங்கள் இங்கே இருக்கிறீர்கள்' என்ற குறிப்பை!

தமிழக வளர்ச்சித் திட்டங்களை உற்றுக் கவனியாதவர்க்கும் இது ஓர் எச்சரிக்கை போன்றது.

அங்கே முன்னேற்றப்பாதை உங்களை இட்டுச் செல்லக் காத்திருக்கின்றது.

'நீங்கள் இங்கே இருக்கிறீர்கள்' என்று கூறுவது புரியவில்லையா!

உடல் ஊனமுற்றவர்க்கும்-கண் இழந்தவர்க்கும்-ஏழை எளியவர்க்கும் நல்வாழ்வுத் திட்டங்கள் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றனவே, நீங்கள் இருட்காட்டில் குமைந்து கொண்டிருக்கிறீர்களே என்று கூறுவது போல் இல்லையா....?

மாறன் சொல்லிக் கொண்டிருந்தபோதே உயர்ந்துநின்ற அண்ணாநகர் கோபுரம் என் மனத்திரையில் ஒளிப்படமாய்த் தெரிந்தது.

'நீங்கள் இங்கே நிற்கிறீர்கள்'

அதோ - ஒளிமிகுபாதை - நடந்து நல்வாழ்வு அடையுங்கள்'

என்ற அறிவிப்பு என்காதில் அன்புமுரசாய் ஒலித்துக் கொண்டே இருந்தது.

அந்த அன்பு முரசு.

எல்லார்க்கும் எல்லா இன்பங்களும் நல்கும்!



# செயற்கரிய பணி செய்யும் சென்னைப் பல்கலைக் கழகம்

நாளையத் தலைமுறைகளான இன்றைய மாணவர்கள், கண்ணெனத்தகும் கல்வியினை கசடறக் கற்கும் வகையில் பல்வேறு திட்டங்கள் அரசினல் செயற்படுத்தப் பட்டு வருகின்றன. குறிப்பாக சென்னைப் பல்கலைக் கழகம் பல்வேறு பணிகளை மிகச் சிறந்த முறையில் ஆற்றி வருகின்றது; கல்வி வளர்ச்சிக்கும், வளத்துக்கும் அது பல அரிய திட்டங்களைத் தீட்டி வருகின்றது. இதனை விளக்குகிறார் சென்னைப் பல்கலைக் கழகத் துணை வேந்தர் திரு நெ. து. சுந்தர வடிவேலு அவர்கள்.

**கே: சென்னைப் பல்கலைக்கழகத்தின் தோற்றம்—வரலாறு—சிறப்பு இவை குறித்துத் தாங்கள் சற்று விளக்க முடியுமா ?**

ப : முதல் இந்தியச் சுதந்தரப் போர் நடந்த 1857-ஆம் ஆண்டு சென்னைப் பல்கலைக் கழகம் நிறுவப்பட்டது.

தொடக்கத்தில் அது தேர்வுகளை நடத்திப் பட்டங்கள் கொடுக்கும் அமைப்பாக மட்டுமே இருந்தது; பின்னர் சில துறைகளை அமைத்து ஆராய்ச்சி செய்யும் நிலையமாக வளர்ந்தது.

118-ஆம் வயதிலிருக்கும் சென்னைப் பல்கலைக் கழகம் இப்போது உயர் கல்வி கற்பிக்கும் கழகமாகவும், ஆராய்ச்சிக்கு ஆதரவு கொடுக்கும் அமைப்பாகவும், தேர்வுகள் நடத்திப் பட்டங்கள் வழங்கும் நிலையமாகவும் பணி புரிகிறது.

தமிழ் நாட்டிலுள்ள 11 மாவட்டங்கள் இப்பல்கலைக் கழக எல்லைக்குள் இருக்கின்றன. 3 கோடியே 4 இலட்சம் பேர் இப்பல்கலைக் கழகத்திற்கு வருகிறார்கள்.

**கே: பல்கலைக் கழகங்களின் பொதுநோக்கம் என்ன ?**

ப : பல்கலைக் கழகங்களின் பொது நோக்கம், உயர் கல்வியையளித்து, பல துறைகளுக்கும் நாட்டுத் தலைவர்களை உருவாக்குதலும், ஆராய்ச்சித் துறையை ஊக்குவித்து உயர் மட்டக் கல்வியின் தரத்தை உயர்த்துதலும் ஆகும். எனினும் தொழில் நோக்குக் கல்வியை நுழைப்பதிலும் சென்னைப் பல்கலைக் கழகம் முன்னோடியாக விளங்குகிறது.

**கே: சென்னைப் பல்கலைக்கழகத்தில் எத்தனைத் துறைகள் உள்ளன? அவை ஆற்றும் பணிகள் என்னென்ன ?**

ப : சென்னைப் பல்கலைக் கழகத்தில் 42 துறைகள் உள்ளன. அவை போக திருச்சி மேல் பட்டப்படிப்பு மையத்தில் 2 துறைகளும், கோவை மேல் பட்டப்படிப்பு மையத்தில் 4 துறைகளும் உள்ளன. இங்குள்ள 42 துறைகளில் 12 துறைகள் மேல் படிப்புகளுக்கு வகுப்புகள் நடத்துகின்றன.

மதுரைப் பல்கலைக் கழகம் பிரிந்த பிறகும், சென்னைப் பல்கலைக் கழகத்தில் 110 கலை விஞ்ஞானக் கல்லூரிகளும், 35 தொழிற் கல்லூரிகளும், 17 கீழ்த்திசைக் கல்லூரிகளும், 31 மெட்ரிக்குலேஷன் பள்ளிகளும் உள்ளன.

இவற்றில் 33 கல்லூரிகள் பெண்களுக்குத் தனியாக இயங்குகின்றன. இந்த 110 கலை விஞ்ஞானக் கல்லூரிகளில், 36 மேல் பட்டப் படிப்பு வசதி உடையன.

இதுபோக 44 கல்லூரிகளில் மாலைக் கல்லூரி வகுப்புகள் நடக்கின்றன. அவற்றில் 8,689 பேர் படிக்கிறார்கள். இதுபோக மாலைக் கல்லூரிகளில் பி.ஜி.எல்., ( B.G.L., ) அல்லது பி.எல்., (B.L.,)பட்டங்களுக்காக 817 பேர் படிக்கிறார்கள்.

**கே: சென்னைப் பல்கலைக் கழகம் நடத்தும் தேர்வுகள் என்னென்ன ?**

ப : சென்னைப் பல்கலைக் கழகத்தின் மூலம் 272 தேர்வுகள் நடத்தப்படுகின்றன. 112 விதமான பாடத் திட்டங்கள் ( Courses ) உள்ளன. 3,200 கேள்வித் தாள்களுக்குப் பல்கலைக் கழகம் பொறுப்பு.



சென்னைப் பல்கலைக் கழகத் துணை வேந்தர்
திரு நெ. து. சுந்தரவடிவேலு அவர்கள்
— பேட்டி —

**கே: பாடத்திட்டங்கள் புதுப்பிக்கப்பட்டதா ? எப்போது ?**

ப : கடந்த ஐந்து ஆண்டுகளில் இருமுறை பாடத் திட்டங்கள் திருத்தியமைக்கப்பட்டன. 71—72-வது கல்வியாண்டில் 20 ஆண்டுக் கால இடைவெளிக்குப் பிறகு பாடத் திட்டங்கள் புதுப்பிக்கப்பட்டன. மீண்டும் 74—75-ஆம் ஆண்டிலிருந்து மறுபடியும் பாடத் திட்டங்களைத் திருத்தியமைத்து உள்ளது. பாடத் திட்டங்களைத் திருத்துவதற்கு முன்னே, சம்பந்தப்பட்ட எல்லாக் கல்லூரி ஆசிரியர்களையும் கலந்து ஆலோசித்தோம். மீண்டும் நகல் திட்டங்களைக் கல்லூரிகளுக்கு அனுப்பி ஆசிரியர்களின் கருத்தை மறுபடியும் பெற்று முழுமையாக்கினோம். இப்படிப் பரவலான ஜனநாயக அடிப்படையில் பாடத் திட்டங்களைத் திருத்தி அமைத்தது அண்மைக் காலச் சாதனைகளில் ஒன்றாகும்.

**கே: புதிய பாடத்திட்டங்கள் கொண்டு வரப்பட்டனவா ?**

ப : ஆம். ஏற்கெனவே இருந்த பாடத் திட்டங்களைத் திருத்தி உயர்த்தி அமைத்ததோடு புதிதாக 77 பாடத் திட்டங்களை ஏற்படுத்தி உள்ளது. இவற்றில் மருத்துவக் கல்லூரி சம்பந்தப்பட்டவை—13. பொறியியல் கல்லூரி சம்பந்தப்பட்டவை—12. பிற தொழில் சார்புடையன—17.

**கே: தேர்வுச் சீர்திருத்தம் பற்றித் தங்கள் கருத்தென்ன?**

ப : முன்பெல்லாம் பட்டப் படிப்பின் முதலாண்டில் எவ்விதத் தேர்வும் கிடையாது. நான்காண்டுகளுக்கு முன் செய்த சீர்திருத்தத்தில் பட்டப் படிப்பின் ஒவ்வொரு ஆண்டும் தேர்வுகள் இருக்கும்படி அமைத்துள்ளோம். அதே போல மேல் பட்டப் படிப்பில் எல்லாத் தேர்வுகளையும் இரண்டாம் ஆண்டில் நடத்திய சில பாடங்களில் முதலாண்டே சில தேர்வுகள் நடக்கும்படி மாற்றியுள்ளோம்.

ஐந்தாண்டுகளுக்கு முன்பு இரண்டே பாடங்களுக்குச் 'செமஸ்டர் (Semester Pattern) முறை' இருந்தது. அதை மெல்ல மெல்ல விரிவாக்கி, இன்று 14 பாடங்களுக்கு 'செமஸ்டர் முறை' உண்டு. இதனால் ஆறு மாதத்துக்கு ஒரு முறை படித்த பாடங்களில் தேர்வு எழுதி வருவதால் ஞாபகச் சுமை குறையும். 1975 ஜூலையில் தொடங்கும் கல்வி ஆண்டிலிருந்து அநேகமாக எல்லா எம்.எஸ்சி. பட்டங்களும் செமஸ்டர் முறைக்கு மாறும்.

அதற்கு அடுத்த கல்வியாண்டில் எம். ஏ., பட்டங்களைச் செமஸ்டர் முறைக்குக் கொண்டு வருவோம். செமஸ்டர் முறையில் நடக்கிற பாடங்களில் உள் மதிப்பீட்டுக்கு இடம் வைத்துள்ளோம். பொதுத் தேர்வில் எப்படியோ சில மதிப்பெண்கள் குறைந்து விட்டாலும், உள் மதிப்பீடு கைகொடுத்து உதவும்.




சமுக நலத்தொண்டில் மாணவிகள்

**கே: தமிழ்நாட்டில் கல்வி வளர்ச்சி அன்றும் இன்றுமுள்ள நிலைபற்றிக் கூற முடியுமா?**

ப : நான் கல்லூரி மாணவனாக இருந்த காலத்தில், கல்வி என்பது மேட்டுக்குடி மக்களுக்கும் பணக்காரர்களுக்கும் மட்டுமே எட்டுவதாக இருந்தது. இந்திய விடுதலைக்குப் பிறகு தொடர்ந்து எடுத்து வரும் முற்போக்கு முயற்சிகள், இலவசக் கல்வி, உதவித் தொகை எண்ணிக்கை வளர்ச்சி, நிறைய கல்லூரிகள் திறத்தல், இவற்றின் விளைவாக இன்று கல்லூரிகளில் படிப்பவர்களில் 100-க்கு 60 பேர் தாழ்த்தப்பட்ட பின்தங்கிய குடும்பங்களிலிருந்து வருகிறவர்கள்.

இது அமைதியாக நடக்கிற சமுதாயப் புரட்சி. மாணவ, மாணவிகள் இதனை உணர்ந்து கல்விக் கருமமே கண்ணாயிருந்தால் எளிதில் சமத்துவம் மலரும்; ஏற்றத்தாழ்வு உணர்ச்சிகள் மறைந்துவிடும்.

**கே: பல்கலைக் கழகம் வெளியிடும் நூல்கள் குறித்துச் சில விவரங்கள் தர இயலுமா?**

ப : சென்னைப் பல்கலைக் கழகம் பல்லாண்டுகளாகவே ஆண்டிற்குச் சில நூல்களை வெளியிட்டு வருகின்றது. நூல் வெளியீட்டில் கடந்த ஐந்து ஆண்டுகளாகப் புதிய வேகம் வந்துள்ளது. இதன் விளைவாக ஐந்தாண்டுகளில் 134 நூல்கள் வெளியாகியுள்ளன. இதுபோக 33 நூல்கள் அச்சில் உள்ளன. வெளியானவற்றில் 35 நூல்கள் தமிழ், தமிழ்நாடு பற்றியன.

எங்கள் நூல்கள் இப்பொழுது நல்ல கட்டமைப்போடும், அழகிய முகப்போடும் வெளியிடப்படுகின்றன; இவை அடக்க விலைக்கே விற்கப்படுகின்றன.

**கே: சென்னைப் பல்கலைக் கழகத்தில் 'அணு இயல்பியல் துறை' ஒன்று செயல்படுகிறதாமே?**

ப : ஆம். கடந்த ஐந்து ஆண்டுக் காலத்திற்குள் அணு இயல்பியல் துறை (Nuclear Physics Department) அமைக்கப்பட்டு வேலை செய்யத் தொடங்கியுள்ளது. அது பிற நாட்டு நிபுணர்களின் கவனத்தைக் கவர்ந்துள்ளது.

**கே: சென்னைப் பல்கலைக் கழகச் சார்பில் கட்டப்பட்டுள்ள கட்டடங்கள் ஏதேனும் உள்ளனவா?**

ப : உண்டு. அவை : 1. இராமாநுஜம் உயர் கணக்குக் கல்வி நிலையம். இது ரூ. 6 இலட்சம் செலவில் கட்டப்பட்

டுள்ளது. 2. மேல் படிப்பு மகளிர் விடுதி. இவை இரண்டையும் முதல்வர் கலைஞர் அவர்கள் திறந்து வைத்தார்கள். 3. மதுரவாயல் பண்ணை ஆராய்ச்சி நிலையம். 4 அழகப்பச் செட்டியார் தொழில் நுட்பக் கல்லூரி நூல் நிலையம். 5. வாணிக மேலாண்மைத் துறைக்கான கட்டடம் ( Business Management Department ). 6. தாவர இயல் துறைக்கான கண்ணாடி இல்லம். 7. அணு இயல்பியல் துறைக்கான கட்டடம். 8. வேதியியல் பொறியியலுக்கான கூடுதல் கட்டடம் ( Chemical Engineering Additional ). 9. நெசவுத் தொழில் நுட்பக் கல்லூரிக்கான கட்டடம். 10. அடிப்படை மருத்துவ விஞ்ஞான மேல்மட்டப் படிப்புக்கான கட்டடம். 11. உள்விளையாட்டுக்கான அரங்கம் ( Indoor Gymnasium ) போக திருச்சியில், 12. மாணவர்க்கான விடுதி, 13. நூலகம், 14. கலை இயல் ஆகியவற்றுக்கான கட்டடங்கள் ஆகியவை இவற்றில் அடங்கும்.

**கே: பட்டம் பெற்ற மாணவர்களுக்கு வேலை வாய்ப்புத் தந்திட பல்கலைக் கழகத்தில் வசதிகள் ஏதேனும் செய்யப்பட்டிருக்கின்றனவா ?**

ப : ஆம். சென்னைப் பல்கலைக் கழகத்தில் தகவல் நிலையத்தின் சார்பில் கடந்த நான்கு ஆண்டுகளாகக் கோடை விடுமுறையில் மாணவ, மாணவிகளுக்கு வேலை தேடித் தரும் முயற்சியில் ஈடுபட்டுள்ளோம். முதலாண்டு 73 மாணவர்களுக்கு வேலை தேடிக்கொடுத்தோம். 1974 கோடை விடுமுறையில் 720 மாணவ, மாணவிகளுக்கு வேலை தேடித் தந்தோம்.

அதுபோக படிக்கும் போதே பகுதி நேரம் வேலை செய்து பொருள் ஈட்ட உதவுகிறது சென்னைப் பல்கலைக் கழகம். இது நான்காண்டுகளாக நடக்கிறது. பல்கலைக் கழக நூலகத்தில் பகுதிநேரப் பணி செய்யும் மாணவர்களுக்கு ஊதியம் கொடுக்கிறோம். கடந்த ஆண்டில் 81 மாணவர்கள் இதனால் பயன் பெற்றார்கள்.

அதுபோக 1973 அக்டோபரில் தமிழ்நாடு அரசு வரவேற்கத்தக்க ஆணை ஒன்றைப் பிறப்பித்தது. அந்த ஆணையின் படி தனியார் கல்லூரி ஒவ்வொன்றும் ஆண்டுக்குரூ.5,000 செலவு செய்து கல்லூரிக்குள்ளேயே நூலகம், சோதனைக் கூடம், தோட்டம் ஆகியவற்றின் வேலைப் பயிற்சிக்கு ஏற்பாடு செய்யலாம். அதை 20 கல்லூரிகள் பயன்படுத்தியுள்ளன. இதனால் பலன் பெற்றவர்கள் 480 பேர்.

இவையன்றிக் கடந்த ஆண்டு முதல் கோவையை அடுத்துள்ள துடியலூரில் கொங்கு நாடு கலைக் கல்லூரி, எல்லா மாணவர்களுக்கும் வேலைப் பயிற்சிக்கு ஏற்பாடு செய்துள்ளது. அக்கல்லூரி காலை 8.30 மணிக்குத் தொடங்கி பகல் 1.30 மணிக்கு முடிகிறது. கல்லூரி நிர்வாகிகளே எல்லா மாணவர்களுக்கும் சுற்று வட்டாரத்திலுள்ள தொழிற்சாலைகளில் வேலைக்கு ஏற்பாடு செய்து கொடுத்திருக்கிறார்கள். மாணவர்கள் அங்குச் சென்று பலவகையான வேலைகளைக் கற்றுக் கொள்கிறார்கள்.

> சென்னைப் பல்கலைக் கழகம் வெளியிட்ட 'திருக்குறள் — நீதி இலக்கியம்' என்ற நூலுக்கு சாகித்திய அகாடமி பரிசு கிடைத்திருக்கிறது. பல்கலைக் கழகம் வெளியிட்ட நூல்களில் சாகித்திய அகாடமி பரிசு பெறும் முதல் நூல் இதுவே ஆகும். இந்நூலின் ஆசிரியர் திரு. க. த. திருநாவுக்கரசு அவர்கள்.

**கே: பல்கலைக் கழக மாணவர்கள் சமூகநலத் தொண்டுகளில் ஈடுபடுகின்றனராமே?**

ப : ஆம். சென்னைப் பல்கலைக் கழகத்தில் சேர்ந்த 44 கல்லூரிகளில் 4,200 மாணவ, மாணவிகள் 'தேசியத்தொண்டர் அணி'யில் சேர்ந்து சமூகத் தொண்டாற்றுகிறார்கள்.

முதியோர்க்கு எழுத்தறிவு கற்பித்தல், ஏரி, குளங்களில் தூர் எடுத்தல், நாட்டுப் புறக் குழந்தைகளுக்கு நோய்த் தடுப்பு ஊசி போட ஏற்பாடு செய்தல், பள்ளிச் சமையல் அறை கட்டுதல், ஒதுங்குமிடம் அமைத்துக் கொடுத்தல் ஆகிய பணிகளில் வெற்றி கண்டுள்ளனர்.

**கே: பத்திரிகைத் தொழிலியல் (Journalism) போன்ற டிப்ளமா வகுப்புகள் ஏதேனும் நடத்தப்படுகின்றவா ?**

ப : பத்திரிகை 'டிப்ளமா கோர்ஸ்' நடக்கிறது. அதைப் பட்டப் படிப்பாக உயர்த்துவதற்கும் பாட முறைகளை வகுத்துள்ளோம். பல்கலைக் கழக மான்யக் குழுவின் நிதி உதவி கொண்டு, அடுத்த ஆண்டு, பத்திரிகைத் தொழிலியல் பட்டப் படிப்பு நடத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

**கே: சென்னைப் பல்கலைக் கழகத்தில் பிறமொழிகள் கற்பிக்கப்படுகின்றனவா ?**

ப : ஆம். இங்கு சமஸ்கிருதம், தெலுங்கு, மலையாளம், கன்னடம், அரபிக், பாரசீகம், இந்தி, பிரெஞ்சு, ஜெர்மன், ரஷ்யன் ஆகிய மொழிகள் கற்றுக் கொடுக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

**கே: மாணவர்கள் அரசியலில் ஈடுபடலாமா ?**

ப : மாணவர்கள் எதிர்கால மன்னர்கள். ஆகவே, அரசியல் ஓட்டங்களையும், போக்குகளையும் அவர்கள் தெரிந்து கொள்ள வேண்டும். ஆனால் அரசியலில் நேரடியாக ஈடுபடுவது விரும்பத்தக்கதல்ல. முதியவர்கள் ஈடுபட வேண்டிய அரசியலில் மாணவர்கள் ஈடுபட்டால் பெரும்பாலானோர்க்குப் படிப்பு பாழாகிவிடும். தலைமுறை தலைமுறையாகக் கல்லூரிப் படிப்பு பெறுகிறவர்கள், கல்வியில் தவறிவிட்டால், பெரிய நட்டம் வராது. இப்போதுதான் துளிர்த்துக் கல்லூரிக்கு எட்டியுள்ள இளைஞர்களின் கவனம் அரசியலால் சிதறுண்டால், 'படிப்புப் பாழடையும்; அவநம்பிக்கைத் தொடரும்; பின்தங்கிய மக்கள் முன்னேறும் வாய்ப்புத் தவறிப் போகும். ஆகவே, மாண்வர்கள் அரசியலில் நேரடியாக ஈடுபடக் கூடாது.

**கே: 'இப்போதைய கல்வியின் அடிப்படை, அமைப்பு முறை பற்றி மறு பரிசீலனை செய்யவேண்டுவது அவசியம்' என்று இந்திய அணுசக்திக் கமிஷன் தலைவர் டாக்டர் எச். என். சேத்னா அவர்கள் கூறியிருக்கிறாரே அதுபற்றித் தங்கள் கருத்தென்ன ?**

ப : நம்முடைய கல்வியில் எல்லா நிலையிலும் வேலை அனுபவத்திற்கு இடங் கொடுக்க வேண்டும். இப்போது எந்த நிலையிலும் அதற்கு வழியில்லை. நம் கல்வி முறையை மாற்றும் போது, எவ்வளவு செலவானாலும், வேலைப் பயிற்சிக்கு இடம் வைக்க வேண்டும். அப்படிப் பட்ட கல்வி நாட்டுக்குப் பயன்படும்.

—பேட்டி : பி. வி. ஜி.

# காலணிகள் வாங்க உரிய காலம்

குறைந்த விலையில் நீடித்து உழைக்கும்
சிறந்த காலணிகள், கைப் பைகள்,
பணப் பைகள், பெல்ட்டுகள், பெட்டிகள்
தமிழகம் முழுவதிலும் அமைந்துள்ள 180

**காதி கிராப்ட்** களில்
கிடைக்கும்.





# சோதனையைச் சாதனையாக்குவோம்!

**1974** தஞ்சைக்கும், தமிழகத்திற்கும் சோதனை ஆண்டு! ''மாரி பொய்ப்பினும் தான் பொய்யா, கங்கு கரையின்றி கட்டுக்கடங்காமல் கரை புரண்டு ஓடும் காவிரி பாயும் தஞ்சை''—இவை, மாணவனாக வேளாண்மைக் கல்லூரியில் பயிலும் பொழுது, பேச்சுப் போட்டியில் நான் கூறிய வார்த்தைகள்! தஞ்சையில் பணியாற்றும் பொழுது காவிரியையும், அதன் கிளை நதிகளையும் பார்க்கும் பொழுதெல்லாம் இவ்வார்த்தைகள் மீண்டும் மீண்டும் மனதிலே ஒலித்து உள்ளத்தில் ஒரு இன்ப உணர்வைத் தந்து கொண்டேயிருந்தன! அதே காவிரி 1974-ல் அளித்த தோற்றம், தந்தையை இழந்தபின் என் தாயை முதன் முதலில் பார்த்த பொழுது என் மன நிலை எவ்வாறு இருந்ததோ அதே நிலையில் இருந்தது; இரண்டுக்கும் வேறுபாடே இல்லை!

இச்சோதனை ஆண்டிலும் தஞ்சை வாழ் வேளாண்மை மக்களில் பலர் சாதனைகள் புரிந்திருக்கிறார்கள். ஆனி கழிந்து, ஆடி, ஆவணியில் குறுவையை நட்ட இந்த ஆண்டு கூட மாவுக்கு 20 அறுத்து அடித்தவர்கள் எண்ணற்றவர்கள் உள்ளனர்! முறைத் தண்ணீர் பாய்ச்சி, ''என்று அடுத்த 'முறை நீர்' வரும்?'' என்று திட்டவட்டமில்லாத நிலையிலும்-சம்பா பட்டத்திலும்-ஏக்கருக்கு ஒன்றரை டன்னுக்குக் குறையாமல் மகசூல் எடுத்தவர்களும் உண்டு! ''தாளடியா? நினைத்துக்கூட பார்க்க முடியாது; சம்பா பயிரைக் காப்பாற்றுவதே கடினம்'' என்று இருந்த நிலையிலும், மற்றவர்கள் சம்பா அறுக்கும் அதே நேரத்தில் தாளடியை அறுத்து தலை நிமிர்ந்து நின்றவர்கள் அநேகர்! இச்சோதனைக் காலத்திலும், இவர்கள் மட்டும் எவ்வாறு நல்ல விளைச்சல் கண்டிட முடிந்தது? எண்ணிப் பார்த்திடல் வேண்டாமா? துன்பம் கற்றுத் தருவதைப் போல, இன்பம் பாடம் கற்றுத் தருவதில்லையே!

### முதல் படிப்பினை

நமக்குத் தெரியும் ஆனி 15-ஆம் தேதிக்குப் பின் நாற்று விட்டால், குறுவையில் மகசூல் குறையும் என்று. இவ்வாறு பிந்திய பயிர் மழையில் அகப்பட்டுக் கொள்ளும். மழையில் அகப்படா விட்டாலும், கால நிலை மாறுதலினால் மகசூல் குறையும். எனவே, சோதனை மிகுந்த 1974-ஆம் ஆண்டு நமக்குக் கற்றுத் தந்த முதல் படிப்பினை, "குறுவைக்கு ஆனி 15-க்கு முன் நாற்று விடவேண்டும்; இவ்வாறு நாற்று விடுவதற்கு நீர்வசதி தேவை; நில நீரை வைத்து நாற்றுப் பரவுவதைக் காலத்தே செய்யவேண்டும்; இதற்கு குழாய் கிணறு வசதி செய்து கொள்ள வேண்டும்'' என்பதாகும்.




**அ. வேங்கடராமன்,**
பி. எஸ்சி (வே)., எம். எஸ்.,
**இயக்குநர்,**
**வேளாண்மைத் துறை.**


### 2-வது படிப்பினை

ஒவ்வொரு இரகமும் ஒவ்வொரு தன்மை உடையது. ஆனால் எல்லா இரகங்களுமே சரியான பட்டத்தில் நடாவிட்டால் குறைவான மகசூல் தான் கொடுக்கும். ஆனால் சில இரகங்கள் ஏனைய இரகங்களை விட காலதாமதத்தை-பிந்திய பட்டத்தை-ஓரளவுக்குத்தாங்க வல்லது. 1975-ல் குறுவையில் நட்ட எல்லா இரகங்களிலும் மிகவும் குறைவான மகசூல் தந்தது 'ஆடுதுறை-27'. அதிக மகசூல் தந்தது 'ஆடுதுறை-31' இவற்றிற்கு இடைப்பட்ட நிலையில் விளைச்சல் தந்தவை 'கருணா'வும், 'கண்ணகி'யும். இவற்றில் 'கண்ணகி' ஏனையவற்றை விடக் குறைந்த வயது. எனவே, 1974-ஆம் ஆண்டு தந்த இரண்டாவது படிப்பினை, **''ஆடுதுறை-27 ரகத்தை இனிமேல் பயிர் செய்யக்கூடாது; 'ஆடுதுறை 31', 'கண்ணகி' ஆகியவற்றையே பயிர் செய்யவேண்டும்; வருகிற குறுவைக்கு இப்பொழுதே இந்த இரக நெல் விதைகளை வாங்கி வைத்துக் கொள்ள வேண்டும்''** என்பதாகும்.

### 3-வது படிப்பினை

''குறுவையில் இரண்டு முறை மருந்தடித்தேன்; இருப்பினும் பூச்சித் தொல்லை இருந்தது'' என்று கூறியவர்களும், ''நான் புகையான் தோன்றுகிறதா என்று பார்த்துக் கொண்டேயிருந்தேன். புகையான் இலை சாகத் தென்பட்டவுடன் இரண்டு முறை மருந்தடித்தேன். நல்ல மகசூலும் பெற்றேன்'' என்று கூறியவர்களும் உண்டு கடந்த ஆண்டில்!

குறுவையில் நமக்கு விரோதி புகையான். சிறிது கவனக் குறைவாக இருந்தாலும், இந்தப் பூச்சி மளமளவென்றுப் பெருகி பயிரைக் குற்றுயிராக்கி விடும். எனவே 1974-ஆம் ஆண்டில் கற்ற மூன்றாவது படிப்பினை, 'குறுவையில் புகையானைக் கட்டுப்படுத்துவதில் கவனம் செலுத்த வேண்டும்; தண்டு உருளும் சமயம் முதல், பயிரின் அடிபாகத்தை நன்றாகக் கவனித்து, பரிசோதித்துத் தக்க தருணத்தில் மருந்தடிக்க வேண்டும்'' என்பதாகும்.

### 4-வது படிப்பினை

"வரப்புயர'' என்பது பழைய வாழ்த்தொலி. நீர் உயர நெல் உயரும்; ஆனால் உயர்ந்த நெற் பயிர் சாயும்! நமக்கு வேண்டியது இட்ட உரத்தை ஏற்று, சாயாமல் நின்று, அதிக மகசூல் தரவல்ல நெல்! அதிக மகசூலுக்கு நெல் அதிகமாக சிம்பு(தூர்) கட்ட வேண்டும். ஒவ்வொரு சிம்பிலும் அதிக மணிகள் பிடிக்க வேண்டும். நெல் தூர் கட்டி வெளியிடும் சமயத்தில், குறைவாக நீர் இருந்தால் இளம் சிம்புகள் நன்றாக வெளிவரும். இளம் பயிர் பருவத்திலும், பூத்து மணி பிடிக்கும் தருணத்திலும் நெல்லுக்கு நீர் தாராளமாக வேண்டும். ஏனைய நேரங்களில் இரண்டு அங்குல நீரோ அல்லது அதற்குக் குறைவாகவோ இருந்தாலும் போதும். கடந்த ஆண்டு 'முறை நீர்' பாய்ச்சுகிறோமே, மகசூல் குறைந்து விடுமோ என்று பயந்தவர்களில் பலர் மகசூல் குறையாதது கண்டு வியந்தனர்! எனவே வறட்சி நமக்குக் கற்றுத் தந்த நான்காவது படிப்பினை, "இருக்கும் நீரைக் கவனமாக உபயோகித்தால், குறைந்த நீரை வைத்துக் கொண்டே, நிறைய மகசூல் எடுக்கலாம்; நீர் பாய்ச்சுவதில் கவனம் வேண்டும்; உரமிடுவதைப் போல், கருத்துடன் செயல்பட வேண்டிய பணி நெல்லுக்கு நீர் பாய்ச்சுவது'' என்பதாகும்.

நீரைக் குறைத்து பயன்படுத்த வேண்டுமானால், நாம் கவனம் செலுத்த வேண்டிய பணிகள் இரண்டு உண்டு. நிலத்தைச் சமப்படுத்திய பின் நாற்றுக்களை நட வேண்டும்; களை எடுப்பதில் தனிக்கவனம் செலுத்த வேண்டும். இவை இரண்டையும் சரிவர செய்யா விட்டால், மகசூல் மிகவும் குறையும். இவற்றைக் கட்டாயமாக கருத்தில் கொள்ள வேண்டும்.




### 5-வது படிப்பினை

சம்பா சாதாரணமாக ஆறு மாதம் பயிர். தாளடியிலும் 160 நாள் கொண்ட 'கோ. 25' நெல்லை பயிரிடுவதுதான் பழக்கம். பிப்ரவரியிலும், காவிரி நீர் கிடைக்கும் என்ற எண்ணத்தில், இவ்வாறு நீண்ட காலப் பயிர் இரகங்களைப் பயிரிடும் பழக்கம் நம்மிடையே உள்ளது. 'ஐ. ஆர். 8', 'ஐ. ஆர். 20' போன்ற 130-140 நாட்கள் கொண்ட இரகங்களைத் தேர்ந்தெடுத்து சம்பா, தாளடி பட்டங்களில் பயிர் செய்தவர்கள் தண்ணீர் தட்டில் அநேகமாக அவதியுறாமல் காலத்தே அறுவடை செய்து அதிக மகசூல் எடுத்தனர். எனவே, வறட்சி நமக்குக் கற்றுத் தந்த ஐந்தாவது படிப்பினை, "தாளடியில் 160 நாள் பயிரைவிடுத்து 130-140 நாள் வயது கொண்ட 'ஐ.ஆர்.20' போன்ற ரகத்தை பயிர் செய்திடல் வேண்டும். சம்பாவிலும் வயது குறைந்த நெல் வகைகளைப் பயிர் செய்யவேண்டும். தஞ்சை சம்பாவுக்கு ஏற்ற இரகம் குறித்து இன்னும் தீவிர ஆராய்ச்சித் தேவை'' என்பதாகும்.

கடலோரப் பகுதிகளில் நிலம் களர் தன்மை கொண்டது. சாதாரணமாக இப்பகுதியில் அதிக மழை பெய்யும். எனவே, களரின் பாதிப்பு இருப்பதில்லை. கடந்த ஆண்டு மழை பொய்த்து விட்டதால், களரால் தொந்தரவு அதிகம். இந்நிலையிலும் 'ஐ.ஆர். 20' நல்ல மகசூல் தந்துள்ளது. 'ஐ.ஆர்.20'-ஐத் தெரிந்தெடுப்பதில் இந்த பயனும் இருக்கிறது.

### 6-வது படிப்பினை

"சம்பாவிலும்" தளாடியிலும் நன்றாக பயிர் மணி பிடித்திருக்கிறது. நல்ல மகசூல் கிடைக்கும் என்றிருந்தேன். ஆனால் நல்ல பலன் கிடைக்கவில்லை. கறுக்காய் அதிகமாகி விட்டது'' என்று கூறியவர்களும் உண்டு! இதற்கு காரணம் இலைப்புள்ளி நோய். மார்கழி, தை மாதங்களில் திடீரென்று வெப்பநிலை குறைந்து, குளிர் ஆரம்பிக்கும் பொழுது, இலைப்புள்ளி நோய் திடீரென்றுதோன்றி விடுகிறது. இதற்குக்காலத்தே மருந்தடிக்க வேண்டும்."இலைப்புள்ளி நோயின் தாக்குதலுக்கு ஈடு கட்ட முடியாத 'பொன்னி' போன்ற இரகங்களை விடுத்து, 'ஐ.ஆர். 20' போன்ற இரகத்தை பயிர் செய்ய வேண்டும்?" இது, 1974-ஆம் ஆண்டு நமக்குக் கற்றுத் தந்த ஆறாவது படிப்பினையாகும்.

### 7-வது படிப்பினை

நில நீரைப் பயன்படுத்த குழாய்க் கிணறுகள் அமைத்தால் குறுவையைக் காலத்தே பயிர் செய்வதுடன், தளாடிக்கும் தண்ணீர் தட்டுக் காலங்களில்- தாராளமாக வேண்டிய நேரத்தில்-நீர் பாய்ச்சலாம். கோடையிலும் பணப்பயிர் நன்கு பயிர் செய்திடலாம். "எனவே, எல்ல வற்றிற்கும் மேலாக நம் மனதில் நிற்க வேண்டியது எங்கெல்லாம் முடியுமோ, அங்கெல்லாம் குழாய்க் கிணறுகள் அமைத்துக் கோடையிலும் பயிர் செய்திடல் வேண்டும்." இது வறட்சி நமக்குக் கற்றுத் தந்த ஏழாவது படிப்பினையாகும்.

வரலாறு காணாத வறட்சியின் பிடியில் துவளும் தமிழகத்திற்கு இன்று உயிர் நிலையாக அமைந்துள்ள தஞ்சை மாவட்டம்! இன்று நிலவும் வறட்சியிலும்-காவிரி வறண்டு மேல் மழை பொய்த்து, கபிலை கொண்டு நீர் இறைக்கும் நிலைக்குத் தஞ்சைவேளாண்மை ஆளாகியும்-நம் மகசூல் அதிகமாகக் குறையாததற்குக் காரணம், தஞ்சை வாழ் வேளாண் பெருங்குடி மக்களின் உழைப்பும், "கருணா'', "கண்ணகி'', "ஐ.ஆர். 20'', 'ஆடுதுறை-31' போன்ற இரகங்களை உறுதியான நெஞ்சுடன் அவர்கள் வேளாண்மை செய்ததுமே! இதே உற்சாகத்துடன், சோதனை காலத்தே கற்றுத் தெளிந்த பாடங்களை மனதில் கொண்டு, புதிய இரகங்களையும், உத்திகளையும் இன்றைவிட இன்னும் அதிகமாகப் பயன்படுத்தி உழைத்திடுவோம்! தமிழக மக்களுக்கு என்றும் வயிறார சோறு தந்திடுவோம்! சோழவளநாட்டின் பெயரை நிலை நாட்டிடுவோம்!

வருகிற வேளாண்மை ஆண்டு வளமானதாக இருக்கட்டும்; அன்னை காவிரி மீண்டும் கரை புரண்டு ஓடட்டும்! தமிழகத்தின் வளம் பெருகிடட்டும்!

வணக்கம்.

# போதுமான அளவு உரம் கிடைக்கவில்லையே என்ற கவலை வேண்டாம்.

# கிடைக்கின்ற அளவு உரத்தைக்கொண்டே நல்ல மகசூல் பெறலாம்.

## இதோ அதற்கான 11 வழிமுறைகள்:

### 1. உரமிடுவதில், பாசன நிலங்களுக்கு முதலிடம் அளியுங்கள்

மானாவாரியைவிட பாசன நிலங்களில் உரங்கள் அதிக பலனைத் தருகின்றன. அதிலும் எங்கு பாசன நீர் உபயோகத்தைத் தகுந்த முறையில் கட்டுப்படுத்த முடியுமோ அங்கு உரங்கள் மேலும் அதிக பலனைத் தருகின்றன. (உதாரணமாக, கால்வாய்ப் பாசனத்தைவிட கிணற்றுநீர்ப் பாசனத்தை நன்கு கட்டுப்படுத்தலாம். ஆதலால், கிணற்றுநீர்ப் பாசன நிலங்கள் அதிக மகசூலை கொடுக்கும்.) உப்பு அல்லது களர் இல்லாத மற்ற நிலங்களுக்கே உரமளியுங்கள்.

### 2. முக்கியமாக உயர் விளைச்சல் ரகங்களுக்கு உரமிடுங்கள்

ஏனென்றால் உரமிடுதலுக்கு உயர் விளைச்சல் ரகங்கள், சாதாரண ரகங்களைவிட அதிக மகசூலைக் கொடுக்கின்றன. இதனால், உங்கள் முதலீட்டிற்கு மொத்தத்தில் அதிக லாபம் கிடைக்கும்.

### 3. கூடியமட்டில் அதிக நிலப்பரப்பில் உபயோகியுங்கள்

சிபாரிசின்படி உரமிடுவதற்கு போதிய உரம் கிடைக்காத நிலையில், உரமிடும் விகிதத்தைக் குறைத்து, முடிந்தமட்டும் அதிக நிலத்திற்கு உரமிட்டால் மொத்தத்தில் அதிக பலனைப் பெறலாம். (உதாரணம்: உங்களுக்கு 5 ஏக்கர் பாசன நிலம் இருப்பதாக வைத்துக் கொள்வோம். இதற்கு சிபாரிசுப்படி 1000 கிலோ உரம் தேவைப்படுகிறது. ஆனால் 500 கிலோ மட்டுமே உங்களுக்குக் கிடைக்கிறது. இந்நிலையில், இந்த 500 கிலோவை சிபாரிசுப்படி 2½ ஏக்கருக்கு மட்டும் அளிப்பதைவிட உங்கள் 5 ஏக்கருக்குமே உபயோகித்தால் மொத்தத்தில் அதிக மகசூல் கிடைக்கும்.) இவ்வாறு கிடைக்கின்ற அளவை அதிக பரப்பில் உரமிடும்போது உரமிடும் அளவு, சிபாரிசு அளவில் மூன்றில் ஒரு பங்குக்கும் குறைவாக இருத்தலாகாது.

### 4. முக்கிய பயிர்களுக்கு முதலிடம் கொடுங்கள்

முதலாவதாக உணவு தானியங்கள், இரண்டாவதாக எண்ணெய் வித்துக்கள், மூன்றாவதாக பருத்தி, நான்காவதாக கரும்பு என்ற முறைப்படி உர அளவை ஒதுக்குங்கள்.

### 5. சமச்சீர் உரமிடுதல் மூலம் அதிக பலன் பெறுங்கள்

பயிருக்குத் தேவையான ஊட்டச்

சத்துக்களை, மண்ணிலிருந்தும் மற்றும் ரசாயன உரங்களிலிருந்தும் சேர்ந்து தேவையான அளவுகளில் கிடைக்கச் செய்தலே சமச்சீர் உரமிடுதல் என்பதாகும். இதற்கு முதலில் உங்கள் நிலத்தின் மண்ணை பரிசோதனை செய்து கொள்ளுங்கள். பின்பு சோதனை முடிவுகளைப் பொறுத்து தழை, மணி, சாம்பல் சத்துக்களை சரியான அளவில் பயிருக்கிடுங்கள். இதனால், உரமும் உங்கள் பணமும் மீதமாகும்; அதிக மகசூலும் கிடைக்கும்.

மதராஸ் பெர்ட்டிலைசர்ஸ் நிறுவனம் அளிக்கும் 'துரித' மண் பரிசோதனைச் சேவையைப் பயன்படுத்திக் கொள்ளுங்கள்.

## 6. காலத்தில் முறைப்படி உரமிடுங்கள். நீரைத் திறம்பட பாய்ச்சுங்கள்

மணிச்சத்தையும் சாம்பல் சத்தையும் அடியுரமாக உபயோகியுங்கள். தழைச்சத்தில் ஒரு பங்கை அடியுரமாகவும் மற்றொரு பங்கை மேலுரமாகவும் இடுங்கள். என்.பி.கே. காம்ப்ளெக்ஸ் உரங்களை அடியுரமாகவோ அல்லது பயிர் நட்ட ஒரு மாதத்திலோ இடவேண்டும்.

மேலுரமாக இடும் யூரியாவை பயிரின் வகை, வயது மற்றும் மண்ணின் ஈரம் — இவற்றைப் பொறுத்து முடிந்தவரை பல தடவைகளில் பிரித்தளியுங்கள்.

பாசன நீரை வடித்த பின்பே யூரியாவை மேலுரமாக இட்டு மண்ணுடன் கலக்க வேண்டும். உரமிட்ட 2 அல்லது 3 நாட்களுக்குப் பின்பு நீர் பாய்ச்சுங்கள்.

## 7. களைகளை வேரோடு நீக்குங்கள்

பயிருக்கு அளிக்கப்படும் உரத்தில் கணிசமான பங்கை, களைகளே எடுத்துக் கொள்கின்றன. அதனால் எப்போதும், முக்கியமாக பயிர் வளர்ச்சியின் முதல் 40 நாட்களின் போது, நிலத்தில் களைகளே இல்லாமல் பார்த்துக்கொள்ளுங்கள்.

## 8. பூச்சி, பூஞ்சாள நோய்களை அண்டவிடாதீர்கள்

உங்கள் பகுதியில் வழக்கமாக பயிர்களைத் தாக்கும் பூச்சி மற்றும் நோய்களை எதிர்த்து முன் கூட்டியே பயிர் பாதுகாப்பு முறைகளை மேற்கொள்ளுங்கள். மற்ற பூச்சி, பூஞ்சாள நோய்கள் பயிர்களில் கண்டவுடனே தகுந்த நடவடிக்கை எடுத்துக்கொள்ளுங்கள். இதனால் அளிக்கும் உரத்திலிருந்து அதிக பயன் பெறுவீர்கள்.

## 9. பருப்பு வகைகளை சாகுபடி செய்யுங்கள்; உரத் தேவையைக் குறையுங்கள்

உங்கள் பயிர் சுழற்சியில் நிலக்கடலை, பட்டாணி, உளுந்து, பாசிப்பயறு அல்லது பசுந்தழை இவற்றில் ஏதாவதொன்றை பயிரிடுங்கள். இப்பயிர்கள் அடுத்து வரும் பயிருக்கு கணிசமான அளவு தழைச்சத்தை கிடைக்கச் செய்கின்றன.

மேலும், 'பாக்டீரியல் கல்சர்' கிடைத்தால், பருப்பு வகை விதைகளை அதனுடன் கலந்து பின்பு விதையுங்கள். இதனால் அப்பயிர் நன்கு வளர்ந்து அதிக மகசூல் தரும்.

## 10. பருவத்தைப் பொறுத்து உரத்தை ஒதுக்குங்கள்

கோடை சாகுபடிப் பயிருக்கு, மழைக்காலப் பயிருக்கு அளிப்பதைவிட, அதிக அளவு உரத்தை அளியுங்கள். உதாரணமாக, கோடை நெற்பயிருக்கு, மழைக்கால நெல்லுக்கு அளிப்பதைவிட, அதிக அளவு உரமிடுங்கள்.

## 11. ரசாயன உரத்தைத் தவிர இயற்கை எருவையும் உபயோகியுங்கள்.

உங்கள் பண்ணையில் கிடைக்கும் வைக்கோல், கழிவுப் பொருட்கள், இலைகள், சருகுகள், சாணம் இவற்றை வீணாக்காமல் சேகரித்து 'கம்போஸ்ட்' தயாரியுங்கள்.

முடிந்தால், மாட்டு சாணத்திலிருந்து எரிவாயு தயாரிக்கும் சாதனம் ஒன்றை உங்கள் வீட்டில் நிறுவுங்கள். அது, சமையல் மற்றும் வீட்டு விளக்குகளுக்கு வேண்டிய எரிபொருளையும், பயிர்களுக்கு வேண்டிய எருவையும் கொடுக்கும்.

**மேலும் விவரங்களுக்கு, இன்றே உங்கள் அருகாமையிலுள்ள மதராஸ் பெர்ட்டிலைசர்ஸ் நிறுவனத்தாரின் பீல்டு ஆபீசரை சந்தியுங்கள்; அல்லது, வேளாண்மைத்துறை அலுவலர்களை அணுகுங்கள்.**

*விவசாயிகள் நலனை முன்னிட்டு வெளியிட்டோர்:*

**விஜய் 17-17-17, விஜய் 14-28-14, விஜய் யூரியா உரங்கள் தயாரிப்பாளர்களான**

**மதராஸ் பெர்ட்டிலைசர்ஸ் லிமிடெட்**

மணலி, சென்னை 600 068

**உழவர் துணைவன்**

VIJAY

MADRAS FERTILIZERS

**பொங்கும் செல்வம், விஜய்**

# கண்ணைக் கவரும் கைவினைப் பொருள்கள்



புல், மூங்கில், பிரம்பு!

இந்த மூன்று பெயர்களையும் ஒன்ருகக் கேட்டாலே நம் நினைவுக்கு வருவது கூடைகள்தான்! புது டில்லியில் அசோகா ஓட்டலில் நடந்து வரும் கண்காட்சியில் பிரம்பு, புல், மூங்கில் ஆகியவற்றில் செய்த அழகிய கூடைகளும், மற்றும் பல கைவினைப் பொருட்களும் காட்சியாக வைக்கப்பட்டிருக்கின்றன. நமது நாட்டில் கிராமப் பகுதிகளிலுள்ள எளிய கைவினைஞர்கள் தங்கள் கற்பனைத் திறனைப் பயன்படுத்தி, கண்கவர் பொருட்கள் பலவற்றை முடைகிருர்கள்.

இந்தக் கண்காட்சியில் கூடைகள் தவிர,தரைவிரிப்புகள், வீடுகளில் பயன்படுத்தும் சாமான்கள், நகைகள், வளையல்கள், கழுத்துச் சங்கிலி, தொட்டில், பூக்கூடைகள் போன்று ஏராளமான கைவினைப் பொருட்கள் இடம் பெற்றிருக்கின்றன.

அனைத்திந்திய கைவினைப் பொருள் வாரியம், நாட்டின் மூலை முடுக்குகளில் திறமை வாய்ந்த கைவினைஞர்கள் பலர் இருப்பதைக் கண்டுபிடித்து, அவர்கள் ஆற்றலை உலகறியச் செய்திருக்கிறது.



தமிழ்நாட்டில் திருநெல்வேலி, மணப்பாடு, நாகூர், இராமநாதபுரம் ஆகிய இடங்கள் கூடை முடியும் தொழிலுக்குப் பெயர் போனவை. அலகாபாத் ஆகிய இடங்களிலும் கூடை முடையும் தொழில் மிகவும் பிரபலமடைந்திருக்கிறது.

அசாம், திரிபுரா, வங்காளம் ஆகிய மாநிலங்களில் செய்யப்படும் கூடைகள், அழகிய பூவேலைகளுக்கும், கண்கவர் வண்ணங்களுக்கும் பெயர் போனவை, மணிகள், சோழிகள் ஆகியவற்றைக் கொண்டு இந்தக் கூடைகளை அலங்கரிக்கிருர்கள். பீகார், பாட்ஞ, முசாபர்பூர் ஆகிய இடங்களில் பிளந்த மூங்கில்களைக் கொண்டு கூடைகளைப் பின்னுகிருர்கள். அரியாஞவில் பேரீச்ச மரத்தின் ஓலைகளைக் கொண்டும், காஷ்மீரில் வில்லோ மரத்தின் இலைகளைக் கொண்டும், கேரளத்தில், கோரைப் புற்களைக் கொண்டும் கூடைகள் செய்கிருர்கள்.

நமது நாட்டில் சுமார் 15 இலட்சம் பேர் இந்தத் தொழிலில் ஈடுபட்டிருக்கிருர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.



சட்டப்பேரவையில்

# கேள்வி நேரத்தில் கிடைத்த தகவல்கள்

**காவல் நிலையங்களுக்குக் கம்பியில்லாத் தந்தி**

தமிழகத்தில் இதுவரை 426 காவல் நிலையங்களுக்குக் கம்பியில்லாத் தந்தி (Wirless) வசதி செய்யப்பட்டுள்ளது. 1975-76—ஆம் ஆண்டுக்குள் மீதியுள்ள 390 காவல் நிலையங்களுக்கும் கம்பியில்லாத் தந்தி வசதி செய்வதற்குத் திட்டம் உள்ளது.

**புதிய தொடக்க நல்வாழ்வு நிலையம்!**

கோவை மாவட்டம் அந்தியூர் ஒன்றியத்தில் கருவல் வாடிப்புதூரில் ஒரு தொடக்க நல்வாழ்வு நிலையம் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளது.

**ஓசூரில் புதிய தொழிற்சாலை!**

'ஆசியன் பேரிங்குகள் லிமிடெட்' என்ற கூட்டுத்துறை நிறுவனம், ஜப்பானிய தொழில் நுட்ப உதவியுடன், ஓசூரில், ஆண்டு ஒன்றுக்கு 5 லட்சம் உருளை பேரிங்குகள் தயாரிக்கும் தொழிற்சாலை ஒன்று நிறுவத் திட்டமிடப்பட்டுள்ளது. இது 1976-ஆம் ஆண்டு இறுதிக்குள் உற்பத்தியைத் துவங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

**புதிய மாநகராட்சிகள்!**

கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி நகராட்சிகளை மாநகராட்சி (Corporation) யாக்கும் கருத்து அரசின் பரிசீலனையில் உள்ளது.

**எம். எல். வகுப்பில் அரிசன மாணவர்கள்!**

1973-74 கல்வி ஆண்டில், எம். எல். வகுப்புகளுக்கு சட்டக் கல்லூரியிலும், சென்னைப் பல்கலைக் கழகத்திலும் மூன்று தாழ்த்தப்பட்ட மாணவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.

**கண்பார்வையற்றவர் கல்லூரி விரிவுரையாளர்**

கண் பார்வையற்ற பட்டதாரி ஒருவர் 1974–ஆம் ஆண்டு ஜூலை அக்டோபர் திங்களுக்கு இடையில் கல்லூரியில் விரிவுரையாளராக அமர்த்தப் பட்டுள்ளார்.

**சூரியகாந்தி எண்ணெய் ஆலை!**

சூரிய காந்தி விதைகளைப் பதப்படுத்தும் இரண்டு ஆலைகளை (எண்ணெய் பிழியும் ஆலைகள்) நிறுவவும், அவற்றில் ஒன்றைக் கோயம்புத்தூர் கூட்டுறவு மாவட்ட விற்பனை வழங்கு சங்கத்தால், ஒண்டிப்புதூரிலும், மற்றொன்றைத் தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை சம்மேளனத்தால் விருத்தாசலத்திலும் நிறுவ அரசு ஒப்புதல் அளித்துள்ளது. விரைவில் வேலை முடிவடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

**புளியமரம் வளர்ப்பு!**

தமிழகத்தில் புளிய மரங்களை அதிகமாகப் பயிரிடுவதற்குப் பல முயற்சிகள் எடுத்து வரப்படுகின்றன. ஐந்தாண்டுத் திட்டங்களிலும், மற்றும் வறட்சி நிவாரணப்பணித் திட்டங்கள் மூலமாகவும் கணிசமான அளவில் புளிய மரங்கள் பயிர் செய்யப்பட்டிருக்கின்றன. 1973-74-ஆம் ஆண்டு முடிய 4,225·87 எக்டேர் பரப்பில் புளிய மரங்கள் உற்பத்தி செய்யப்பட்டிருக்கின்றன. 1974-75-ஆம் ஆண்டில் சுமார் 331·00 எக்டேர் பரப்பில் புளிய மரங்கள் உற்பத்தி செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**பேருந்துகளில் கம்பியில்லாச் செய்திக்கருவி**

தமிழக அரசினுல் நடத்தப்படும் நெடுந்தூர விரைவுப் பேருந்துகளில் எடுத்துக்காட்டாக சென்னைக்கும் திருச்சிராப்பள்ளிக்கும் அல்லது சென்னைக்கும் மதுரைக்குமிடையே ஓடும் விரைவுப் பேருந்துகளில் - கம்பியில்லாச் செய்திக் கருவிகளைக் பொருத்துவது என்றும், இதனைச் சோதனை ஏற்பாடாகக் கொண்டு, பின்னர், மாநிலத்திலுள்ள பிற பகுதிகளுக்கும் நீட்டிப்பது என்றும் கருதப்பட்டுள்ளது.

**பேருந்து வழித்தடங்கள்!**

தஞ்சை மாவட்டத்தில் 94 புதிய பேருந்து வழித்தடங்களைத் துவக்க அரசு திட்டமிட்டுள்ளது.

**டீசல் பம்ப்புகளின் வாங்கக் கடன்!**

மின் வாரியத்திற்கு ஏற்பட்டிருக்கும் நிதி முடக்கம், மூலப் பொருள்கள் கிடைக்கப் பெருமை, மற்றும் மின் கட்டுப்பாடு ஆகியவற்றின் காரணமாக மின் விசையேற்றங்களுக்கு மின் சாரம் வழங்குவதில் தாமதம் ஏற்பட்டிருக்கின்றது. இதன் காரணமாக விவசாயிகள் மின் விசையேற்றங்களைப் பயன்படுத்த இயலாமையினுல், நிலவள வங்கிக் கடனைத் திருப்பிக் கட்ட முடியாமல் போய்விடும். இக்காரணத்தினுல் விசையேற்றத்திற்குக் கடன் வழங்குதல், தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டது. டீசல் விசையேற்றங்களுக்கு (Diesel Engines) கடன் இப்பொழுது வழங்கப்படுகிறது.

**புதிய நெடுஞ்சாலை!**

இராமநாதபுரம் மாவட்டம் திருப்புவனம் புல்லாக்கரை நெடுஞ்சாலை ரூபாய் 75,000 செலவில் செப்பனிடப்பட்டுள்ளது.

# புதுப் பொலிவு பெறும் புற நோயாளிகள் பகுதி

ஆடவர் ஒருபுறமும், மகளிர் ஒரு புறமும் வரிசை வரிசையாக வந்து கொண்டிருக்கின்றனர்.

முன்புபோல் நான் முந்தி நீ பிந்தி என்ற கூச்சல் குழப்பம் இல்லை.

காலையில் வந்து கால் கடுக்கக் காத்திருந்து, வெறுமனே வீடு திரும்பிப் போகவும் தேவையில்லை.

எங்கே?

சென்னை அரசினர் பொது மருத்துவமனையில்தான்!

சென்னை அரசினர் பொது மருத்துவமனை இன்று புதுமை பெற்று விளங்குகின்றது.

நோயாளிகள் மணிக்கணக்காகக் காத்திராமல் உடனே மருந்து வாங்கிச் செல்லும் வகையில் புறநோயாளிகள் பகுதியில் ( Out-Patient Dept., ) இன்று துரித ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன.

புதிய சீட்டு வாங்கும் பகுதியில் நோயாளிகள் நீண்ட நேரம் காத்திராமல் ஒரு சில நிமிடங்களில் சீட்டு வாங்கிச் செல்வதைப் பார்க்கிறோம்.

எழுதப் படிக்கத் தெரிந்தவர்கள், தானே சீட்டு எழுதிக் கொள்ளவும் இங்கே வசதி செய்யப்பட்டிருக்கிறது. ஒரு மேசையில் புதிய சீட்டுக்கத்தை வைக்கப்பட்டிருக்கிறது. வரிசையாக வரும் நோயாளிகள் தாமே தம் பெயரை எழுதிக் கொள்கின்றனர்!

ஒரு நோயாளி காலை ஏழு மணிக்கு வருகிறார் என்றால், அவர் பரிசோதனை செய்து கொண்டு மருந்து வாங்கிச் செல்லப் பதினைந்து நிமிடமே ஆகிறது!

காலை மணி 6.50

அதோ! பொது மருத்துவமனையின் கண்காணிப்பாளர் டாக்டர் ஏ.எல். அண்ணாமலை அவர்கள் வருகிறார்.

மருத்துவமனையின் ஒவ்வொரு பகுதிக்கும் செல்கிறார். அவருடன் மருத்துவ அலுவலர்கள் செல்கின்றனர்.

நோயாளிகள் காத்திருந்தால் அதற்குரிய காரணத்தைக் கேட்கிறார். மருத்துவர்கள் சரியான நேரத்தில் வந்துள்ளனரா என்றும், சிகிச்சைகள் ஒழுங்காக நடக்கின்றனவா என்றும் கண்காணிக்கிறார். பழைய படுக்கைகளைப் புதியதாகப் போடும்படியும், தேவை

**கண்காணிப்பாளர் திடீரென வருகை தருகிறார்.**





பழைய நோயாளிகளைக் கவனிக்கும் இடம்.

யான இடத்தில் விளக்குகள் பொருத்தும்படியும் உத்தரவிடுகிறார்.

இவர் ஒரு புதிய முறையையும் நடைமுறைக்குக் கொண்டு வந்துள்ளார். அதாவது, சாலைப் போக்குவரத்துப் போல இடதுபக்கம் போகுதலே அது. முன்பெல்லாம் நோயாளிகள் எந்தப் பக்கம் வேண்டுமானாலும் போய் வரலாம். இதனால் அவசரமாகச் செல்பவர்களுக்குத் தொந்தரவாக இருந்தது. அதைத் தவிர்க்கிறது இடதுபக்கம் போகும் இந்தப் புதியமுறை.

முன்பெல்லாம் ஒரு நோயாளி பரிசோதனை செய்து கொண்டு மருந்து வாங்கும் இடத்திற்குச் செல்ல, போவோர் வருவோரையெல்லாம் கேட்டுக்கொண்டு இருப்பார். ஆனால் இப்போது அவர் யாரையும் கேட்டுக் கொண்டு அலைய வேண்டியதில்லை. ஏனென்றால் இப்போது அதற்கொரு யுக்தி கையாளப்பட்டிருக்கிறது. சிவப்பு விளக்குதான் அது! ஆம். சிவப்பு விளக்கு எரியும் இடம்தான் மருந்து கொடுக்குமிடம். எழுதப் படிக்கத் தெரியாத பாமரர்களுக்கு இந்த முறை மிகவும் பயனுள்ளதாக இருக்கிறது.



ஊசி போடும் பகுதி



காது, மூக்கு, தொண்டை சிகிச்சைப் பகுதி

# பொது மருத்துவமனைக்குப் புகழ்மாலை!

இங்கிலாந்திலுள்ள இராயல் மருத்துவக் கல்லூரியின் தலைமை மருத்துவரான டாக்டர் கிராப்டன் அண்மையில் சென்னைக்கு வந்திருந்தார். இவர் சயரோகச் சிகிச்சையில் உலகப் புகழ் பெற்றவர்.

சென்னை மருத்துவக் கல்லூரியில் மருத்துவர்கள் கூட்டத்தில் டாக்டர் கிராப்டன் பேசிக் கொண்டிருந்தபோது திடீரென்று மயங்கி விழுந்தார்.

உடனே அவரைச் சென்னை அரசினர் பொது மருத்துவமனையிலுள்ள தீவிர இருதய சிகிச்சைப் பிரிவுக்குக் கொண்டுபோகப்பட்டு. இப்பிரிவு தலைமை மருத்துவர் டாக்டர் செந்தில்நாதன் மேற்பார்வையில் சிகிச்சை அளிக்கப்பட்டு வந்தது.

பிறகு உடல் நலமடைந்த டாக்டர் கிராப்டன் ஒரு கடிதத்தில் சென்னை அரசினர் பொதுமருத்துவமனையைப் பற்றிப் புகழ்ந்து கூறியிருக்கிறார்:

''தமிழக அரசு என்னை அதன் விருந்தினராக ஏற்று நல்லமுறையில் சிகிச்சை பெற வசதி செய்து கொடுத்ததற்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன் .

''சென்னை மருத்துவ மனையில் எனக்குக் கொடுக்கப்பட்டதைவிட சிறந்த சிகிச்சையை உலகில் வேறு எந்த நாட்டிலும், எந்த மருத்துவமனையிலும் பெறமுடியாது .

''இங்குப் பணிபுரியும் மருத்துவர்களும், செவிலியர்களும் அன்பாகப் பழகுகிறார்கள். திறமையோடு பணியாற்றுகிறார்கள். அவர்களில் பலர் எனக்கு நெருங்கிய நண்பர்களாகி விட்டனர்.''



டாக்டர் கிராப்டன்



சிவப்பு விளக்கு—மருந்து கொடுக்குமிடம்.

பச்சை விளக்கு?

நோயாளிகளைச் சேர்த்துக் கொள்ளுதல்—அதாவது புதிதாக வரும் நோயாளிகளைச் சிகிச்சைக்காகச் சேர்த்துக் கொள்ளும் பகுதியில் பச்சை விளக்கு எரிகிறது.

எலும்பு முறிவுக்கான சிகிச்சைப் பகுதி, பால்வினை நோய்க்கான பகுதி, பல் சிகிச்சைக்கான பகுதி ஆகியவை முன்பெல்லாம் காலை 8.30க்குத்தான் தொடங்கும். ஆனால், இப்போது இந்தப்பகுதிகளெல்லாம் காலை 7 மணிக்கே தொடங்குகின்றன.

அலுவலகத்துக்குப் போகக்கூடிய ஒருவர் காலை 7 மணிக்கு வந்து மருந்துவாங்கிக் கொண்டு உரிய நேரத்திற்குள்ளாகவே அலுவலகம் சென்று விட முடியும்.

முன்பு ஒரே இடத்தில்தான் மருந்து கொடுக்குமிடம் இருந்தது. இப்போது புறநோயாளிகள் பகுதிக்குப் பக்கத்திலேயே மருந்து கொடுக்குமிடம் இருக்கிறது. ஒவ்வொரு பகுதியிலும் சோதனைக்கூடமும் காட்சியளிக்கிறது.



காயத்துக்குத் தையல் போடப்படுகிறது.

புறநோயாளிகள் பகுதியில் புதிய சீட்டு தருகிறார்களல்லவா? இந்தச் சீட்டில் பொறிக்கப்படும் முத்திரை ஒரு வாரத்திற்கு ஒருமுறை மாறும். ஒரு வாரத்தில் சிவப்பு வண்ண முத்திரை; ஒரு வாரத்தில் பச்சை வண்ண முத்திரை; இன்னொரு வாரத்தில் நீல வண்ண முத்திரை; கடைசி வாரத்தில் கறுப்பு வண்ண முத்திரை. ஒரு சீட்டு நான்கு வாரத்திற்கு மட்டுமே செல்லும்.

நோயாளி உரிய நேரத்திற்கு வந்து தாமதமாகச் செல்கிறார் என்று வைத்துக் கொள்வோம். அப்போது இந்தச் சீட்டைப் பார்த்து, யாருடைய கவனிப்பின்மையால் தாமதம் ஏற்பட்டது என்று கண்டுபிடித்துவிடலாம். அதற்கு இந்த முறை நல்ல பலனளித்திருக்கிறது.

புறநோயாளிகள் பகுதியில் ஒரு நாளைக்குச் சுமார் 6000 நோயாளிகள் வருகிறார்கள். ஒரு நாளைக்குச் சுமார் 100 பேர் இம்மருத்துவமனையில் சேர்த்துக் கொள்ளப்படுகிறார்கள். நோயாளிகள் வாரத்தில் எல்லா நாட்களிலும் சேர்த்துக் கொள்ளப்படுகிறார்கள்.

மருத்துவமனையிலுள்ள ஒரு வார்டு



ஒரு நாளைக்கு ஒரு 'யூனிட்' என்ற முறையில் மருத்துவர்கள் பணியாற்றுகின்றனர். ஒரு 'யூனிட்'டில் இரண்டு உதவியாளர்கள், நான்கு மேல்நிலைப் பட்டம் பெற்றவர்கள், எட்டு பயிற்சி பெறும் மருத்துவர்கள் ஆகியோர் இருப்பார்கள்.

மருத்துவமனையிலுள்ள ஒவ்வொரு பகுதிக்கு வெளியிலும் ஆள்தொகைக் கணக்கைக் காட்டும் பலகை (Census Board) ஒன்று பொருத்தப்பட்டிருக்கிறது. இதில் அன்றைய நாளில் வந்த மொத்த நோயாளிகளின் எண்ணிக்கை, சேர்த்துக் கொள்ளப்பட்ட நோயாளிகளின் எண்ணிக்கை முதலான விவரங்கள் எழுதப்படுகின்றன.

மாநில அரசு ஊழியர்களுக்கான ஒரு புறநோயாளிகள் பகுதியும் உள்ளது. இதற்கெனத் தனி மருத்துவர் நியமிக்கப்பட்டுள்ளார். காலை 7 மணியிலிருந்து 11 மணி வரை இப்பகுதி இயங்குகிறது. பத்து நிமிடத்திற்குள் சிகிச்சை பெற்று சென்று விடுவதற்கு ஏற்ப இங்கு வசதிகள் செய்யப்பட்டிருக்கின்றன.

புறநோயாளிகள் பகுதியில் உள்ளுறை மருத்துவ அலுவலர் (Residential Medical officer) மேற்பார்வையில் துணை உள்ளுறை மருத்துவ அலுவலர் ஒருவரும், துணை உள்ளுறை மருத்துவ அலுவலர்-பொறுப்பிலுள்ளவரும் சேர்ந்து பணியாற்றுகின்றனர்.

இவ்வாறு விரைந்து செயலாற்றுகிறது சென்னை அரசினர் பொது மருத்துவமனை.

''பொதுமக்கள் போற்றப் பணி செய்திடுவீர்-பொது மருத்துவமனை புகழ் ஓங்குக!'' என்ற வாசகங்கள் மருத்துவமனையின் எல்லாப் பகுதிகளிலும் காட்சியளிக்கின்றன.

நாமும் அதன் புகழ் ஓங்கிட-பழம்பெரும் மருத்துவமனையின் பெருமையினைப் போற்றிப் பாதுகாத்திட, நம் நல்லாதரவை நல்கிடுவோமாக!

—பி.வி.ஜி.

# சிறு துளி பெரு வெள்ளம்

## தமிழ்நாடு மாநில கூட்டுறவு வங்கியில் முதலீடு செய்யுங்கள்

**டெபாசிட்டுகளுக்கு எங்கள் வட்டி விகிதங்கள் :**

**1. சீசன் டெபாசிட்டுகள் - ரூ 1000/-மும் அதற்கு மேலும்** — வருடத்திற்கு

15 நாட்கள் முதல் 45 நாட்கள் வரை 3.25%

46 நாட்கள் முதல் 90 நாட்கள் வரை 3.75%

**2. தவணை டெபாசிட்டுகள் - ரூ 100/-ம் அதற்கு மேலும்**

| காலம் | வருடத்திற்கு |
|---|---|
| 91 நாட்களிலிருந்து 6 மாதங்களுக்கு குறைவாக | 5.75% |
| 6 மாதங்களிலிருந்து 9 மாதங்களுக்கு குறைவாக | 6.25% |
| 9 மாதங்களிலிருந்து 1 வருடத்திற்கு குறைவாக | 7.25% |
| 1 வருடமும் அதற்கு மேலும் ஆனால் 3 வருடங்களுக்கு குறைவாக | 8.25% |
| 3 வருடங்களும் அதற்கு மேலும் ஆனால் 5 வருடங்கள் வரை | 9.25% |
| 5 வருடங்களுக்கு மேல் | 10.25% |

**3. சேவிங்ஸ் கணக்கு** 5.75%

**4. நடப்பு (current) கணக்கு** வட்டி கிடையாது

TNSC BANK



## தமிழ்நாடு மாநில கூட்டுறவு வங்கி லிமிடெட்,

379, நேதாஜி சுபாஷ்சந்திர போஸ் ரோடு, சென்னை-600 001

தந்தி : 'URBANK' போன் : 20367 (3 லைன்கள்)

டெலக்ஸ் : MS 7225

கிளைகள் : அண்ணா நகர், அண்ணா சாலை (காமதேனு), அண்ணா சாலை (அண்ணா சிலை), அசோக் நகர், பெஸண்ட் நகர், எழும்பூர், காந்தி நகர், கிரீன்வேஸ் ரோடு, ஜவஹர் நகர், கெல்லீஸ், தங்கசாலை, மைலாப்பூர், மைலாப்பூர் குளம், நுங்கம்பாக்கம், புரசைவாக்கம், ராயப்பேட்டை, ராஜா அண்ணாமலைபுரம், சாந்தோம், சாஸ்திரி நகர், ஷெனாய் நகர், தியாகராய நகர் & திருவல்லிக்கேணி.

TNSCB : 122/75

# கேளுங்கள்? கொடுக்கப்படும்!

**—ஆர். எம்.**

**வினா:** எங்கள் ஊரில் அங்குசாமி என்ற 13 வயது சிறுவன் இருக்கிறான். அச்சிறுவனுக்கு இடதுகை ஊனம். இது பிறவியிலேயே ஏற்பட்டதாகும். அப்பையனின் தந்தை சென்ற மாதம், காமாலையினால் இறந்துவிட்டார்; அவன் தாய் காசநோயினால் இறந்துவிட்டார். எனவே, அப்பையன் அனாதையாக இருக்கின்றான். 7-ஆம் வகுப்பு படித்துள்ளான். ஊனமுற்றோர் கணக்கெடுப்பில் அப்பையனின் பெயர் சேர்க்கப்படவில்லை. அப்பையனை, தமிழக முதல்வர் கலைஞர் கருணாநிதி அவர்களால் ஏற்படுத்தப்பட்டுள்ள ஊனமுற்றோர் மறுவாழ்வு திட்டத்தின் கீழ் உள்ள ஊனமுற்றோர் பள்ளியிலோ அல்லது ஏதாவது ஒரு ஊனமுற்றோர் பள்ளியிலோ சேர்க்க இடம் கிடைக்குமா? அப்படி இடம் கிடைக்குமானால், முகவரியைத் தெரிவிக்கவும்.

—வி. சிவலிங்கம்,
பஜனைக் கோவில் தெரு,
பிரம்மதேசம் (அஞ்சல்),
(வழி) அந்தியூர்,
பவானி வட்டம்,
கோவை மாவட்டம்.

**விடை:** **"அனாதைக் குழந்தைகளுக்குத் தமிழ்நாடு அரசே தாயாக இருந்து காப்பாற்றும் திட்டத்தை, விரைவில் தமிழ்நாடு அரசு துவங்கும்" என்று மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் அறிவித்துள்ளார்.** எனவே அங்குசாமியின் பெயர், ஊனமுற்றோர் கணக்கெடுப்பில் சேர்க்கப்படவில்லையே என்று கவலைப்படவேண்டாம்! உண்மையிலேயே அங்குசாமி ஊனமுற்றவராக இருந்தால், தமிழ்நாடு அரசால் புதிதாகத் துவக்கப்படவிருக்கும் ஊனமுற்றோர் பள்ளிகளில் அல்லது பயிற்சி நிலையங்களில் இடம் கிடைக்கும். இது பற்றிய முழு விவரமும் அறிய பின்கண்ட முகவரிக்குத் தொடர்பு கொள்வது சிறந்தது.

இயக்குநர்,
சமூகநலத்துறை,
நிருவாக அலுவலகங்கள்,
சென்னை-600006.

ஊனமுற்றவர்களுக்குப் பின்கண்ட தனியார் நிறுவனமும் பள்ளிக்கூடம் நடத்தி இலவசமாகக் கல்வி கற்பித்து வருகிறது.

ஈஸ்வரபிரசாத் தாத்தாரியா
ஆர்த்தோபிடிக் சென்டர்,
ஆந்திர மகிளா சபா,
3, அடையார் பாலம் சாலை,
சென்னை-600028.

இந்த முகவரிக்கு எழுதி அங்குசாமிக்கு இலவசக் கல்வி வசதி பெற முயற்சிக்கலாம்.

அங்குசாமிக்கு 15 வயது ஆகிய பின், பல தனியார் நிறுவனங்களில் இலவசத் தொழிற் பயிற்சி பெற்று, வேலை வாய்ப்பினைத் தேடிக் கொள்ளவும் வாய்ப்பு உள்ளது.

மேற்கூறியவாறு உதவி பெற முடியாவிட்டால் கவலையடைய வேண்டாம். பின்கண்ட திட்டத்தில் முயற்சிக்கவும்.




ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண முயலும் நமது மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள், அண்மையில் அனாதைக் குழந்தைகளுக்கான மறுவாழ்வுத் திட்டத்தை அறிவித்துள்ளார். அத்திட்டம் முதல்வரின் பிறந்த நாளான 3-6-75 முதல் செயலாற்றத் துவங்கும். அனாதைக் குழந்தைகள் பற்றிய கணக்கெடுப்பும் விரைவில் நடக்கவிருக்கிறது. அங்குசாமியைப் பற்றிய விவரங்களை உங்கள் ஊர்நல ஊழியர் (கிராமசேவகர்) மூலமாக உங்கள் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் தெரிவித்து, அனாதைக் குழந்தைகள் கணக்கெடுப்புப் பட்டியலில் அங்குசாமியின் பெயர் இடம் பெற முயற்சி செய்யுங்கள். அனாதைக் குழந்தைகள் பற்றிய கணக்கெடுப்பு முடிந்தபின், தமிழ்நாடு அரசால் துவக்கப்படவிருக்கும் ஏதேனும் ஒரு திட்டத்தின் மூலம் அங்குசாமிக்கு மறுவாழ்வு கிடைக்கும் என்பது உறுதி..

அதுவரை, வாழைத்தோட்டத்து அய்யன் கோயிலில் (அய்யம்பாளையம், மங்கலம் அஞ்சல், பல்லடம் வட்டம், கோவைமாவட்டம்) உள்ள அனாதை மாணவர் இல்லத்தில் அங்குசாமியைச் சேர்த்திட முயற்சிக்கலாம்.

ஊனமாகப் பிறந்து, தந்தையையும் தாயையும் இழந்து அனாதையாக உள்ள அங்குசாமிக்கு உதவிட தாங்கள் விவரம் கேட்டதற்காக உங்களைப் பாராட்டுவதுடன், மேற்கூறிய வழிகளில் முயற்சி செய்யுங்கள் என்று தெரிவித்துக் கொள்கின்றோம்.

**வினா:** நானும் எனது நண்பர்களும் பட்டம் பெற்று வேலை கிடைக்காமல், தற்பொழுது சுயமாக ஏதாவது தொழில் தொடங்கலாமென எண்ணியுள்ளோம். கோழிப் பண்ணை வைக்கலாமென்பது எங்களுடைய விருப்பம். மேலும் இதுபோன்ற எங்களுக்கு உகந்த தொழில்களைத் தொடங்கும் விதம் பற்றிய (கோழிப்பண்ணை உட்பட) விவரம் தெரிக்கவும். எந்தெந்த வங்கிகள் இத்தொழில்களுக்குக் கடன் வழங்குகின்றன? கடன் தொகை எவ்வளவு? அதைப் பெறும் விதம் எவ்வாறு? இவ் விவரங்களை வெளியிட்டு எங்



களுக்கு வழிகாட்ட வேண்டுமாய் வேண்டுகிறோம்.

—எ. வெங்கடேசன் பி.ஏ.,
மெயின் ரோடு,
மாரண்டஅள்ளி,
தருமபுரி மாவட்டம்.

**விடை:** படித்துப் பட்டம் பெற்று வேலையில்லாது இருக்கும் பட்டதாரி இளைஞர்களை ஊக்குவிப்பதற்காக தமிழ்நாடு கோழி வளர்ப்புக் கழகம், கோழி வளர்ப்பு பற்றிய ஒரு பயிற்சியும் அளித்து, ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியா மற்றும் நாட்டுடைமையாக்கப் பட்ட வங்கிகளின் மூலம் கடன் பெறவும் உதவி செய்கிறது. உங்களுக்கு ஆர்வமும், முயற்சியும் இருக்குமானால் கோழிப்பண்ணை அமைப்பது இலாபகரமான தொழிலாக இருக்கும். இது பற்றிய விவரங்கள் முழுவதும் அறிய பின்கண்ட முகவரிக்கு எழுதவும்.

The Managing Director,
The Tamil Nadu Poultry
Development Corporation
Ltd.,
98, Lloyds Road,
Madras-600086.

வேலையில்லாமல் இருக்கும் பட்டதாரி இளைஞர்களாகிய நீங்கள் பால்பண்ணை அமைக்கவும் முயற்சிக்கலாம். பால் பண்ணை அமைப்பதற்கான பயிற்சி அளிப்பதுடன், கடன் உதவி பெறவும் தமிழ்நாடு பால்வள நிறுவனம் உதவுகிறது. இதுபற்றிய முழுவிவரங்களையும் அறிந்திட, பின்கண்ட முகவரிக்குத் தொடர்பு கொள்ளவும்.

The Managing Director,
Tamil Nadu Dairy Development Corporation Ltd.,
6, Ritherdon Road,
Madras-600007

கோழிப்பண்ணை அமைப்பதும் பால்பண்ணைத் துவக்குவதும் உங்களுக்கு நல்ல இலாபம் தரும் தொழிலாக இருப்பதுடன், நாட்டு மக்களுக்குத் தேவையான ஊட்டச்சத்துள்ள உணவை உற்பத்தி செய்யும் நல்லபணியில் நீங்கள் ஈடுபட்டதாகவும் இருக்கும். எனவே, இவ்விரு தொழில்களையும் இணைத்து நடத்தினால் மிகுந்த இலாபம் பெற்றிட முடியும்.

சிறு தொழில்களைத் துவங்கிட விரும்பினால், உங்கள் பகுதியில் உள்ள உதவி இயக்குநர், தொழில் வணிகத்துறை, அவர்களிடம் ஆலோசனை பெறுவதே சிறந்தது.

பட்டதாரி இளைஞர்களாகிய நீங்கள் ஒன்று சேர்ந்து, ஒரு கூட்டுறவுச் சங்கத்தை அமைத்துக் கொண்டு மேற்கூறிய தொழில்களைத் துவங்கினால் வங்கிகளில் இருந்து கடன் பெறவும், அரசுத் துறைகளில் இருந்து தொழில் நுட்ப உதவி பெறவும் இயலும்.

**வினா:** நான் ஒரு இளம் விவசாயி. 'தமிழரசு' இதழில் விவசாயிகளுக்கான செய்தி வெளியிடுவதால், நான் சந்தா செலுத்தி 'தமிழரசு' பெற்று வருகின்றேன். என் கேள்வி பெரியதாக இருந்தாலும், பதில் அளிக்கும்படி கேட்டுக் கொள்கின்றேன். 1971- ஆம் வருடம், 1 ஏக்கர் 67 சென்ட் நிலத்தில் கிணற்று நீர்பாய்ச்சி ஜிஇபி-24 நெல் பயிர் செய்தேன். நெல் கரைந்தும், உவர் அடித்தும் குறைந்த விளைச்சல் தான்-950 கிலோ-கிடைத்தது. 13-7-72-ல் மண் பரிசோதனை செய்தேன். அதில் பி. எச். 9.5 (களர் நிலம்), உப்பின்நிலை 0.6, தழைச்சத்து-0.48, மணிச்சத்து-0.9, சாம்பல் சத்து 62 என்றிருந்தது. மண் பரிசோதனை முடிவில் சிபாரிசு செய்தபடியே ஜிஇபி.24 நெல் பயிர் செய்தேன். 22-10-72-ல் முதல் தடவையாக எனது நிலத்தில், கொல்லி மலையில் உற்பத்தியாகும் கருவாட் ஆற்றின் அருவிநீர் பாய்ந்தது. என்னுடைய நிலத்தில் இருந்து 2 பர்லாங் தூரத்தில் பாசனக் கால்வாய் செல்கிறது. அதில் இருந்து வேறு ஒருவர் நிலத்தின் மூலமாக நீர்கொண்டு வந்துப் பயிர்செய்தேன். நெல் செழிப்புற்று வளர்ந்து 2,500 கிலோ விளைந்தது.

கிணற்று நீர் பாய்ந்தபோது 1 ஏக்கர் 67 சென்டில் 950 கிலோ நெல் விளைந்தது. அதே நிலத்தில் அருவிநிர் பாய்ந்தபோது 2,500 கிலோ நெல் விளைந்தது. நெல் அறுவடைக்குப் பிறகு 8-3-73ல் மண் பரிசோதனை செய்ததில் பிஎச்-8.7, உப்பின் நிலை-0.4, தழைச்சத்து 0.91, மணிச்சத்து-6.5, சாம்பல் சத்து 97 என்றிருந்தது.

அதன் பிறகு கிணற்று நீர் பாய்ச்சி ராகி பயிரிட்டு, அறுவடை செய்தபிறகு மீண்டும் மண்ணைப் பரிசோதனை செய்தேன். அதில் பி.எச். 9.3, உப்பின் நிலை-0.6, தழைச்சத்து 0.5, மணிச்சத்து 4.0, சாம்பல் சத்து 136 என்றிருந்தது. அதன் பிறகு அருவிநீர் பாய்ச்சி நெல் பயிரிட்டு, 1 ஏக்கர் 67 சென்டில் 2,600 கிலோ விளைவித்தேன்.

நெல் அறுவடைக்குப் பிறகு 8-4-74-ல் மீண்டும் மண் பரிசோதனை செய்தேன். அதில் பிஎச். 8.5, உப்பின் நிலை-0.5, தழைச்சத்து-0.63, மணிச்சத்து 3.2, சாம்பல் சத்து-50 என்றிருந்தது.

கிணற்று நீர் பாய்ச்சி மீண்டும் ராகி பயிரிட்டேன். ராகி அறுவடை செய்த பிறகு மீண்டும் மண் பரிசோதனை செய்ததில் பி எச்-9.5, உப்பின் நிலை-0.4, தழைச்சத்து-0.7, மணிச்சத்து-3.2, சாம்பல் சத்து 72 என்றிருந்தது.

கிணற்று நீர் பாய்ந்தால் பி.எச் அதிகரிக்கிறது. அருவிநிர் பாய்ந்தால் பி.எச் குறைகிறது.

இதே நிலைமையில், களர் நிலமாக சுமார் 100 ஏக்கர் உள்ளது. இந்நிலங்களுக்கு 'ஜிப்சம்' இட்டுத் திருத்திட ஆற்றுநீர் தேவைப்படுகிறது.

என்னுடைய நிலத்தில் இருந்து 2 பர்லாங் தூரத்தில் பாசனக் கால்வாய் செல்கிறது. அதிலிருந்து 4 பர்லாங் தூரத்திற்கு 1 மீட்டர் அகலம், 1 மீட்டர் ஆழம் உள்ள பாசனக்கால்வாய் அமைத்தால், 100 ஏக்கர் களர் நிலத்தையும் திருத்திட முடியும். எனவே,

இப்பாசனக் கால்வாய் அமைக்க யாருக்கு மனு செய்ய வேண்டும்? மனு செய்தால் பாசனக் கால்வாய் அமைத்துத் தருவார்களா?

எங்கள் களர் நிலத்தில் இருந்து 2 மைல்தூரத்தில் கொல்லி மலையில் உற்பத்தியாகும் கருவாட் ஆற்று அருவிநீர் தண்ணித்துறை என்னும் இடத்தில் வற்றாத ஜீவநதியாக உள்ளது. அவ்விடத்தில் பெரிய கிணறு வெட்டி அல்லது உயர் நிலைத் தொட்டி கட்டி, 2 மைல் தூரத்திற்கு குழாய் பதித்து, எங்கள் களர் நிலத்திற்குத் தண்ணீர் கொண்டு வர யாருக்கு மனுச் செய்ய வேண்டும்.

—தா. வரதராஜுலு,
த/பெ. தாசு நாயுடு,
திருமலைகிரிகாட்டுக்கொட்டாய்,
காளப்ப நாயக்கன்பட்டி (அஞ்சல்),
சேலம் மாவட்டம்.

**விடை:** அருவிநீர் பாய்ந்தால், 'பி.எச்.' அளவு குறைவாகி, மகசூல் அதிகமாக கிடைப்பதிலிருந்தும், கிணற்று நீர் பாய்ந்தால் 'பி.எச்.' அளவு அதிகமாகி மகசூல் குறைவாகக் கிடைப்பதிலிருந்தும், தங்கள் நிலத்திற்கு 'ஜிப்சம்' இட்டு நல்ல தண்ணீர் பாய்ச்சி, களரைத் திருத்தலாம் என்பது தெளிவாகிறது.

தங்கள் நிலமும், தங்கள் நிலத்தைச் சுற்றிலும் உள்ள சுமார் 100 ஏக்கர் நிலமும் களராக இருப்பதால் 'ஜிப்சம்' இட்டு அதைத் திருத்தி நல்ல நிலமாக்க, கொல்லி மலையில் உற்பத்தியாகும் கருவாட் ஆற்று அருவி நீரைக் கொண்டு வர கால்வாய் வெட்டித் தரும்படியும், அவ்வாறு பாசனம் செய்தால் எவ்வளவு அதிக உற்பத்தி செய்யமுடியும் என்பதை விளக்கியும், நிலச் சொந்தக்காரர்கள் அனைவரும் கையொப்பமிட்ட மனுவை உங்கள் மாவட்ட ஆட்சித் தலைவருக்கு முதலில் அனுப்பி வைக்கவும். பிறகு நீங்கள் குறிப்பிட்டுள்ள திட்டத்தை உங்கள் ஊராட்சி மன்றத் தலைவர் மூலமாக, ஊராட்சி ஒன்றியக் கூட்டத்தில் தீர்மானமாகக் கொண்டு வந்து, மாவட்ட வளர்ச்சிக் குழுவிற்கு அனுப்பி வைக்க முயற்சி செய்யவும். உங்கள் ஊராட்சி ஒன்றியப் பெருந்தலைவர் மூலமாகவும், சட்டமன்ற உறுப்பினர் மூலமாகவும் மாவட்ட வளர்ச்சிக் குழு கூட்டத்தில் நீங்கள் குறிப்பிட்டுள்ள திட்டத்தை விவாதித்து, செயல்படுத்த முயற்சிக்கலாம். அல்லது நீங்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து கூட்டுறவு நீர்ப்பாசனக் கழகம் அமைத்து, அரசிடம் இருந்து கடனுதவி பெற்றும் நீங்கள் கூறியபடி திட்டத்தை நிறைவேற்றலாம். கூட்டுறவு நீர்ப்பாசனக் கழகம் அமைப்பது பற்றிய விவரங்களை உங்கள் ஊராட்சி ஒன்றிய கூட்டுறவு வளர்ச்சி அலுவலர் (Extension officer for Cooperation) அவர்களிடம்கேட்டு அறிந்து கொள்ளலாம்.




நீங்கள் கூறியுள்ளபடி திட்டத்தை நிறைவேற்றுவதற்கு எந்த அளவுக்கு சாத்தியக்கூறுகள் உள்ளதோ, அதைப் பொறுத்தே திட்டத்தை எடுத்துக் கொள்வதா அல்லது தள்ளி விடுவதா என்பது முடிவாகும். எனவே, முதலில் நீங்கள் கூறும் திட்டம்பற்றி உங்கள் ஊராட்சி மன்றத் தலைவர், ஊராட்சி ஒன்றியப் பெருந்தலைவர், ஊராட்சி ஒன்றிய ஆணையாளர், உங்கள் சட்டமன்றத் தொகுதி உறுப்பினர் ஆகியவர்களுடன் கலந்தாலோசியுங்கள். (குறிப்பு: தாங்கள் கேட்டுள்ள இதர கேள்விகளுக்குத் தொடர்ந்து பதிலளிக்கப்படும்)

**வினா:** வறட்சி நிவாரண அவசரச் சட்டம் பற்றி 17-1-75, 20-1-75 தேதிய தினத்தந்தி பேப்பரில் வெளியிடப்பட்டிருந்ததன் பேரில், திருவாடுதுறை ஆதீனத்துக்குச் சொந்தமான நிலத்தைக் குத்தகைக்குச் சாகுபடி செய்துவரும் விவசாயிகளாகிய நாங்கள், இந்த பசலியில் திருவாடுதுறை ஆதீன நிலங்களைச் சாகுபடி செய்தோம். சம்பா மகசூல் தண்ணீர் இல்லாத காரணத்தினாலும், மழை இல்லாத காரணத்தினாலும் மிகவும் குறைந்து விட்டது. இந்த ஆண்டு பசலிக்கு அளக்க வேண்டிய குத்தகை நெல் அளக்க முடியாத நிலையில் இருக்கிறோம். எங்களுக்கு நீண்டகாலக் கடன் மூலம் பில்டர் பாயிண்டுகள் அமைத்துக் கொடுத்தால், நாங்கள் நல்ல முறையில் சாகுபடி செய்து குத்தகை நெல்லை அளக்க முடியும். இந்த பசலிக்கு உண்டான குத்தகை நெல்லை ஐந்து வருட தவணையில் அளந்துவிடுகிறோம். ஆதலால் நீங்கள் எங்களுக்குமேற்படி செய்திக்குத் தக்க நடவடிக்கை எடுத்து எங்களுக்கு உதவுமாறு தாழ்மையுடன் கேட்டுக் கொள்கின்றோம்.

—எஸ். சந்தரசேகரன்,
சி. ஜெயபாரதி,
எஸ். ராஜம்மாள்,
ஆற்காடு கிராமம்,
முள்ளுக்குடி பஞ்சாயத்து,
தஞ்சை மாவட்டம்.

**விடை:** நீண்டகாலக் கடன் திட்டத்தில் வடிமுனைக் குழாய் (பில்டர் பாயிண்ட்) அமைத்து கொடுக்கும்படியும், அவ்வாறு செய்தால் நல்ல முறையில் விவசாயம் செய்ய முடியும் என்றும் குறிப்பிட்டுள்ளீர்கள். தங்கள் ஆர்வத்தைப் பாராட்டுகின்றோம். ஆனால் தங்களுக்கே சொந்தமான நிலம் இருந்தால் தான், வடிமுனைக்குழாய் அமைக்கவும், டீசல் என்ஜின் வாங்கவும் தங்கள் பகுதியில் உள்ள நிலவள வங்கி மூலம் கடன் பெற முடியும். தாங்கள் திருவாடுதுறை ஆதீன நிலத்தைக் குத்தகைக்குச்சாகுபடி செய்வதாகவே குறிப்பிட்டுள்ளீர்கள். எனவே, குத்தகை நிலத்திற்கு நீண்ட காலக் கடன் பெறமுடியாது.

வறட்சி நிவாரணப்பணி அவசரச் சட்டத்தின்படி, கடன்பட்டுள்ள விவசாயிகளிடமிருந்து வழக்குகள் மூலமாகக் கடன் வசூலிப்பதை ஓராண்டு காலத்திற்குத் தள்ளி வைக்க முடியும். ஆனால், குத்தகை சாகுபடியாளர்களுக்கும் நீண்ட காலக் கடன் கொடுக்க அவசரச் சட்டம் இடம் தராது.

எனவே, நீங்கள் (குத்தகைக் சாகுபடியாளர்கள்) ஒன்றுகூடி



ஆதீனத்தாரிடம் வேண்டு கோள் விடுத்து, வடிமுனைக் குழாய் அமைத்துத் தரும்படி கேட்டுக் கொள்ளலாம். அதற்குரிய செலவைத் தவணை முறையில் செலுத்திட ஒப்புக் கொண்டு ஒப்பந்தம் செய்து கொண்டால், ஆதீனத்தாரே ஒப்புக் கொள்வார்கள் என நம்புகின்றோம். எனவே, ஆதீனத்தாரிடம் இதுபற்றி கலந்தாலோசிப்பது சிறந்தது.

**வினா:** ஐயா, நான் பள்ளி இறுதிநிலை மாணவன், நான் இவ்வாண்டு தேறிவிடுவேன் எனும் நம்பிக்கை உண்டு. நான் தொடர்ந்து 'மனோதத்துவ மருத்துவராக' கல்வி பயிலலாம் என எண்ணியுள்ளேன். தமிழ்நாட்டில் மதுரை பல்கலைக் கழகத்தில் மேற்படி கல்விமுறை உள்ளதா? தமிழ்நாட்டில் வேறு எங்கு உள்ளது? அங்கு போதனாமொழி என்ன? அதற்கான தகுதிகள் யாவை?

நான் இந்திய ராணுவத்தில் (முப்படையில் உள்ள விமானப் படையில்) ஒரு அதிகாரியாய்ப் பணிபுரியலாம் என விரும்புகின்றேன். அதற்கு எந்த கல்வி எங்கு பயில வேண்டும்? போதனா மொழி என்ன? தகுதிகள் யாவை?

நான் இவ்விரண்டு பதவியைப் பற்றியும் நன்கு அறிந்து பணிபுரிய விரும்புவதால், அதைப் பற்றித் தெளிவாய் விளக்கம் கொடுங்கள்.

—ப. வீரக்குமார்,
ஆசாத் தெரு,
சில்லமரத்துப்பட்டி
(அஞ்சல்),
போடிநாயக்கனூர் (வழி),
மதுரை மாவட்டம்.

**விடை:** மனோதத்துவ மருத்துவராக ஆக விரும்பினால், தாங்கள் புகுமுக வகுப்பிலும், பட்டப்படிப்பிலும், "Logic, Psychology" பாடத் திட்டத்தைப் பயில வேண்டும். பிறகு அதே துறையில் மேல் பட்டப் படிப்பும் பயில வேண்டும். இப்பாட திட்டங்கள் மதுரை, சென்னை, அண்ணாமலை ஆகிய மூன்று பல்கலைக் கழகங்களிலும் உள்ளன. எந்தக் கல்லூரியில் "Logic, Psychology" உள்ளது என்பதைத் தொடர்புடைய பல்கலைக் கழகத்தின் பதிவாளர்களுக்கு எழுதி தெரிந்து கொள்ளலாம். அல்லது மே, ஜூன் மாதங்களில், நாளேடுகளில் கல்லூரிகள் பற்றி வரும் விளம்பரங்களைப் படித்தும் தெரிந்து கொள்ளலாம். தமிழ் அல்லது ஆங்கில மொழியில் பயிலலாம். மேல்பட்டப் படிப்பை ஆங்கிலத்தில்தான் பயில முடியும்.

விமானப்படையில் ஒரு அதிகாரியாய் ஆக விரும்பினால், அவ்வப்போது நாளேடுகளில் விமானப் படைக்கு ஆள் எடுப்பது பற்றி வெளியாகும் விளம்பரங்களைப் பார்த்து அதற்கேற்ற பட்டப் படிப்பினை மேற்கொள்ளலாம். அல்லது பள்ளி இறுதி வகுப்பை முடித்த பின் விமானப்படையில் சேர்ந்தும் பயிற்சி பெறலாம். போதனாமொழி ஆங்கிலம். இதுபற்றிய முழுவிவரமும் அறிய பின்கண்ட முகவரிக்கு ஆங்கிலத்தில் எழுதுவதே சிறந்தது.

Air Force Recruiting officer,
Air Force Station,
Tambaram,
Madras-600046

**வினா:** திருச்சிராப்பள்ளி மாவட்டம், குளித்தலை வட்டம், கூடலூர் கிராமம் ஜெயந்தி காலனியில் வசிக்கும் அரிசன மக்கள் எழுதிக்கொள்வது.

ஐயா! நாங்கள் மேற்படி காலனியில் சுமார் 25 குடும்பங்கள் வாழ்கின்றோம். நாங்கள் எவ்வித வசதியும் இல்லாத ஏழைகள். நாங்கள் அரசாங்க உதவியோ, கடனோ பெற்று பால் மாடு வாங்கி அதைக் கொண்டு ஜீவனம் நடத்தலாம் என்றும் நினைக்கின்றோம். எனவே, அப்பயனைப் பெற யாருக்கு, எப்படி விண்ணப்பிக்க வேண்டும் என்பதை தயவு செய்து தாங்கள் விளக்கமாக தமிழரசில் வெளியிட கேட்டுக் கொள்கிறோம்.

(குறிப்பு: ஸ்டேட் பாங்க் மூலம் கேட்டதற்கு, வசிக்கும் இடம் அதிக தூரம் இருப்பதால், கடன் அளிக்க முடியாது என்று அறிவித்துவிட்டார்கள்.) தங்களுடைய பதிலை மழையை எதிர்பார்த்திருக்கும் பயிர் போல் வாடி எதிர்பார்க்கிறேன்.

—எ. ஏழுமலை,
ஜெயந்தி காலனி நகர்,
பேரூர்,
ராக்கம்பட்டி (அஞ்சல்),
(வழி) மணப்பாறை,
குளித்தலை.

**விடை:** அரிசன மக்களுக்கு, அரிசன நலத்துறை மூலம் பால்மாடு வாங்க, கடன் கொடுக்கப்படுகிறது. அக்கடன் பெற உங்கள் மாவட்ட அரிசன நல அலுவலர் அவர்களுக்கு மனு செய்ய வேண்டும். ஆனால் உங்கள் காலனியைச் சார்ந்த 25 குடும்பங்களுக்கும், ஒரே நேரத்தில் கடன் கிடைப்பது அரிது. படிப்படியாக அனை வரும் கடன் பெற முயற்சிக்கலாம். அல்லது இவ்வாறு கடன் பெற முடியாதவர்கள், கூட்டுறவுச் சங்கம் அமைத்துக் கொண்டு, அதன் மூலமாகவும் கடன் பெற்று பால்மாடுகள் வாங்கி பயன் அடையலாம். கூட்டுறவு சங்கம் அமைப்பது பற்றிய விவரம் அறிய, உங்கள் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் உள்ள கூட்டுறவு வளர்ச்சி அலுவலர் அவர்களைக் கலந்தாலோசியுங்கள்.

**வினா:** நான் ராமகிருஷ்ணா வித்தியாலயாவில் விவசாயப் பயிற்சிப் பள்ளியில் இரண்டாம் ஆண்டு படித்து வருகின்றேன். படித்து முடிந்த பின்னர் எங்களுக்கு அரசுத் துறைகளில் எங்கெங்கு வேலை வாய்ப்பு கிடைக்கும்? தனியார் துறைகளில் எங்கு எல்லாம் சேரமுடியும்? வேலைவாய்ப்பு நிலையம் மூலம் தான் வேலை தேட வேண்டுமா? அல்லது தனியாக வேலைக்கு நேரடியாகச் செல்ல முடியுமா? விவரமாகத் தெரிவிக்கவும்.

—எம். சுகுமாரன்,
வேளாண்மைப் பள்ளி,
ராமகிருஷ்ணா வித்யாலயா,
பெரியநாயக்கன் பாளையம்,
கோயம்புத்தூர்-20.

**விடை:** பள்ளி இறுதித் தேர்வு பெற்றிருந்து 2 ஆண்டு கால வேளாண்மைப் படிப்பும், பயிற்சியும் பெற்றிருந்தால், தமிழ்நாடு அரசின் வேளாண்மைத் துறையிலும், கால்நடை பராமரிப்புத் துறையின் பண்ணைகளிலும் வேலை பெற முடியும். தனியார் துறையைச் சார்ந்த சர்க்கரை ஆலைப் பண்ணைகளிலும், தனியார் பண்ணைகளிலும் வேலை பெறலாம். அரசுத்துறைகளில் பணியாற்ற விரும்பினால், வேலை வாய்ப்பு நிலையம் மூலமாகவே வேலை தேட வேண்டும். தனியார் துறையில் வேலை பார்க்க விரும்பினால், நீங்களே நேரடியாக முயற்சி செய்யலாம்.

# தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் பொங்கல் பரிசு

வறட்சிவாட்டியபோதிலும், வேளாண்மை உற்பத்தியைப் பெருக்க அயராது பாடுபட்டு வரும் தமிழக உழவர் பெரு மக்களுக்கு இந்த ஆண்டின் பொங்கல் பரிசாக, 'கோ.38' என்ற 145நாள் வயதுகொண்ட புதுநெல் ரகம், 'கோ-39' என்ற 90நாள் வயதுகொண்ட புது நெல் ரகம், 'கோ. 2' என்ற 65நாள் வயது கொண்ட வெங்காயம், 'கே. 2' என்ற 210 நாள் வயது கொண்ட மிளகாய் ஆகிய நான்கு புதிய உயர்விளைச்சல் தரும் ரகங்களை தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் வெளியிட்டுள்ளது.

கடந்த நூற்றாண்டிலே எந்த ஒரு ஆண்டிலும் கண்டிராத அளவுக்கு இந்த ஆண்டு தென்மேற்குப் பருவ மழையும், வடகிழக்குப் பருவ மழையும் தொடர்ந்தாற்போல் பொய்த்து விட்டன. பல இடங்களில் 30 அல்லது 40 அங்குல மழைக்கு மாறாக 10 அங்குலம்கூடப் பெய்யவில்லை! ஆகையால் மானாவாரியில் விதைக்கப்பட்ட பயிர்கள் காய்ந்துக் கருகிவிட்டன.! கிணறுகளில் நீரில்லாமல் இறவைப் பயிர்கள் வாடி வதங்கி விட்டன! ஆற்றுப் பாசனமும், ஏரிப் பாசனமும் மிகவும் குறைந்துள்ளன. உணவு பற்றாக்குறை, பஞ்சம் பட்டினி என்ற நிலைமை நம்மை எதிர்நோக்கி நிற்கின்றன. இவைகளை எதிர்த்து நின்று போராடி வெற்றி காண்பதற்கான வழிவகைகளைத் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம் உழவர் பெருமக்களுக்கு அவ்வப்பொழுது தெரிவித்து வருகிறது.

கடந்த ஆண்டுகளில் உணவு உற்பத்தியில் நம் மாநிலம் தன்னிறைவு பெற்றிருந்ததோடல்லாமல், தேவைப்பட்ட மற்ற மாநிலங்களுக்கும் கொடுத்து உதவியது. இந்த ஆண்டு நாம் மற்ற மாநிலங்களையும், மத்திய அரசையும் எதிர்நோக்கியுள்ளோம். நம் உழவர் பெருமக்கள் இந்த நெருக்கடியான சூழ்நிலையை சமாளிப்பதற்கான முயற்சிகளில் ஈடுபட்டுள்ளனர். அவர்கள் பயிரிடும் ஒவ்வொரு பயிரிலும் ஐந்து அல்லது பத்து சதவிகிதமாவது அதிக மகசூல்கிடைக்காதா என்று எதிர்பார்த்து, எந்த முறையைக் கையாண்டால் அப்படி கிடைக்கும் என்று சிந்தித்து வருகிறார்கள். இன்றும், என்றும் நமது உணவு உற்பத்தி தன்னிறைவு பெற்றுக் காண வேண்டுமானால், நாம் தொடர்ந்து புதிய புதிய உயர் விளைச்சல் தரும் பயிர் ரகங்களை ஆராய்ச்சிகள் மூலம் உருவாக்க வேண்டும் .அவகைளை நம் விவசாயிகள் விரும்பிப் பயிர் செய்தாக வேண்டும். அப்பொழுதுதான், பெருகி வரும் மக்கள் தொகையின் தேவைகளைப் பூர்த்தி செய்ய முடியும். இன்று நாம் பயிரிடும் 'ஐ. ஆர். 8'-ம், 'ஐ.ஆர்.20'-ம் நல்ல மகசூல் தருகின்றன என்று எண்ணி, அவைகளை விடச் சிறந்த ரகங்களை உருவாக்காமல் மலைத்து நின்று விட்டால், நம் வருங்காலம் இருண்டு விடும் என்பதில் யாதொரு ஐயமும் இல்லை !

இதை நன்கு உணர்ந்துள்ள தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழக ஆராய்ச்சியாளர்கள் தொடர்ந்து புதுப்புது ரகப் பயிர்களை உருவாக்கி வருகிறார்கள். இரசாயன உரங்களின் விலை இருமடங்காக உயர்ந்து விட்டதல்லாமல், அவைகள் கிடைப்பதில் தட்டுப்பாடுகள் உள்ளன. இந்த நிலையைச் சமாளிப்பதற்கென, குறைந்த உரமிட்டாலும் உயர் விளைச்சல் தரக்கூடிய 'பவானி' 'வைகை' ஆகிய புது நெல் ரகங்களை ஏற்கெனவே நமது தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம் வெளியிட்டது. அவைகள் தமிழ்நாட்டில் மட்டுமல்லாது, மற்ற மாநிலங்களிலும் உள்ள உழவர்களால் விரும்பி பயிரிடப்பட்டு வருகின்றன. மேலும் உயர்விளைச்சல் தரும் நெல் ரகங்களை உருவாக்குவதில், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம் தொடர்ந்து முயன்று வருகின்றது.

உணவு உற்பத்தியைப் பெருக்க முயன்றுவரும் தமிழக உழவர் பெருமக்களுக்கு, இந்த ஆண்டின் பொங்கல் பரிசாக, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம் நான்கு புதிய உயர் ரகங்களை வெளியிட்டுள்ளது. அவைகளின் விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

## 'கோ.—38' ரக நெல்

'கோ. 38' என்ற புது ரக நெல்லை, ஏற்கெனவே பயிராகி வரும் 'கோ. 25' என்ற சம்பாவிற்குப் பதிலாக தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம் வெளியிட்டுள்ளது. கடந்த சுமார் 30 ஆண்டுகளாகத் தமிழ் நாட்டின் பல பாகங்களில், முக்கியமாகத் தஞ்சை மாவட்டத்தில் பெரும் பரப்பில் பயிராகி வரும் ரகம் 'கோ. 25'. கடந்த சுமார் 8 ஆண்டுகளாக நாடெங்கும் விரும்பி பயிரிடப்படும் பிலிப்பைன்ஸ் நாட்டின் ரகம் 'ஐ.ஆர். 8.' இந்த இரண்டு உயர் விளைச்சல் தரும் ரகங்களையும் ஒட்டு சேர்த்து உருவாக்கப்பட்ட 'கோ. 38' ரகம், 'ஐ.ஆர். 8'-ஐப் போல் குட்டையாகவும், உயர் விளைச்சல் தரக்கூடியதாகவும், 'கோ. 25'-ஐ விட நல்ல அரிசியுடனும் கொள்ளை நோயாலும், பூச்சிகளாலும் அதிகமாகப் பாதிக்கப்படாமலும் உள்ளது. இந்த ரகம் 'கோ. 25'-ஐ விட 20 நாட்களுக்கு முன்னதாக-அதாவது 145-150 நாட்களில்-அறுவடைக்கு வந்துவிடுகிறது. இது 'கோ. 25'- ஐ விட சுமார் இரண்டு மடங்கு அதிக மகசூல்—அதாவது எக்டேருக்கு 6-லிருந்து 7 டன் வரை மகசூல்—கொடுக்கிறது. அறுவடை சமயத்தில் மழை பெய்த போதிலும் தூர்கள் நிலத்தில் சாயாமல், மணிகள் செடியில் உள்ளபோதே முளைக்காத தன்மை கொண்டது. தஞ்சை மாவட்டத்தில் சம்பா, தாளடி, பின்போக சம்பா ஆகிய பட்டங்களில் 'கோ. 25' ரகத்திற்குப் பதிலாக இதைப் பயிரிடலாம். மற்றும் தென் மாவட்டங்களில் முக்கியமாக திருநெல்வேலி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களில் 'கோ. 25' பயிராகும் இடங்களில் எல்லாம் 'கோ. 38' என்ற இந்த புது ரகத்தைப் பயிரிட்டு அதிக மகசூல் காணலாம். இதைப் பயிரிடுவதன் மூலம், 'கோ.25' ரகத்தைக் காட்டிலும் ஒரு எக்டேருக்குக் குறைந்தது ரூபாய் 1,500 அதிக இலாபம் கிடைக்கும்.

## 'கோ—39' ரக நெல்

'கோ. 39' என்ற மிகக் குறுகிய கால வயதுடைய நெல் ரகத்தையும் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம் வெளியிட்டுள்ளது. 'கண்ணகி' என்ற குறுகிய கால ரகத்தையும், 'கல்சர் 340' என்ற 'சைனு 2'-ஆம் நம்பர் வழிவந்த நெல்லையும் ஒட்டு சேர்த்து உருவாக்கப்பட்டது இந்த ரகம். மொத்தத்தில் இந்த ரகத்தை சுமார் 90 நாட்களில் அறுவடை செய்துவிடலாம். நாற்றங்காலில் சுமார் 25 நாள் வளர்ந்த பின் நடவு நட்டு, 65 நாட்களில் அறுவடை செய்து விடலாம். இந்த ரகம் ஒரு எக்டேருக்கு சுமார் நான்கு டன் வரை மகசூல் தருகிறது. ஆறு, ஏரி, குளங்களிலிருந்து வாய்க்கால் மூலம் பாசனம் செய்து பயிரிடும் போது அல்லது கிணறுகளிலிருந்து இறைவை நீர்ப்பாசனத்தில் பயிரிடும் போது—குறைந்த நீர் உள்ளபோதிலும்-அந்த நீரைக் கொண்டு மூன்று மாதத்தில் இப்பயிரை அறுவடை செய்து விடலாம். இந்தியாவில் பயிராகும் மற்ற எல்லா குறுகிய கால வயதுடைய நெற்பயிர்களைக் காட்டிலும், பலவகைகளில் சிறந்து காணும் இந்த நெல், தமிழகத்திற்கு மிகவும் ஏற்றது. ஒரு ஆண்டில் நான்கு போகம் இந்த ரகத்தைப் பயிரிட முடியும் என்றாலும், முக்கியமாக 'குறுவை', 'கோடை' ஆகிய பருவங்களில் பயிரிடலாம். நம் மாநிலத்தின் பல இடங்களிலும், பாண்டிச்சேரி மாநிலத்திலும் இந்த ரகத்தைப் பயிரிட்டு நல்ல மகசூல் அறுவடையாகியுள்ளது. இவ்வாண்டில் ஏற்பட்டது போல் மழை குறைவாலும், தாமதமாக மழைகள் பெய்தாலும், பருவம் தவறிடும் போதிலும், குறுகிய காலத்தில் இந்த ரகத்தைப் பயிரிட்டு மக்களுக்குத் தேவையான உணவை உற்பத்தி செய்யலாம். நம் மாநிலத்தின் பல மாவட்டங்களில் ஆண்டுதோறும் ஆங்காங்கு நிலவும் பருவங்களுக்கு ஏற்ப ஒன்று அல்லது இரண்டு போகங்களில் இந்த ரக நெல்லை பயிரிடலாம்.

## 'கோ—2' ரக வெங்காயம்

'கோ-2' என்ற வெங்காய ரகம் 65 நாட்களில் அறுவடைக்கு வந்துவிடுகிறது. எக்டேருக்கு சுமார் 10 டன் மகசூல் கொடுக்கிறது. ஏற்கனவே பயிராகி வரும் 'கோ.1' என்ற வெங்காய ரகத்தைவிட, இது வயதில் 15 நாட்கள் குறைந்த போதிலும், மகசூலில் சுமார் 20-லிருந்து 30 சதவிகிதம் அதிகம் தருகின்றது. இந்த வெங்காயத்தின் ராசி, நிறம் ஆகிய குணங்களும் சிறப்பாக அமைந்துள்ளன. இதைப் பயிர் செய்வதால், 'கோ. 1' என்ற ரகத்தைவிட எக்டேருக்கு சராசரி ரூபாய் 1,000 முதல் 2,000 வரை அதிக இலாபம் அடையலாம். இதைப் பருத்தி, கரும்பு, மஞ்சள் ஆகிய பயிர்களுடன் ஊடு பயிராகவும் பயிராக்கலாம். பல இடங்களில் இந்த ரகத்தை ஆண்டுக்கு மூன்று போகமாகப் புன்செய் நிலங்களில் பயிரிட்டு எக்டேருக்கு சுமார் 30 டன் மகசூல் எடுக்கலாம். அதன் மூலம் ரூபாய் 10,000 முதல் ரூபாய் 20,000 வரை வருமானம் அடையலாம்.

## 'கே—2' ரக மிளகாய்

இது அஸ்ஸாம் ரகத்தையும் சாத்தூர் சம்பா என்ற ரகத்தையும் ஒட்டு சேர்த்து கோவில்பட்டி ஆராய்ச்சி நிலையத்தில் உருவாக்கப்பட்டதாகும். இது தற்சமயம் தென் மாவட்டங்களில் பயிராகி வரும் 'கே. 1' என்ற மிளகாயை விட சுமார் 20 லிருந்து 30 சதவிகிதம் அதிக மகசூல் கொடுக்கின்றது. இந்த ரகத்தின் செடிகள் 'கே. 1' ரகத்தைவிடச் சுமார் 10 நாட்கள் முன்னதாகவே பூத்துவிடுகிறது. இதன் வயது 210 நாட்கள். இந்த ரகத்தைப் பழம் அழுகல் நோயும், இலைப் பேன் பூச்சியும் அதிகமாகத் தாக்குவதில்லை. அஸ்ஸாம் மற்றும் சாத்தூர் சம்பா ஆகிய இரண்டு ரகங்களின் சிறந்த குணங்களும் இந்த 'கே. 2' என்ற புது ரகத்தில் காணப்படுகின்றன. இதனை விளைவிப்பதால் எக்டேருக்கு சுமார் 8 அல்லது 10 குவிண்டால் மிளகாய், அதாவது 'கே. 1' என்ற ரகத்தை விட இரண்டு குவிண்டால் அதிகமாக, மிளகாய் அறுவடை செய்து சுமார் ரூபாய் 1,500 அதிக இலாபம் அடையலாம்.

மாதிரிக்காகப் பயிரிட்டுப் பார்த்த உழவர் பெருமக்கள் மேற்கூறிய 2 புதிய நெல் ரகங்களையும், வெங்காயத்தையும், மிளகாயையும் அதிசய ரகங்களாகக் கருதி மேலும், மேலும் பயிரிட்டு வருகின்றார்கள். நீங்களும் இவைகளைப் பயிரிட்டு பயன் அடைய வேண்டும் என்பதற்காக அவைகளின் சிறப்புக் குணங்களையும், சாகுபடி குறிப்புகளையும் ஈண்டு படைத்துள்ளோம்.




# உயர் விளைச்சல் தரும் நடுத்தர கால வயதுடைய நெல் ரகம் 'கோ—38'

'கோ. 38' என்ற நெல்ரகம், நடுத்தர கால வயதுடைய உயர் விளைச்சல் தரும் நெல் வகையைச் சேர்ந்ததாகும். 'கல்ச்சர் 5142' என்ற ரகத்திற்கே 'கோ. 38' என்று பெயரிடப் பட்டுள்ளது.

'கல்ச்சர் 5142' என்பது 'ஐ. ஆர். 8' என்ற நெல்லையும் 'கோ. 25' என்ற 'குலைநோய் தாக்காத சிறுமணி' நெல்லையும் கருச்சேர்க்கையில் இணைத்து உருவாக்கப்பட்டது. தாளடி மற்றும் சம்பா பட்டங்களில் அதிகமான பரப்பளவில் சாகுபடியாகும் நீண்ட கால வயதுடைய (165 முதல் 190 நாட்கள்), உயரமாக வளரும் 'இண்டிகா' நெல் வகையைச் சார்ந்த 'கோ. 25' ரகத்திற்கு அதிக மகசூல் கொடுக்கும் திறனையும், குட்டையான செடியமைப்பையும் ஒருங்கே அளித்து, புதிய ரகமாக உருவாக்கும் பூர்வாங்க ஆராய்ச்சி, 1969-ஆம் ஆண்டு கோயமுத்தூரிலுள்ள நெல் இனவிருத்தி பண்ணையில் துவக்கப்பட்டது. காவிரி நீர்ப்பாசனத்தின் மூலம் சாகுபடியாகும் 'கோ. 25' என்ற சிறுமணி ரகம் தஞ்சை மாவட்டப் பகுதிகளில் ஜனவரி-பிப்ரவரி மாதங்களில் அறுவடைக்கு வருகிறது. மேலும் தண்ணீர்த் தட்டுப்பாடு இருக்கும் தருணத்தில் மகசூல் வெகுவாகப் பாதிக்கப்படுகிறது. நடுத்தர கால உயர் விளைச்சல் ரகங்களான 'ஐ.ஆர். 8' மற்றும் 'ஐ. ஆர். 20' போன்ற வகைகள் பொதுவாகக் கிழக்கு கடற்கரைப் பகுதிகளில் வடகிழக்குப் பருவ மழையால் பாதிக்கப்படுவதால், 'ஐ.ஆர். 8'-ஐ விட சற்றுக் கூடுதலான வயதும், 'கோ.25' என்ற சிறுமணி நெல்லை விடக் குறைவான வயதும் உள்ள புதிய ரகம் இப்பகுதிகளுக்கு மிகவும் தேவைப்பட்டது.

'கோ. 25' நெல் ரகத்தின் சிறப்புக் குணங்களுடன், குட்டையான செடியமைப்பு மற்றும் குறுகிய வயது ஆகியவை ஒருங்கே அமையப்பட்ட புதிய ரகமாக 'கோ. 38' உருவாக்கப்பட்டுள்ளது. இப்புதிய ரகத்தின் இயல்புகள் பின் வருமாறு உள்ளன.

1. மொத்த வயது 145 முதல் 150 நாட்கள். ஆகவே சம்பா மற்றும் தளாடி பட்டங்களில் சாகுபடி செய்ய மிகவும் ஏற்றது.

2. தானிய மகசூல் எக்டேருக்கு 6 முதல் 7 டன் வரை. அதே அளவு வைக்கோல் மகசூலும் கொடுக்க வல்லது.

3. 'கோ. 25'-ஐ விட 60 சதமும், 'பொன்னியை' விட 50 சதமும் அதிக தானிய மகசூல் அளிக்கிறது.

4. 'கோ. 25'-ஐ விடக் குறைந்த வயதுள்ளதாக இருப்பதால், தண்ணீர் தட்டுப் பாட்டினால் பாதிக்கப்படுவதில்லை.

5. குருத்துப் பூச்சியின் தாக்குதலையும், குலை நோய் என்ற பூசண நோயின் தாக்குதலையும் தாங்கும் சக்தி படைத்தது.

6. இருபோக நிலங்களில் இரண்டாம் போகப் பயிராகவும், ஒருப்பாக நிலங்களில் ஆகஸ்ட் முதல் டிசம்பர் வரையிலும் சாகுபடி செய்ய மிகவும் உகந்தது.

7. அரிசியின் தரம் 'கோ.25 ஐ விடச் சிறந்தது.

**'கோ 25' என்ற 'குலைநோய் தாக்காத சிறுமணி' நெல்லுக்குப் பதிலாக இப்புதிய ரகத்தைச் சாகுபடி செய்தால், எக்டேருக்கு குறைந்த பட்சம் ஒரு டன் வரை அதிக தானிய மகசூல் கிடைக்கும். தற்போது 'கோ. 25' சாகுபடியாகி வரும் 6.25 இலட்சம் எக்டேர் நிலப்பரப்பிலும் 'கோ. 38' ரகத்தைச் சாகுபடி செய்தால், ஏறக்குறைய ஆண்டு ஒன்றுக்கு 25 கோடி ரூபாய் அதிக வருவாய் தமிழ்நாட்டு உழவர் பெருமக்களுக்குக் கிடைக்கும்!**



## சாகுபடி முறைகள்

1. பட்டம் ... சம்பா (ஜூலை-ஆகஸ்டு) தாளடி (ஆகஸ்டு-செப்டம்பர்).

2. வயது ... 145—150 நாட்கள்

3. விதை அளவு ... 18 கிலோ விதை, 12 செண்டில் விதைத்து ஒரு ஏக்கர் நடவு செய்யவும்.

4. நாற்றின் வயது ... 22 முதல் 25 நாட்கள்.

5. இடைவெளி ... 8 அங்குலம் × 4 அங்குலம். குத்துக்கு 2 முதல் 3 நாற்றுக்கள்.

6. உர அளவுகள்:

| | தழைச்சத்து (கிலோ) | மணிச்சத்து (கிலோ) | சாம்பல்சத்து (கிலோ) |
|---|---|---|---|
| மொத்த அளவு (எக்டேருக்கு) | 120 | 60 | 60 |
| அடியுரம் ... | — | 60 | 60 |
| நடவின்போது ... | 30 | — | — |
| தூர் கிளைக்கும்போது ... | 60 | — | — |
| கதிர்விட ஆயத்தம் செய்யும்போது ... | 30 | — | — |

7. பயிர்ப் பாதுகாப்பு ... உயர்விளைச்சல் தரும் நெல் வகைகளுக்கு மேற்கொள்ளப்படும் முறைகள் பின்பற்றப்பட வேண்டும்.

8. மகசூல் எக்டேருக்கு (சராசரி)....6,984 கிலோ.

# குறைந்த வயதில் அதிக மகசூல் தரும் நெல் ரகம்-'கோ. 39'

தமிழ்நாட்டில் இன்று சாகுபடியிலிருக்கும் குறுகிய கால வயதுடைய உயர் விளைச்சல் தரும் நெல் ரகங்களில், 'பாலா' என்ற நெல் 90 முதல் 100 நாட்களுக்குள் அறுவடைக்கு வருகிறது. இது எக்டேருக்கு 4 டன் வரை தானிய மகசூல் கொடுக்கும் திறன் படைத்தது. 'பாலா' ரகத்தைவிட குறைந்த வயதில், அதிக மகசூல் கொடுக்கக்கூடிய ஒரு புது ரக நெல் உருவாக்குவதற்கான பூர்வாவாங்க ஆராய்ச்சி கோயமுத்தூரிலுள்ள நெல் ஆராய்ச்சிப் பண்ணையில் 1971-ஆம் ஆண்டு துவங்கப்பட்டது. பண்ணையிலுள்ள 'கல்ச்சர் 340' (சைனு 2' என்ற நெல்லையும், 'ஏ.டி.டீ. 3 என்ற நெல்லையும் கருச்சேர்க்கையில் இணைத்து கிடைக்கப் பெற்றது) என்ற குறுகியகால நெல் ரகத்துடன் 'கண்ணகி' என்ற நெல்ரகத்தை கருச்சேர்க்கையின் மூலம் ஒருங்கிணைத்து பல ஆயிரக் கணக்கான சந்ததிகள் தோற்றுவிக்கப்பட்டன. இவற்றிலிருந்து, குறைந்த வயது கொண்ட பயிர் இனங்களைப் பாகுபடுத்தி, அவற்றின் விளைவு திறனை ஆராய்ந்து, அதிக மகசூல் கொடுக்கும் மூன்று மாத வயதுள்ள புதுரக நெல்லாக 'கல்ச்சர் 6534' தேர்ந்தெடுக்கப்பட்டது. இந்த கல்ச்சருக்கே, 'கோ. 39' என்று பெயரிடப்பட்டுள்ளது.

'கோ. 39' என்ற நெல், நடவு செய்த 65 முதல் 70 நாட்களுக்குள் அறுவடைக்கு வந்துவிடுகிறது. மகசூலைப் பொறுத்தவரை, 'பாலா' என்ற நெல் எக்டேருக்கு சராசரி 4,612 கிலோ மகசூலும், 'ஆடுதுறை-30' (ஆடுதுறையில் ஐ. ஆர். 262 மற்றும் ஆடுதுறை 27-ஐயும் கருச்சேர்க்கை செய்து தோற்றுவிக்கப்பட்டது) எக்டேருக்கு 4,956 கிலோ மகசூலும் கொடுக்கும்போது, 'கல்ச்சர் 6543' எக்டேருக்கு 5,687 கிலோ கொடுக்கும் திறனுடையது. நடவு வயலில் பயிர் இருக்கும் காலத்தை வைத்து எக்டேருக்கு ஒரு நாளைய உற்பத்தி திறனைக் கணக்கிட்டால் 61.92 கிலோ தானியம் கிடைக்கிறது.

### சிறப்புக் குணங்கள்

1. பயிரின் மொத்த வயது 90 முதல் 95 நாட்கள்.

2. நாற்றுவிட்டு நடவு செய்தால், நட்ட 65 முதல் 70 நாட்களுக்குள் அறுவடைக்கு வருகிறது.

3. எக்டேருக்கு நான்கு முதல் ஐந்து டன் வரை தானிய மகசூல் கொடுக்கவல்லது.

4. வயலில் பயிர் இருக்கும் காலத்தைப் பொறுத்து, ஒரு நாளைக்கு 61.92 கிலோ தானிய உற்பத்தித்திறனை கொண்டுள்ளது.

5. தற்சமயம் சாகுபடியிலிருக்கும் 'பாலா', 'ஆடுதுறை 30' போன்ற குறுகிய கால வயதுடைய நெல் ரகங்களை விட அதிக மகசூலை கொடுக்கும் திறன் படைத்தது.

6. குறுவைப் பட்டத்தில் நடவு தாமதமானாலும், செப்டம்பர் மாத இறுதிக்குள் அறுவடைக்கு வந்துவிடும். ஆகவே கடற்கரை ஓரமுள்ள மாவட்டப் பகுதிகளில் அறுவடை சமயம், மழையினால் ஏற்படும் சேதம் தவிர்க்கப்படுகிறது.

7. இராமநாதபுரம் போன்ற மாவட்டங்களில் குளத்துப் பாசனப் பகுதிகளில் தண்ணீர் குறைவாக இருந்தாலும் கூட, இருக்கும் நீரைக் கொண்டு இக்குறுகிய காலப்பயிரை விளைவிக்கும் வாய்ப்பு உள்ளது.

8. பயிர்ச் சுழற்சியில் பல பயிர் சாகுபடியாகும் நிலங்களுக்கு மிகவும் ஏற்றது.

9. பாசன நீர் வசதியுள்ள இடங்களில் வயது குறைவாக உள்ள இந்த ரகத்தை இரண்டு மூன்று போகங்களிலும் சாகுபடி செய்யலாம்.

இப்புது ரக நெல்லை, தமிழ்நாட்டில் சுமார் இரண்டு இலட்சம் எக்டேரில் சாகுபடி செய்ய வாய்ப்பு உள்ளது! இதன் மூலம் நெல் உற்பத்தியை இன்னும் இரண்டு இலட்சம் டன் அதிகரிக்க இயலும் 'கோ 39' ரகத்தை பயிரிடுவதன்




மூலம் தமிழ்நாட்டில், ஆண்டுக்கு 12 கோடி ரூபாய் மதிப்புள்ள அளவுக்கு நெல் உற்பத்தியைப் பெருக்க இயலும்!

### சாகுபடிக் குறிப்புகள்

1. எக்டேருக்கு 50 கிலோ விதை தேவை.

2. கார் அல்லது குறுவை (ஜூன்-ஜூலை முதல் ஆகஸ்ட்-செப்டம்பர் வரை),சொர்ணவாரி (ஏப்ரல்-மே முதல் ஜூலை-ஆகஸ்ட் வரை), நவரை (ஜனவரி முதல் ஏப்ரல் வரை) ஆகிய பட்டங்களில் பயிரிடலாம்.

3. நடவின்போது குத்துக்கு இரண்டு அல்லது மூன்று நாற்றுக்கள் வீதம் நடவேண்டும்.

4. நாற்றுக்களை 6 அங்குலம் × 4 அங்குலம் என்ற இடைவெளியில் நெருக்கி நடவு செய்ய வேண்டும்.

5. எக்டேருக்கு 100 கிலோ தழைச்சத்து, 50 கிலோ மணிச்சத்து மற்றும் 50 கிலோ சாம்பல் சத்து ஆகியவற்றை இடுமாறு பரிந்துரைக்கப்படுகிறது. அடியுரமாக 50 கிலோ தழைச்சத்து, 50 கிலோ மணிச்சத்து, 50 கிலோ சாம்பல்சத்து இட வேண்டும். முதல் தவணையாக, 25 கிலோ தழைச் சத்தை நடவு செய்த 15-ஆம் நாளிலும், இரண்டாம் தவணையாக 25 கிலோ தழைச்சத்தை நடவு செய்த 25-ம் நாளும் மேலுரமாக இட வேண்டும்.

6. உயர் விளைச்சல் தரும் நெல் வகைகளுக்கு மேற்கொள்ளப்படும் பயிர்ப்பாதுகாப்பு முறைகளைக் கையாள வேண்டும்.

## குறைந்த வயதில் நிறைந்த மகசூல் கொடுக்கும் புதிய வெங்காயம்!

தமிழ்நாட்டில் வெங்காயம் சுமார் 17 ஆயிரம் எக்டேர் நிலப்பரப்பில் சாகுபடி செய்யப்பட்டு, ஆண்டுதோறும் ஏறக்குறைய இரண்டு இலட்சம் டன் வெங்காயம் உற்பத்தியாகிறது. இதன் சாகுபடி பெரும்பாலும்கோயம்புத்தூர், திருச்சி, மதுரை, ராமநாதபுரம் மற்றும் திருநெல்வேலி மாவட்டப்பகுதிகளில் நடைபெறுகிறது.

தற்போது தமிழ்நாட்டில் சாகுபடியிலிருக்கும் 'கோ-1' என்ற வெங்காயம் சுமார் 90 நாட்களில் ஒரு எக்டேர் நிலப் பரப்பில் 10 முதல் 12 டன் வரை மகசூல் கொடுக்கும் திறனுடையது. வெங்காய இனத் தேர்வு, 1971-ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக் கழகம் செயல்படத் துவங்கியதும் தீவிரமாக்கப்பட்டது. தொடர்ந்து நடத்தப்பட்ட ஆராய்ச்சியின் மூலம், பல இனங்கள் கையாளப்பட்டு அவைகளின் வயதும், மகசூல் கொடுக்கும் திறனும் பாகுபாடு செய்யப்பட்டன. அதன் விளைவாக கடலூர் இனத்தைச் சார்ந்த 'கல்ச்சர்-911' குறைந்த வயதில் நிறைந்த மகசூல் கொடுக்கும் இயல்புடையது என்று தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளது. இவ்வகை 60 முதல் 70 நாட்களுக்குள் ஒரு எக்டேர் நிலப்பரப்பில் சராசரி 8 முதல் 12 டன் வரை மகசூல் கொடுக்கும் திறன் வாய்ந்தது. சாகுபடியிலிருக்கும் 'கோ. 1' வெங்காய வகையைக் காட்டிலும் 15 சதவீதம் அதிக மகசூல் கொடுக்கும் திறனும், 20 நாட்கள் குறைந்த வயதுள்ளதாகவும், மற்ற பொறுக்கு விதை அல்லாத இனத்தைச் காட்டிலும் 38.4 சதவீதம் அதிக மகசூல் கொடுக்கும் சக்தியுடன், சுமார் 12 நாட்கள் வரை குறைந்த வயது உள்ளதாகவும் இருக்கின்றன. இப்புதிய வகை 'கல்ச்சர் 911' வெங்காயத்திற்கே 'கோ. 2' எனப் பெயரிடப்பட்டுள்ளது.

இந்த ரகம், தோட்டக்கால் பூமியில் வெங்காயம் சாகுபடி செய்யும் உழவர் பெருமக்களுக்கு ஒரு வரப் பிரசாதமாக அமையும் என்று கூறினால் மிகையாகாது! ஏனென்றால், சுமார் 2.5 மாத கால வரம்புக்குள், எக்டேருக்கு 8 முதல் 12 டன் வரை மகசூல் கொடுக்க வல்லது. மேலும் கோடை மற்றும் குளிர் காலப் பட்டங்களில் பல பயிர் சுழற்சியில் இவ்வெங்காயத்தைச் சாகுபடி செய்து அதிக இலாபம் பெறலாம். தற்போது சாகுபடியிலிருக்கும் வெங்காய வகைகளுக்குப் பதிலாக, இப்புதிய வகை புகுத்தப்பட்டால், மொத்த உற்பத்தி 20,000 டன் வரை பெருகும் வாய்ப்பு உள்ளது! **அதன் மூலம் தமிழக உழவர்கள் ஆண்டு ஒன்றுக்கு சுமார் இரண்டு கோடி ரூபாய் அதிக ஆதாயம் பெறலாம்.**

## சாகுபடி முறைகள்

| | |
|---|---|
| பயிரின் மொத்த வயது ... | 60 முதல் 70 நாட்கள். |
| பட்டம் ... | ஆண்டு முழுவதும் சாகுபடி செய்யலாம். குறிப்பாக மே-ஜூன் மற்றும் அக்டோபர்-நவம்பர் மாதங்களில் விதைக்க மிகவும் ஏற்றது. |
| மண்வளம் ... | நல்ல வடிகால் வசதியுள்ள தோட்டக்கால் பூமி சிறந்தது. |
| விதை ... | எக்டேருக்கு 1,000 முதல் 1,250 கிலோ வெங்காயம். |
| நிலம் தயாரித்தல் ... | தொழுஉரம் எக்டேருக்கு 12 டன் வீதம் இட்டு, நன்கு பண்படுத்திய நிலத்தில் 2 அடி இடைவெளி கொடுத்துச் சால்கள் அமைக்க வேண்டும். நடவுக்கு முன் அடியுரமாக எக்டேருக்கு 12 கிலோ தழைச்சத்து, 24 கிலோ மணிச்சத்து, 12 கிலோ சாம்பல்சத்து இடவேண்டும். |
| நடவு ... | பாசன நீர்ப்பாய்ச்சி கால்வரப்பின் இருபுறங்களிலும் 3 முதல் 4 அங்குல இடைவெளி கொடுத்து வெங்காயம் நடப்படவேண்டும். |
| நீர்ப்பாசனம் ... | நட்ட 3-ஆம் நாள் உயிர்த்தண்ணீர் பாய்ச்ச வேண்டும். பிறகு அறுவடைக்கு ஒரு வாரம் இருக்கும் தருணம் வரை, 7 முதல் 10 நாட்களுக்கு ஒருமுறை பாசன நீர் அளிக்க வேண்டும். |
| பின்செய் நேர்த்தி ... | நடவு செய்து 15 முதல் 20 நாட்களுக்குள் ஒருமுறை களை எடுக்க வேண்டும். தேவைப்பட்டால் பிறகு களை எடுக்கலாம். நடவு செய்த 30-ஆம் நாள் மேலுரமாக எக்டேருக்கு 12 கிலோ தழைச்சத்து கொடுத்து மண் அணைக்க வேண்டும். |
| பயிர்ப்பாதுகாப்பு ... | நடவு செய்து 15, 30 மற்றும் 45-ஆம் நாள் என மொத்தம் மூன்று முறைகள் 'பாரத்தியான்' அல்லது 'மெட்டாசிஸ்டாக்ஸ்' மருந்துடன் 'டைதேன் 78' கலந்து தெளிக்க வேண்டும், (பாலிடால் 125 மில்லி+500 கிராம் டைதேன் 78—ஐ, 250 லிட்டர் நீரில் கலந்து அல்லது மொட்டசிஸ்டாக்ஸ் 250 மில்லி +500 கிராம் டைதேன் 78—ஐ 250 லிட்டர் நீரில் கலந்து) |
| அறுவடை ... | பயிரின் அறுவடை சமயம் கீழே உள்ள இலைகள் காய்ந்து காணப்படும். அச்சமயம் வெங்காயச் செடிகளைப் பிடுங்கி வெங்காயத்தைச் சேகரித்துக் காயவைத்து பிறகு சேமிக்க வேண்டும். |
| மகசூல் ... | எக்டேருக்கு 8 முதல் 12 டன். |



# மிகுந்த மகசூல் தரும் மிளகாய் ரகம் கே.2

மிளகாயைப் பொறுத்த வரையில் நெடுங்காலமாகத் தமிழ் நாட்டில் 'கே. 1' என்ற ஒரே ஒரு திருந்திய ரகமே சாகுபடிக்குக் கிடைத்து வந்தது. தமிழ் நாட்டின் புகழ்பெற்ற மிளகாய் ரகமான 'சாத்தூர் சம்பா'ரகத்தையும், 'கே. 1' மிளகாய் ரகத்தையும் விட தரத்திலும், குணத்திலும், மகசூல் தருவதிலும் சிறந்த ஒரு ரகத்தைக் கண்டுபிடிப்பதற்காகத் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம் பெரும் முயற்சி செய்து வந்தது. இம் முயற்சியின் காரணமாக, அனைத்து இந்தியஒருங்கிணைந்த காய்கறி மேம்பாட்டுத்திட்டத்தின் கீழ், கோவில்பட்டியில் நடைபெற்ற தீவிர கரு இணைப்புப் பணிகளினால், '10—1' என்ற ஒட்டு வீரிய ரகம் உருவாக்கப்பட்டது. இது, 'பி. 70—எ' என்ற அசாம் நாட்டு மிளகாய் ரகத்தையும், 'சாத்தூர் சம்பா' ரகத்தையும் கரு இணைப்பு செய்து உருவாக்கப்பட்டது ஆகும்.

இந்த ஒட்டு வீரிய ரகத்திற்கு, 'கே—2' (கோவில்பட்டி—2) என்று பெயரிட்டு தமிழ் நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம் வெளியிட்டுள்ளது.



'கே. 2' மிளகாய் ரகம், அதிக மகசூல் தருதல், விரைவில் பலன் அளித்தல், உள்ளூர் நிலைமைக்கும் ஏற்றவாறு இருத்தல் ஆகிய மூன்று குணங்களையும் கொண்டுள்ளது.

'கே. 2' மிளகாய் ரகம் பளபளப்பான சிவந்த பழங்களைக் கொடுப்பதுடன், 'கே. 1' மிளகாய் ரகத்தைவிட 26.7 சதம் அதிக மகசூல் தரவல்லதாகவும் இருக்கிறது. இதன் பழங்கள், உள்ளூர் ரகங்களை விட மிகுந்த காரம் கொண்டதாகவும் உள்ளன. இது 'கே. 1' ரகத்தை விட அதிக அளவில் இலைப் பேன் பூச்சி மற்றும் பழ அழுகல் நோய் ஆகியவற்றின் தாக்குதலைத் தாங்கிக்கொள்ள வல்லது. 'கே. 2' மிளகாய் ரகத்தைப் பயிரிட்டால் எக்டேருக்கு 8 முதல் 10 குவிண்டால் மிளகாய்—அதாவது 'கே. 1' ரகத்தை விட 2குவிண்டால் அதிகமாக—மிளகாய் அறுவடை செய்து ஏறத்தாழ ரூபாய் 1,500 அதிக இலாபம் (ஏக்கருக்கு ரூபாய் 600) பெறலாம். 'கே. 2' மிளகாய் ரகம் பின்கண்ட சிறப்புக் குணங்களை கொண்டுள்ளது.

### கே. 2 மிளகாயின் சிறப்புக் குணங்கள்

1. 'கே. 1' ரகத்தை விட 26.7 சதம் அதிக மகசூல் தரவல்லது. ஏக்கருக்கு 850 கிலோ மிளகாய் வற்றல் மகசூல் கொடுக்கும் ஆற்றல் உள்ளது.

2. பூச்சி மற்றும் நோய்களின் தாக்குதலை அதிகம் தாங்கிக் கொள்ளக்கூடியது.

3. இதன் வயது 210 நாட்களே. 'கே. 1' ரகத்தை விட 10 நாட்கள் முன்னதாகவே பூத்து விடுகிறது.

4. தென் மாவட்டங்களுக்கு மிகவும் ஏற்றது.

5. பூக்கள் உதிர்வதைத் தடுப்பதற்காக''ஆர்மோன்கள் (Hormones) தெளிக்கப்படுவதற்கு ஏற்ப, இந்த ரகம் நன்கு பயனளிக்கும்.

6. உள்ளூர் ரகங்களை விட தரத்தில் சிறந்தது. பளபளப்பான சிவந்த பழங்களைக் கொண்டிருப்பதால் ஏற்றுமதி செய்வதற்கு ஏற்றது!

7. உள்ளூர் ரகங்களை விட அதிக காரம் கொண்டது.

### ஒருமித்த செய் நேர்த்தி முறைகள்

#### பருவம்

(1) ஜூன் முதல் டிசம்பர் வரை.

(2) செப்டம்பர் முதல் ஏப்ரல் வரை.

(3) ஜனவரி முதல் ஜூன் வரை.

#### வயது

இதன் வயது 7 மாதங்கள். 'கே. 1' ரகத்தை விட வயது குறைவானது.

#### விதையளவு

ஒரு ஏக்கர் நடுவதற்கு 500 கிராம் விதை விதைக்க வேண்டும். 500 கிராம் விதையுடன் 1 கிராம் 'அக்ரசான்' மருந்து கலக்கவும்.

#### நாற்றங்கால்

ஒரு ஏக்கர் மிளகாய் பயிரிட ஒரு சென்ட் பரப்பில் நாற்றங்கால் தயாரிக்க வேண்டும். நாற்றங்காலை 3 அல்லது 4 முறை உழுது புழுதியாக்கி, கற்கள், களைகளின் வேர்கள் ஆகியவற்றை அப்புறப்படுத்த வேண்டும். ஒரு சென்ட் நாற்றங்காலுக்கு ஒரு வண்டிமக்கிய தொழு எரு அல்லது கலவை எருவை, கடைசி உழவிற்கு முன் இட்டு மண்ணுடன் நன்கு கலக்கும்படி உழுது விட வேண்டும். பிறகு நாற்றங்காலில் 120 செ.மீ. × 120 செ.மீ. (4 அடி × 4 அடி) அளவுள்ள மேடைப் பாத்திகளை அமைத்துக்கொள்ள வேண்டும். விதைகளைப் பாத்திகளின் மேலே தூவி விதைத்த பிறகு, பொடியாக்கப்பட்ட மக்கிய எரு அல்லது கலவை எருவால் இலேசாக மூடி நீர்த் தெளிக்கவும்.

நாற்றுவிட்ட 25-வது நாள் வரை இலேசாக நீர்ப் பாய்ச்சி வரவும். ஆனால் எக்காரணத்தைக்கொண்டும் நாற்றங்காலில் தண்ணீர் தேங்கக் கூடாது. நாற்றுவிட்ட 40 முதல் 45 நாட்களில் நாற்றுகளைப் பறித்து நட வேண்டும்.

## நிலம் தயாரித்தல்

மிளகாய்ப் பயிரிட விருக்கும் வயலை 4 அல்லது 5 முறை நன்கு உழுது புழுதியாக்கவும். பிறகு வயலில் 2.7 மீட்டர் × 2.7 மீட்டர் (9 அடி × 9 அடி) அளவில் பாத்திகள் அமைக்கவும்.

### அடியுரம்

கடைசி உழவில் ஏக்கருக்கு 20 வண்டி (10 டன்) தொழு எருவையும், 14 கிலோ மணிச் சத்து அளிக்க 87.5 கிலோ சூப்பர் பாஸ்பேட்டையும், 14 கிலோ சாம்பல் சத்து அளிக்க 23 கிலோ மியூரியேட் ஆஃப் பொட்டாஷ் உரத்தையும் இட்டு, மண்ணுடன் நன்கு கலக்கச் செய்ய வேண்டும்.

### நடுதல்

நாற்றுகளைப் பாத்திகளில் 30 சென்டி மீட்டர் × 30 சென்டி மீட்டர் (1 அடி × 1 அடி) இடைவெளியில் நட வேண்டும்.

### மேலுரம்

நாற்று நட்ட 30-வது, 60-வது, 90-வது நாட்களில் ஆக 3 முறை மேலுரம் இட வேண்டும்.

30-வது நாளில் 9 கிலோ தழைச் சத்து அளிக்க, 45 கிலோ அமோனியம் சல்பேட் இட வேண்டும் அல்லது 20 கிலோ யூரியாவை இடவேண்டும்.

60-வது நாளில் 10 கிலோ தழைச் சத்தை அளிக்க, 50 கிலோ அமோனியம் சல்பேட் அல்லது 22 கிலோ யூரியாவை இட வேண்டும்.

90-வது நாளில் 9 கிலோ தழைச் சத்து அளிக்க, 45 கிலோ அமோனியம் சல்பேட் அல்லது 20 கிலோ யூரியாவை இட வேண்டும்.

மேலுரம் இட்டவுடன், மண் அணைத்துத் தண்ணீர் விட வேண்டும்.

### களை எடுத்தல்

தேவையான பொழுது களை எடுக்கவும்.

### நீர்ப்பாசனம்

வாரம் ஒரு முறை அல்லது தேவையான பொழுது நீர்ப் பாய்ச்சவும்.




### பயிர்ப் பாதுகாப்பு

நாற்றங்காலில் வேர் அழுகல் நோய் (Damping off) தோன்றி, நாற்றுகள் மஞ்சள் நிறம் அடைந்து, திடீரென வாடி வதங்கி, இலைகள் உதிர்ந்து இறந்தால், 'டைத்தேன் இஸட்—78' என்ற மருந்துக் கரைசலைத் தெளிக்க வேண்டும்.

'இலைப் பேன்' பூச்சியின் (Thrips) தாக்குதலால், இலைகள் சுருண்டு, செடிகளின் வளர்ச்சி குன்றி காணப்பட்டால், 1 மில்லி லிட்டர் 'ரோகார்' மருந்தை 1 லிட்டர் தண்ணீரில் கலந்து 15 நாட்களுக்கு ஒரு முறை வீதம் தெளிக்கவும்.

செடிகள் மேலிருந்து, கீழ் நோக்கி இறந்து கொண்டு வருதல் மற்றும் பழ அழுகல் நோய் (Dieback and fruit rot) தாக்கினால், 250 கிராம் 'பைட்டலான்' மருந்தை அல்லது 150 கிராம் 'சினெப்' மருந்தை 100 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்கவும்.

சாம்பல் நோய்த் தாக்கினால் (Powdery mildew) ஏதேனும் ஒரு தாமிரப் பூசணக் கொல்லியில் 450 கிராம் எடுத்து 180 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்கவும்.

### அறுவடை

நன்றாக வளர்ச்சி யடைந்து உள்ள பச்சை நிறமுள்ள காய்களாகவோ அல்லது நன்கு பழுத்த பழங்களாகவோ பறிக்கலாம்.

### மகசூல்

ஒரு ஏக்கரில் இருந்து 3,400 கிலோ மிளகாய் பழ மகசூல் அல்லது 850 கிலோ மிளகாய் வற்றல் பெறலாம்.

எனவே, 'கே. 2' மிளகாய் ரகத்தைப் பயிரிட்டுப் பயன் பெறுமாறும், நாட்டிற்குத் தேவைப்படும் அந்நியச் செலாவணியை ஈட்டிட உதவுமாறும் தமிழக உழவர் பெருமக்களை —குறிப்பாக தென் மாவட்ட உழவர் பெருமக்களைக் கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:

தகவல் தொடர்பு நிலையம்,
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம்,
கோயம்புத்தூர்-3.

# மாமல்லபுரத்தில் மாமல்லனுக்குச் சிலை

**முதல்வர் கலைஞர்**

அட்டை சொல்லும் செய்தி.

கடல்மல்லை என்று அழைக்கப்பட்ட இந்த மாமல்லபுரத்தில், பல்லவ மன்னர்களால், மகேந்திரவர்மனால், அவனுடைய மகன் நரசிம்மவர்மனால் இந்தச் சிற்பக் கலை வளர்க்கப்பட்டு, இடைக்காலத்தில் போற்றுவாரின்றி, பாதுகாப்பாரின்றி இங்கேயுள்ள சிலைகள் எல்லாம் அழிந்துவிடுமோ என்று எண்ணிய நோக்கில், அப்போது ஆங்கிலேயர்களுடைய ஆட்சி இங்கே நடைபெற்று, அவர்கள் நம் நாட்டிற்குப் பல கொடுமைகளைச் செய்திருக்கிறார்களென்றாலும், அந்தக் காலத்தில் கர்சன் பிரபு என்ற வெள்ளைக்காரன் சென்னையைப்பரிபாலித்துவந்த போது, இந்த ஊருக்கு வந்து, சிற்பங்களை எல்லாம் காப்பாற்ற வேண்டும் என்ற எண்ணத்தோடு வீழ்ந்து கிடந்த கடற்கரைக்கோவில் பகுதிகளை எல்லாம் ஒன்றாக இணைத்து சீர்செய்தான் என்ற செய்தியை நாம் அறியலாம்.

மகேந்திரவர்மன் வடபுறத்திலிருந்து வந்த புலிகேசியால் ஒருமுறை தோற்கடிக்கப்பட்டு காஞ்சிபுரம் வரை அந்த புலிகேசி வந்தான் என்கிற அளவிற்குத் தமிழக வரலாற்றில் சற்றுத்தாழ்வு நிலை ஏற்பட்டு, அதற்குப் பிறகு மகேந்திரனின் மகன் நரசிம்மவர்மன் இங்கே இருந்துபடை கொண்டுசென்று வாதாபியில் புலிகேசியைக் கொன்று குவித்து, அங்கே காஞ்சிபுரத்து வெற்றித்தூணை நிலைநாட்டிவிட்டு, எதை எடுத்து வந்தான் என்றால் ஒரு சிலையினைத்தான் எடுத்து வந்தான். அந்தச் சிலைதான் முதன் முதலாகத்தமிழகத்திற்கு வந்த கணபதியின் சிலையாகும்.

'வாதாபி கணபதி' என்று இன்று கச்சேரிகளில் எல்லாம் பாடுகிறார்களே, அப்படி வாதாபி கணபதி என்று சொல்லக் காரணமே, அதற்கு முன்பு தமிழகத்தில் பிள்ளையார் சிலைகள் இருந்ததாக யாரும் சொல்லவில்லை. வாதாபியை வென்று அங்கேயிருந்து எடுத்து வந்த சிலைதான் கணபதியின் சிலை.

பல்லவ மன்னனின் தளபதி வாதாபியிலிருந்து சிலை எடுத்து வந்தான் என்கிற அளவிற்கு, சிலைகளில், அந்தக் கலையில், சிற்பத்தில், ஓவியத்தில் மெத்த ஆர்வம் கொண்டவர்களாகத் தமிழகத்து மக்கள் இருந்திருக்கிறார்கள். அப்படிப்பட்ட சூழ்நிலை இடைக்காலத்தில் தோய்ந்து, பிறகு சிற்பக் கலைஞர்கள் சில கோவில்களில் எப்போதாவது வேலைகளைப் பெற்று வந்தார்கள். அதுவும்



சுதை வேலை, செங்கல் வேலை' என்ற அளவில்தான் இருந்தது.

நான் ஐந்தாண்டுகளுக்கு முன்பு ஒருமுறை மாமல்லபுரம் வந்தபோது, இந்தப் பள்ளியில் பயிற்சி பெற்று வந்த மாணவர்கள் என்னிடம் ஒரு முறையீட்டைத் தந்தார்கள். அதில் 'நாங்கள் இங்கே பயிற்சி பெறுகிறோம்; பயிற்சி பெற்று வெளியே போனால், எங்களுக்கு எந்தவேலையும் கிடைப்பதில்லை. நல்ல சிற்பி என்ற புகழ்தான் தங்குகிறதே அல்லாமல், எங்கள் வாழ்வில் இன்பம் தங்கப் போவதில்லை; இதைக் கவனத்தில் கொள்ள வேண்டுமென்று' கேட்டுக் கொண்டார்கள். அந்த முறையீட்டின் ஒவ்வொரு எழுத்தும் இந்த அரசினுடைய நெஞ்சத்தில் பதிந்தும். இந்த அரசுக்கு இயல்பாகவே, அமைந்துள்ள கலையுள்ளமும் சேர்ந்ததுதான், பூம்புகார், வள்ளுவர்கோட்டம், கட்டி முடிக்கப்பட்டுள்ள கட்டபொம்மன் கோட்டை என்பதை உங்களுக்குக்கூறி இன்னும் அது போன்ற காரியங்களில் அரசின் சார்பில் நாம் செய்யவிருக்கிறோம்.

# நக்கீரர் கழக விழா



பொங்கல் விழாவினைத் தமிழ்த்திரு நாளாகக் கொண்டாடக் கற்பித்தவர் யார்?

திருவள்ளுவர் திருநாளைத் தோற்றுவித்தவர் யார்?

இந்த வினாவுக்கு உரியவர் யார் என்று உங்களால் ஊகிக்க முடிகிறதா?

அவர்தான் பேராசிரியர் கா. நமச்சிவாயர் அவர்கள்.

இவர் 1917–ஆம் ஆண்டில் சென்னைப் பல்கலைக் கழகத்தில் தமிழ்க்குழுவின் தலைமைத் தேர்வாளராகவும், 1920 முதல் 1934 வரை அரசினர் தமிழ்க் கல்விக்குழுவின் தலைவராகவும் பணியாற்றினார்.

இவரது அரிய முயற்சியினாலேயே தமிழ்வித்துவான் தேர்வு நிலை உண்டாயிற்று. தமிழ் வித்துவான் பாட அமைப்புக்

## பாராட்டுக்குரிய அரசு தமிழக அரசு

சிற்பிகளுடைய சிறப்பை நான் பல ஆண்டுகாலமாக நன்கறிவேன். இடைக் காலத்தில் இவர்களுடைய நிலைமை மிகவும் தளர்ந்து போனதையும் நான் அறிவேன். இவர்களுடைய பணி காரணமாக முற்காலத்தில் மன்னர்கள் இவர்களை ஆதரித்து வந்தார்கள். நாடு அடிமைப்பட்ட பின்னர், கலைஞர்கள் என்ற நிலை மாறி, கைவினைஞர்கள் என்ற நிலைக்குத் தாழ்த்தப்பட்டார்கள். அப்போது ஜமீன்தார்கள் ஓரளவிற்கு இவர்களுக்கு ஆதரவு தந்துவந்தார்கள். அதற்குப் பிறகு இப்போதுதான் இந்தத் துறையின் மதிப்பை உணர்ந்து இவர்களை உயர்த்துவதற்காகத் -தமிழக அரசு முன்வந்திருக்கிறது. அதை நான் மனமாரப் பாராட்டுகிறேன். நான் அறிந்தவரையில், இந்த மாநிலத்தில் இந்த அரசைப் போல, இந்தக் கலைஞர்களுக்கு, இந்தத் துறையினருக்கு ஆக்கமும், ஊக்கமும் அளித்த அரசு வேறு கிடையாது.

பல ஆண்டுகள் சட்டசபையிலே நான் சொல்லிக் கொண்டே வந்திருக்கிறேன். ஏதோ ஒரு 'இஞ்ச்' நகர்ந்தது. ஆனால் இப்போது அது 'கஜ'க் கணக்கில், 'மீட்டர்' கணக்கில் நீளத் தொடங்கியிருக்கிறது. இதற்கெல்லாம் காரணமாக, கலைஞர் அவர்களுடைய தலைமையில் இயங்குகிற ஆட்சியை மனமாரப் பாராட்ட நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

மறந்துபட்ட வரலாற்றுப் பெருமைகளை எல்லாம், புதைந்துபட்ட வரலாற்றுச் சான்றுகளை எல்லாம் புதுப்பித்து, இப்படித்தான் இருக்க வேண்டுமென்று செயல்படுகிற கலைஞரை எத்தனை பாராட்டினாலும் குறைவே ஆகும்; நிறைவு ஆகாது.

பழம் பூம்புகாரை இலக்கியங்களில் பார்த்து வந்த எங்களுக்கு, இப்படித்தான் இருந்திருக்க வேண்டுமென்று எங்களைப் போன்றவர்கள் கண்டு மகிழத்தக்க வகையில், பூம்புகாரின் பிரதிபிம்பத்தை இனிக் காணலாம் என்ற நிலைக்குக் கொண்டு வந்திருக்கிறார்கள். வள்ளுவன் கோட்டத்தை வகுத்துக் கொண்டிருக்கிறார்கள். ராசாசிக்கு மணி மண்டபத்தை எழுப்பியிருக்கிறார்கள். அதற்கெல்லாம் சிகரம் வைத்தாற்போல் தமிழ்த்தாய்த் திருக்கோவிலை அமைக்க முன்வந்திருக்கிறார்கள் என்றால் நாங்கள் மட்டுமல்ல, தமிழர்கள் அனைவரும் அவர்களுக்கு என்றென்றும் கடமைப்பட்டிருக்கிறோம்.

"பூம்புகார் படைத்த பெருந்தச்சன்" என்ற பட்டத்தைக் கலைஞருக்கு இங்கே வழங்கியிருக்கிறார்கள்; பெருந்தச்சன் என்றால் 'ஆர்கிடெக்ட்' என்று பொருளாகும். அதாவது நிர்மாணிப்பவன் என்று பொருள்படும்; அத்தகைய பட்டத்தை இந்தக் கலைஞர்கள் எல்லாம் சூட்டியிருப்பது, பல பல்கலைக் கழகங்கள் சேர்ந்து கொடுப்பதை விடச் சிறந்தது என்று சொல்ல ஆசைப்படுகிறேன். இப்படிப்பட்ட பாரராட்டிற்கெல்லாம் முற்றிலும் உரியவராக விளங்குகிற கலைஞர் அவர்கள் பலவளமும், நலமும் பல்லாண்டும் பெற்று, நல்லாட்சி நடத்திட ஆண்டவன் அருள்க என்று மனம் மொழி இவைகளால் வாழ்த்துகிறேன் - பாராட்டுகிறேன்."

காரைக்குடிப் பெரியவர்

சா. கணேசன்

[மாமல்லன் சிலை திறப்பு விழாவில்.]

குழுவிலும், தேர்வாளர்க் குழுவிலும் இருந்து இவர் சிறந்த பணிகள் ஆற்றினார்.

மாணவர்களுக்குப் பல நூல்கள் எழுதி வெளியிட்டார். முதல் வகுப்பு முதல் ஒன்பதாம் வகுப்பு வரை பாடப்புத்தகங்கள் எழுதி முதல் முதலாக வழிகாட்டிய அறிஞர்.

இவையன்றி ஆத்திசூடி, வாக்குண்டாம், நல்வழி ஆகிய நூல்களுக்கு உரை எழுதிச் சிறந்த பதிப்பாசிரியராகவும் விளங்கினார்.'

இத்தகு சிறப்புமிக்கத் தமிழறிஞர் நினைவாக ஆண்டுதோறும் இலக்கியக் கூட்டங்களை நடத்தி வருகின்றது, சென்னை நக்கீரர் கழகம். 'பேராசிரியர் கா. நமச்சிவாயர் நினைவுச் சொற்பொழிவுகள்' என்ற வரிசையில் இவ்வாண்டு மார்ச் திங்களில் பத்து இலக்கியச் சொற்பொழிவுக் கூட்டங்கள் சென்னை மாநிலக் கல்லூரியில் நடந்தன.

இவ்வாண்டு புலவர் நிறைநிலை, முதனிலை, தமிழ் முதுகலைத் தேர்வுகளுக்குச் செல்லும் மாணவர்களுக்குரிய முக்கியப் பாடப் பகுதிகளுக்கு விளக்கம் தரும் நோக்கோடு இந்தச் சொற்பொழிவுகள் அமைந்திருந்தன.

முதல்நாள் நடந்த கூட்டத் துவக்கத்தில் சென்னைப் பல்கலைக் கழகத் துணை வேந்தர் திரு. நெ. து. சுந்தரவடிவேலு அவர்களின் திருவுருவப்படம், நாடாளுமன்ற உறுப்பினர் திரு. கா. து. நடராசன் அவர்களால் திறந்து வைக்கப்பெற்றது.

அவ்வமயம், நக்கீரர் கழகச் சார்பில் நடைபெற்று வரும் திருவள்ளுவர் தமிழ்க்கல்லூரி ஆசிரியர்கள் 13 பேர்களுக்கு ரூ. 50 மதிப்புள்ள தமிழ் இலக்கிய நூல்கள் பரிசாக வழங்கப்பெற்றன.

இவையன்றி, சிலப்பதிகார ஆராய்ச்சிச் சிறப்புச் சொற்பொழிவுகளும்சனவரித்திங்களில் ஆறுநாட்கள் நடைபெற்றன. இச் சிறப்புச் சொற்பொழிவு விழாவினைத் தமிழ்நாடு அரசு செய்தி-மக்கள் தொடர்புத்துறை துணை இயக்குநர் (மக்கள் தொடர்பு) திரு. எஸ். கருணானந்தம் அவர்கள் தொடங்கி வைத்தார். திரு. 'சிலம்பொலி' செல்லப்பன் அவர்களின் இவ்விலக்கியச் சொற்பொழிவு தமிழார்வமிக்கவர்களுக்கும்' குறிப்பாகத் தமிழ் முதுகலைப் பட்டப் படிப்பிற்குப் பயிலும் மாணவர்களுக்கும் பயனூட்டுவதாக அமைந்திருந்தது.

இத்தொடக்க விழாவில், 'திருக்குறள்-நீதி இலக்கியம்' என்ற நூலுக்குச் சாகித்திய அகாதமி பரிசு பெற்ற பேராசிரியர் திரு. க. த. திருநாவுக்கரசு அவர்களையும், 'திருவாசகம்' பற்றி எழுதி 'டாக்டர்' பட்டம் பெற்ற திருமதி இந்திரா சோமசுந்தரம் அவர்களையும் கழகம் புத்தாடை வழங்கிச் சிறப்பித்ததை இங்குக் குறிப்பிட வேண்டும். தமிழ்நாடு அரசு செய்தி—மக்கள் தொடர்புத் துறைத் துணை இயக்குநர் (செய்தி) திரு. டாக்டர். ஔவை நடராசன் அவர்கள் பரிசு, பட்டம் பெற்றவர்களைப் பாராட்டிப் பேசினார்.

தளரா உள்ளத்துடன் தமிழ்ப் பணியாற்றி வரும் நக்கீரர் கழகச் செயலாளர் திரு. சிறுவை மோகனசுந்தரம் அவர்களை நாம் பாராட்ட வேண்டும்.

— பி. வி. ஜி.


தந்தி :— ''கோ ஆப் பாங்கு'' தொலைபேசி : 4189

**திருச்சிராப்பள்ளி மாவட்ட கூட்டுறவு மத்திய பாங்கு, திருச்சி-2.**

பெருந்தலைவர் : கே. எம். பெரியசாமி, துணைப் பெருந்தலைவர் : என். பாலன், பி.ஏ., பி. எல்.,

**கிளைகள் :** 1. கரூர், 2. அரியலூர், 3. துறையூர், 4. மணப்பாறை, 5. லால்குடி, 6. பெரம்பலூர், 7. தில்லைநகர் (திருச்சி), 8. ஜெயங்கொண்டம், 9. குளித்தலை, 10. வேலாயுதம்பாளையம், 11. முசிறி, 12. சின்னதாராபுரம், 13 மண்ணச்சநல்லூர், 14. தொட்டியம், 15. ஸ்ரீரங்கம், 16. திருவரம்பூர், 17. சுப்ரமணியபுரம் (திருச்சி), 18. கரூர் (கிழக்கு) 19. துவரங்குரிச்சி, 20. வையம்பட்டி, 21. ஆண்டிமடம், 22. தாத்தையங்கார்பேட்டை, 23. சித்தலவாய், 24. உப்பிலியபுரம், 25. அரவாக்குரிச்சி, 26. செந்துரை, 27. திருமானூர், 28. அரும்பாவூர்.

| | | |
|---|---|---|
| அங்கீகரிக்கப்பட்ட பங்கு மூலதனம் | 100.25 | இலட்சங்கள் |
| செலுத்தப்பட்ட பங்கு மூலதனம் | 85.56 | |
| அலுவலல் நிதிகள் | 1,035.65 | |
| டிபாசிட்டுகள் | 565.43 | |

**தவணை வைப்புகளின் வட்டி விகிதங்கள் :**

| | |
|---|---|
| 61 மாதங்களும் அதற்கு மேலும் .. | ரூ. 10.50 % |
| 36 மாதங்கள் முதல் 61 மாதங்களுக்குள் | 9.50 % |
| 12 ,, ,, 36 ,, | 8.50 % |
| 9 ,, ,, 12 ,, | 7.50 % |
| 6 ,, ,, 9 ,, | 6.50 % |
| 91 நாட்கள் முதல் 6 மாதங்களுக்குள் | 6.00 % |

வாடிக்கையாளர்களின் தேவைக்கேற்ப மாதாந்திர வட்டியும் வழங்கப்படும்.

**கால இட்டு வைப்புகள் :**

| | | |
|---|---|---|
| 46 நாட்கள் முதல் 91 நாட்களுக்குள் | 4.00 % | |
| 15 நாட்கள் முதல் 46 நாட்களுக்குள் | 3.50 % | |
| சேமிப்புக் கணக்கு | 6.00 % | |
| நடப்புக் கணக்கு | 0.50 % | |
| பாதுகாப்பு வைப்பு | 10.00 % | (கூட்டு வட்டி) |
| மாதாந்திர வைப்பு | 8.00 முதல் 10.00 % | வரை |

எங்கள் வங்கியிலும் அருகாமையிலுள்ள எங்கள் வங்கி கிளைகளிலும், முதலீடு செய்து உச்ச அளவு பயன் அடையுங்கள்.

இ. தனராஜ், எம்.ஏ.,
இணைப்பதிவாளர், தலைமை நிர்வாக அதிகாரி.

வே. முருகேசன், பி.ஏ.,
செயலாளர்.

# இந்தியன் ஓவர்சீஸ் பாங்கிலிருந்து இப்போது

## விவசாயிகளுக்கும் ஓர் விசேஷ சலுகை!

## முதன்மை அடிப்படையில்

# விவசாய டிராக்டர்கள்

## (இதுவரை வழங்கப்பட்ட கார்கள், ஸ்கூட்டர்கள் தவிர)*

இப்போது–உங்களுக்கு விருப்பமான டிராக்டரை முதன்மை அடிப்படையில் பெற ஓர் வாய்ப்பு! நீங்கள் செய்ய வேண்டியதெல்லாம் இவ்வளவே. வெளிநாட்டிலிருக்கும் உங்களுடைய உறவினரை இந்தியாவிலுள்ள ஐஓபியின் எந்தக் கிளையிலாவது 'நான்-ரெஸிடென்ட் எக்ஸ்டர்னல் கணக்கைத் துவக்கச் சொல்லுங்கள். பின்னர், அவரை டிராக்டர், கார் அல்லது ஸ்கூட்டர் விலை + 10% மதிப்பீட்டை உங்கள் பெயரில் ஒரு கணக்கிற்கு மாற்ற அங்கீகரிக்கச் சொல்லுங்கள். (இந்தக் கணக்கு இயக்க முடியாதது; மாற்றமுடியாதது.)



உங்களுடைய உறவினரும் பல வகைகளில் பயனடையலாம். அவைகளில் சில:

- 23 சதவிகிதமோ அதற்கு மேலோ எங்களுடைய மறுமுதலீட்டுத் திட்டமூலமாக வட்டி—வரி விலக்குடன்.
- எந்தக் கட்டுப்பாடுமில்லாமல் மொத்தத் தொகையும், வட்டியும் வெளிதேச கரன்சியில் திரும்பிப்பெற வசதி.
- சேமிப்புத் தொகையிலிருந்து விருப்பப்படி இந்தியாவினுள் செலவு செய்ய வசதி.

விபரங்களுக்கு உங்களுக்காக உதவக் காத்திருக்கும் எங்கள் மானேஜரை அருகிலுள்ள கிளையில் சந்தியுங்கள். அல்லது பிஸினஸ் பிரமோஷன் டிவிஷன் இந்தியன் ஓவர்சீஸ் பாங்க், 151, மவுண்ட் ரோட், சென்னை-600002 என்ற முகவரிக்கு எழுதுங்கள்:

**இந்தியன் ஓவர்சீஸ் பாங்க்**

உங்கள் வளர்ச்சிக்கோர் உத்தம நண்பன்

HT/IOB/8063

*இப்பொழுது சிமெண்ட்டும் முதன்மை அடிப்படையில் வழங்கப்படுகிறது.

# கிராமக் கைத் தொழில்கள் வளர....



சி. என். கிருஷ்ணபாரதி,
மக்கள் தொடர்பு அலுவலர்.

"நம் நாடு வளமிக்க நாடாக இருந்தது. இப்போதும் அவ்வாறே இருக்கிறது. ஆனால் நாம்தான் ஏழைகளாகவே எப்போதும் இருந்து வருகிறோம்" என்று ஒரு பொருளாதார அறிஞர் கூறினார். வளங்கள் பயன்படுத்தப் படாமையால் செல்வம் உருவாக்கப்படவில்லை. நிலம், மலை, கனிகள், ஆறுகள் என்பன மட்டும் நமது வளங்களன்று. ஆண்டுதோறும் பெருகி வரும் மனித சக்தி தான் அளவிட முடியாத வளமாக இருக்கிறது. அப்பெரும் சக்தியினைச் செல்வமாக்குவது தான் இன்றுள்ள பெரும் பிரச்சினை. இந்தச் சக்தி சரியாகப் பயன்படுத்தப் படாது போனால் செல்வம் உருவாக்காமல் தடுக்கப்படுவது மட்டும் இன்றி, நாட்டின் அமைதியும் நல்வாழ்வுமே பெரிதும் பாதிக்கப்படும்.

இக் கருத்தினைச் செயல்படுத்தும் ஓர் இயக்கமாகத் திகழ்கிறது, தமிழ் நாடு கதர் கிராமத் தொழில் வாரியம். கிராமங்களில் வாழும் மக்களின் முதல் தொழிலான வேளாண்மையுடன், துணைத் தொழில்களாகப் பயன்படுவன கிராமத் தொழில்கள். வேளாண்மைத் துறையிலும் வேலையற்றோருக்கும் பெரும்பாலும் கிராமங்களிலுள்ள செல்வங்களைப் பயன்படுத்தி முதலீடு அதிகமின்றித் துவக்கப்பட்டுள்ள தொழில்களே கிராமத் தொழில்களாகும். கிராமங்கள் பொருளாதாரத் தன்னிறைவு பெறுதல் வேண்டும். அவை பெருமளவில் தம்மிடமுள்ள வளங்களைப் பயன்படுத்தி மக்களின் வாழ்வைச் சீராக்குதல் வேண்டும் என்ற ஒப்பற்ற கொள்கையின் அடிப்படையில் கதர்த் தொழிலைக் காந்தியடிகள் துவக்கினார். வளமையில்லாத வறண்ட ஊரிலும் செல்வத்தை உருவாக்கச் சிக்கனமான குறைந்த சாதனம் இராட்டை என்பது அவர்தம் முடிவு. ஆனால் அவரது கிராம மறுவாழ்வுப் பணி இராட்டையுடன் மட்டுமே நின்று விட வில்லை. கிராமங்களின் இயற்கைச் சூழ்நிலைகளையும், அங்கு உற்பத்தியாகும் மற்றப் பொருள்களையும், வேண்டாமென் ஒதுக்கப்படும் பொருள்களையும் அடிப்படையாகக் கொண்டு பல தொழில்களைத் துவக்க ஊக்கமளித்தார்.

இதனுடன் மற்றொரு மிக முக்கியமான அம்சம் மனிதனது கைவினைத் திறமை. பாலாவியன்ன உடைகளை உற்பத்தி செய்ததாக நம் வரலாறு கூறுகின்றது. கிராமங்களில் வாழும் கொல்லரும், தச்சரும், மண்பாண்டம் வனைவோரும், எண்ணெய்த் தொழில் புரிவோரும், நெசவாளர்களும் நிரம்ப உள்ளனர். இத் திறமைகளுக்கு ஊக்கமின்மையால் அழியும் நிலை வரும். நவீன வளர்ச்சிகளும், மக்களது தேவைகளும் மாறுபடும் காரணத்தால், இக் கைவினைஞர்களின் பணி பயன்படாது போகும் சூழ்நிலை உருவாகி வருகிறது. இதனைத் தடுப்பதும் வாரியத்தின் பணியாக உள்ளது. இவ்வாரியத்தின் முயற்சியுடன் தற்போது கீழ்க்கண்ட கிராமத் தொழில்கள் துவக்கப்பட்டுள்ளன.

1. கதர்- பருத்தி, பட்டு ரகங்கள்

2. தேனீ வளர்ப்பு

3. எண்ணெய்த் தொழில்

4. தோல் பொருள்கள்

5. பனை வெல்லம், பனைப் பொருள்கள் தயாரித்தல்

6. சோப்பு தயாரித்தல்

7. கைகுத்தல் அரிசி தயாரித்தல்

8. பிரம்பு, மூங்கில் தொழில்



# வரியைக் குறைத்திடும் பத்திரமானதொரு முதலீடு பற்றி நீங்கள் கேள்விப்பட்டதுண்டா?

இந்திய அரசு 1975 ஜனவரி 7-ம் தேதியன்று விசேஷ ஆர்டினன்ஸ் ஒன்றை பிறப்பித்தது. இதன்படி, தனியாக, யூனிட்டுகள் மூலம் கிடைக்கும் வருமானத்தில் 2000 ரூபாய் வரையான தொகைக்கு, வருமான வரியிலிருந்து முழு விலக்கு அளிக்கப்படும். யூனிட்டுகள், குறிப்பிடப்பட்டுள்ள இதர முதலீடுகள் ஆகியவை விஷயத்தில் தற்போதிருக்கும் விலக்கு வரம்பான 3,000 ரூபாயைத் தவிர கூடுதலாகக் கிடைக்கும் சலுகை இது.

இந்தப் புதிய வரி விலக்குச் சலுகைப்படி, நீங்கள் ரூ. 23,500 மதிப்பிற்கான யூனிட்டுகளை வைத்திருந்து, அவை மூலம் உறுதியான, சீரான வருமானத்தை அடையலாம். அந்த வருமானத்திற்காக நீங்கள் வருமான வரி செலுத்த வேண்டியதில்லை.

இந்தச் சலுகை, 1975-76 மதிப்பீடு ஆண்டிற்காக, 1-4-74 முதல் 31-3-75 வரையான காலத்திற்கு தாக்கல் செய்யப்படும் வரி ரிடர்ன்கள் விஷயத்தில் பொருந்தும்.

யூனிட்டுகளில் முதலீடு செய்தால் பணம் பத்திரமாக இருக்கும்; சீரான வருமானமும் கிடைக்கும். தவிர, நீங்கள் விரும்பும் எந்நேரத்திலும் யூனிட்டுகளை நீங்கள் யூனிட் ட்ரஸ்ட் ஆஃப் இந்தியாவுக்கு விற்று விடலாம்.

UNIT TRUST OF INDIA

தாமதிக்க நேரமில்லை. யூனிட்டுகளில் முதலீடு செய்யுங்கள் நேரடியாக.



விண்ணப்ப பாரங்கள் கிடைக்குமிடங்கள்.

**யூனிட் ட்ரஸ்ட் ஆஃப் இந்தியா**

- 45, வீர் நாரிமென் ரோட, பம்பாய்-400023
- 8, கவுன்சில் ஹவுஸ் ஸ்ட்ரீட, கல்கத்தா-700001
- ரிசர்வ் பாங்க் பில்டிங், ஃபோர்ட் கிளாஸிஸ், சவத் பீச் ரோட, சென்னை-600001
- ரிசர்வ் பாங்க் பில்டிங், 6, பார்லிமென்ட் ஸ்ட்ரீட், புது தில்லி-110001

davp 74/453

9. சுண்ணும்பு தயாரித்தல்

10. மட்பாண்டங்கள் தயாரித்தல்

11. மர வேலை மற்றும் இரும்புத் தொழில்

12. கையால் செய்யும் காகிதம்

13. பழங்கள் பதப்படுத்தல்

14. பாய் முடைதல்

15. அலுமினியப் பாத்திரங்கள் செய்தல்

16. தீப்பெட்டி செய்தல்

17. சாண எரிவாயுத்திட்டம

இத் தொழில்களை ஊக்குவிக்க வாரியத்தின் நேரடித் தொழில் உற்பத்திக் கூடங்களுடன் தொழில் கூட்டுறவுகளும் ஊக்குவிக்கப்படுகின்றன. ஒவ்வொரு தொழிலிலும் ஈடுபடும் தொழில் வினைஞர்கள் ஊக்கத்துடன் இப் பணிகளில் ஈடுபட்டு வருகின்றனர். அவர்கள் இவ்வாரியத் தொழிற் கூடங்களில் தொழிலை மட்டும் செய்து வருவதில்லை. அவர்கள் பயன்படுத்தி வரும் இயந்திரங்களையும் விஞ்ஞான முறைப்படிச் சீரமைத்துக் கொள்ளுகின்றனர். ''மனித சக்திக்குப் பலனளிக்கும் வகையிலமைந்த விஞ்ஞானத் தொழில் நுட்ப வளர்ச்சியினை எப்போதுமே வரவேற்கிறேன்'' என்ற காந்தியடிகளின் கொள்கைப்படி வினைஞர்கள் பயன்படுத்தும் கருவிகளை இவ் வாரியம் சீரமைத்து வருகிறது. கதர் நூற்பு முறை, எண்ணெய் பிழிதல், மட்பாண்டம் வனைதல் ஆகிய தொழில்களில் பயன்படும் இராட்டை, செக்கு, சக்கரம் போன்ற கருவிகள் மிகச் சீரிய முறையில் முன்னேற்றம் அடைந்து உள்ளன. மின் சக்தியையும், மற்றத் தொழில் நுணுக்கங்களையும் பயன்படுத்தி, உற்பத்தி பெருக்கவும், ஊதியம் உயரவும் தக்க வகையில் இக் கருவிகள் முன்னேற்றம் அடைந்துள்ளன.

அனைத்திந்திய அளவிற்கென அமைந்த கதர்க் குழுவும், மாநில அரசும் அளிக்கும் உதவிகளைப் பெற்று இவ் வாரியம் இத்தொழில்களை ஊக்கி வருகிறது. இவ்வாண்டு சுமார் 2 கோடி ரூபாய் மதிப்புள்ள பருத்தி, பட்டு, கதர்த் துணிகளையும், 10 கோடி ரூபாய் மதிப்புள்ள கிராமத் தொழில் பொருட்களையும் உற்பத்தி செய்துள்ளது. கதர்த் தொழிலில் சுமார் ஐம்பதாயிரம் தொழிலாளர்களும், கிராமத் தொழிலில் மூன்று லட்சம் கைவினைஞர்களும் பணிபுரிந்து பயன் பெறுகின்றனர்.

மாநில அளவில் மேலும் வேலை வாய்ப்பளிக்கும் பணியினைத் தொடர்ந்து செய்து வருவதுடன் நாட்டிலுள்ள கழிவுப் பொருள்களையும் செல்வமாக்கும் பணியில் தற்போது வாரியம் ஈடுபட்டு வருகிறது. காகிதத் தொழிலில் ஒதுக்கப்படும் துணிகள், காகிதக் கழிவுகள் பயன்படுத்தப்படுகின்றன. உண்ணுதற்குப் பயன்படுத்தப்படாத வேம்பு, இலுப்பை, புன்னை போன்றவற்றின் விதைகளிலிருந்து எண்ணெய் உற்பத்தி செய்யப்பட்டு அவை சோப் செய்யப் பயன்படுத்தப்படுகின்றன. அது போன்று இப்போது சாணத்திலிருந்து வெளிப்படும் வாயுவைச் சேகரித்துச் சமையலுக்கும், ஒளியூட்டவும் பயன்படுத்தும் பணியை இவ்வாரியம் கிராமப்புறங்களில் ஊக்கி வருகிறது.

நாட்டு மக்களின் பொருளாதாரச் சீரமைப்பிற்கு இவ் வாரியத்தின் பணி ஒப்பற்றது ஆகும். கிராமங்களில் ஆதரவு அற்ற கைவினைஞர்களுக்குத் தொழிலளித்து ஊக்குவிக்கும் பணி மகத்தானது ஆகும். நாட்டின் எல்லாப் பகுதிகளிலுள்ளவர்களும் இப்பொருள்களைப் பெருமளவில் பயன்படுத்தத் தொடங்கினுல் மேலும் இவ்வினைஞர்களுக்கு வேலை வாய்ப்பளிக்க முடியும். மேலும் இவ் வாரியத்தின் மூலம் உற்பத்தி செய்யப்படும் பொருள்கள் சிறந்தவையாகவும் எவ்விதத் தீங்கும் சமுதாயத்திற்கு அளிக்காத முறையிலும் விளங்கிட எல்லா ஏற்பாடுகளும், கவன முறைகளும் மேற்கொள்ளப் படுகின்றன. கலப்படம் எந்நிலையிலும் இங்கில்லை. நல்ல பண்டங்கள், குறைந்த விலையில் மக்களுக்குக் கிடைக்க வாரியத்தின் அங்காடிகள் மூலம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. இவ்வங்காடிகள் விற்பனை நிலையங்கள் மட்டுமின்றி, கிராமத் தொழில்கள் பற்றித் தெரிந்து கொள்ளவும், அவற்றில் ஈடுபடவும் விரும்புவோர்கள் தகவல் பெறும் நிலையங்களாகவும் திகழ்கின்றன.

விஞ்ஞான வளர்ச்சி, ராக்கெட் வேகத்தில் இயங்கிக் கொண்டிருக்கும் இந்த யுகத்தில் இன்னும் இந்த ஆமை வேகமா? ராக்கெட் யுகம் எல்லாருக்கும் முழு வேலை வாய்ப்பளிக்கும் நிலையை எய்தவில்லையே! மேலும் நாட்டில் பரம்பரையாக நிலவி வரும் கைவினை நுட்பங்களையும் பாதுகாக்க வேண்டிய மாபெரும் பொறுப்பு நமக்கு இருந்து வருகிறது. இவைகளை நோக்கமாகக் கொண்டே இவ்வாரியம் தனது பணிகளைத் தொடர்ந்து செய்து வருகின்றது.

இவ்வாரியத்தின் பணிகள் ஒவ்வொன்றினைப் பற்றியும் விரிவான கட்டுரைகள் இனித் தொடர்ந்து வெளிவரும். இவ் வாரியம் உற்பத்தி செய்யும் அன்றாடத் தேவைப் பொருள்களை அனைவரும் ஆதரிப்பதன் மூலம் நாட்டில் வாழும் பல்லாயிரக்கணக்கான கிராமத்துக் கைவினைஞர்களுக்கு நாம் வாழ்வளிக்கிறோம். நம் நாட்டின் தனிப் பண்புகளுக்கும் மதிப்பு அளிக்கிறோம்.

### மாம்பழச்சாறு ஏற்றுமதி !

வடஆர்க்காடு மாவட்ட கூட்டுறவு விநியோக வர்த்தகச் சங்கத்தின் கீழ் இயங்கும், கூட்டுறவு பழம் பதனிடும் தொழிற்சாலையில் தாயரிக்கப்பட்ட மாம் பழச்சாறு, மாம்பழத் துண்டுகள், அன்னாசிப் பழத்துண்டுகள் ஆகியவை ரஷ்யா, ஆஸ்திரேலியா, அபுதுபாய், போலந்து, ஓமான் ஆகிய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளன. 1971—ஆம் ஆண்டு முதல் 1975 வரையான காலத்தில் 11 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள பழச்சாறும், பழத்துண்டுகளும் ஏற்றுமதியாகி உள்ளன.



# இன்றைய சேமிப்பு நாளைய மகிழ்ச்சி!!



## வளமான நல்வாழ்வுக்கு வழிகாட்டும்

## சிறப்புமிக்க திட்டம் சிறுசேமிப்புத் திட்டம்

### தற்போது அஞ்சலக சேமிப்புகளுக்கு 'அதிக வட்டி' அளிக்கப்படுகிறது.

*சிறு சேமிப்புத் தரும் சிறிய திட்டங்களில் இரண்டு தொடர்வைப்புத் தொகை திட்டமும் (ரெக்கரிங் டெபாசிட் திட்டம்) வளரும் மாதச் சேமிப்புத் திட்டமும் ஆகும்.*

| | மாதம் செலுத்தும் தொகை | 5 ஆண்டு இறுதியில் கிடைப்பது | 10 ஆண்டு இறுதியில் கிடைப்பது |
|---|---|---|---|
| | ரூ | ரூ | ரூ |
| ரெக்கரிங் டிபாசிட் | 5/- | 375/- | . . . |
| | 10/- | 750/- | . . . |
| வளரும் மாதச் சேமிப்பு | 5/- | . . . | 825/- |
| | 10/- | . . . | 1, 650/- |

சலுகைகள்

1. தற்போது 1. 7. 1972 க்கு பிறகு ரெக்கரிங் டிபாசிட் திட்டத்தின் கீழ் கணக்கு துவக்கியவர்கள் எதிர்பாராத விதமாக மரணமடைய நேரிட்டால் 5 ஆண்டு இறுதியில் கிடைக்க வேண்டிய தொகை முழுவதும் உடனடியாக அவர்களது வாரிசுகளுக்குக் கிடைக்கும். இந்தத் தேதிக்கு முன்னதாக ஆரம்பிக்கப்பட்டு இன்னமும் நடைமுறையில் இருந்துவரும் ரெக்கரிங் டிபாசிட் கணக்குகளுக்கும் இத்திட்டச்சலுகை கிட்டும். **இந்த ஈட்டுறுதிச் சலுகையை வேறு எந்தச் சேமிப்புத் திட்டமும் அளிப்பதில்லை.** சம்பளப்பட்டியல் மூலம் இத்திட்டத்தில் சேரலாம்.

2. வளரும் மாதச் சேமிப்புத் திட்டத்தின் மூலம் சேமிப்பவர்கள் செலுத்தும் தொகைக்கு ரூ. 20, 000 வரை வரிச் சலுகை உண்டு. இத்திட்டத்திலும் சம்பளப்பட்டியல் மூலம் சேரலாம்.

இப்போது தபால் நிலைய காலவரை வைப்புத் திட்டத்திற்கு 10% வட்டி அளிக்கப்படுகிறது.

உங்கள் குழந்தைகளின் சீர்மிகு வாழ்விற்காகவும்
நாடும் வீடும் வளம் பெறவும்,

''இன்றே ஒரு சேமிப்புக் கணக்கு துவங்குங்கள்''

இயக்குநர்,
சிறு சேமிப்புத் துறை,
அண்ணா சாலை, சென்னை-2.